இதழ் -61 பக்கங்கள் -52 ரூ.50

நூலகம்
25 JAN 2011
நூலகம்

இருக்கிறம்

இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 06 இருக்கை 01 ஒரு பொல்லாப்புமில்லை 25 நவம்பர் 2010

மன்னார் செம்மொழி விழாவும் சொல்லவேண்டிய சங்கதிகளும்!!

உண்மையின் பதிவு

யாழ்ப்பாணம் இன்று!!

"பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக நிகழ்ச்சி செய்யக் காத்திருக்கிறேன்"

M.C. லோகா



வினைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின் ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து செயற்படும் ஒரு உயரிய அமைப்பே "இலங்கை ஆசிய நிலையம்" உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொதுமக்கள் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.

The Asia Foundation



நியாயமான, சுதந்திரமான நீடித்து நிலைத்திருக்கும் உலகம். இதற்குத்தான் அபிவிருத்திக் கூட்டுறவுக்கான மனிதநேய நிறுவனம் **HIVOS** பங்களிக்க விரும்புகிறது. சகல பிரஜைகளும் அதாவது ஆண்களும், பெண்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் சம அளவில் அடையக்கூடியதான ஒரு உலகிற்காக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து **HIVOS** பாடுபடுகிறது.

மனிதநேயப் பெறுமானங்களினால் வழிநடத்தப்படும் **HIVOS**, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கிறது. இம் மக்களது சூழ்நிலைகளின் நீண்டகால அபிவிருத்திக்காகவும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவும் இது பாடுபடுகிறது.

இருப்பு

நாலாம்

"திரைகடலோடியும் இருப்பிடம் தேடு"

இருத்தும்

காத்திருக்கின்றோம்

போரும் வாழ்வும் மாறி மாறிப் புரட்டிய எங்கள் வரலாற்றின் பக்கங்கள் இன்று வடுக்களாய்ச் சிதைந்து கொண்டிருக்கின்றன. அகதி வாழ்வென்பது எம்மைப் பொறுத்தவரையில் தொடர்கதையாய் நீண்டு கொண்டே செல்கின்றது. இன்னும் இருப்பிடங்களைத் தொலைத்து ஓடிக்கொண்டிருக்கிறோம். கடல், வான், தரை என எல்லைகளைக் கடந்து நாங்கள் அகதிகளாய் வியாபித்திருக்கின்றோம். சிதைக்கப்பட்ட எங்கள் வாழ்வைத்தவிர மற்றவை எல்லாமே மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. பழையவை மறைந்து புதியவை புதிதாக முளைக்கத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் மரநிழல்களும், வெட்டை வெளிகளும், செந்நீர் சிந்திய நிலங்களும் எங்கள் அவலவாழ்வை நினைத்து இன்னமும் கண்ணீர் சிந்திக் கொண்டுதான் இருக்கின்றன.

உயிர் தப்பி, இருப்பிடம் தேடி எம்மவர்கள் செல்லும் கடல் பயணங்கள் ஆபத்து மிகுந்தவையாக இருக்கின்றன. தொடரும் இழப்புக்களால் அவர்களின் உயிர்கள் சுமக்கும் ரணங்கள் வேதனைமிக்க கதைகளைக் கூறி நிற்கின்றன. எங்கள் அவலவாழ்வு அலைக் கழிந்து கொண்டிருக்கிறது. தீர்வென்பதே இன்று தீர்க்கமற்ற முடிவாய் திசைமாறியிருக்கின்றது. பூட்டிய அறைகளுக்குள்ளும், மூடப்பட்ட வேலிகளுக்குள்ளும் இருப்பைத் தொலைத்து அடிமைகளாகிப்போன எங்கள் வாழ்வு நரகவேதனையாய் நகர்ந்து கொண்டிருக்க, எங்கள் நிலமோ அவர்களுக்கு அடிமையாகிக்கொண்டிருக்கிறது. எதை? எப்படி? எங்கு? தொடங்குவதென்று தெரியாமல் கையறு அற்ற நிலையில் கைகளைப் பிசைந்துகொண்டு நிற்கின்றோம். எங்களைச் சினமூட்டி அவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள்.

நாட்டின் எந்தவொரு பகுதியும் எல்லா இனத்தவர்களுக்கும் சொந்தமாம். எவரும் எங்கும் சென்று குடியேறலாமாம். அதிகாரத்திலுள்ளவர்கள் சொல்கிறார்கள். எங்கள் நிலத்தில், எங்கள் காணியில் நீங்கள் அத்துமீறி குடியேறுவதுதான் உங்கள் ஜனநாயகமா?

நாங்கள் பலமிழந்துவிட்டோம் என்று யார் சொன்னது? இல்லையில்லை. இப்பொழுதுதான் தைரியமடைந்து நிற்கிறோம். எங்களுக்காய் எவரும் போராடத் தேவையில்லை. நீங்கள் வந்தால்தான் உங்களுக்கு உண்மை நிலை புரியும். மதிப்பிற்குரிய கனவான்களே, வாருங்கள் எங்கள் நிலத்தில் உங்களை வரவேற்கக் 'காத்திருக்கின்றோம்'
பாதுகாப்புக்கென்று உங்கள் அரசபடைகள் நிற்பதுதான்.....??

அனுபுடன்

-ஆசிரியர்-

10-11-2010

வாசகர் கருத்து!

இலங்கை சஞ்சிகை வரலாற்றில் சமூகப் பிரச்சினைகளை வெளியில் கொண்டு வருகின்ற சஞ்சிகை என்று கூறினால் அது 'இருக்கிறம்' சஞ்சிகை மட்டும்தான் என்று உறுதியாகக் கூற முடியும். அந்த வகையில் இடம்பெயர் மக்கள் பற்றித் தனது தொடர்ச்சியான பார்வையினை எம்மிடம் ஒப்பித்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 'இருக்கிறம்' சஞ்சிகையில் வெளிவருகின்ற 'சட்டம்பேசுகிறது' பகுதி மிகவும் சிறப்பானதாக அமைந்துள்ளது. இறுதி இதழில் வெளியான திரைவிமர்சனம் மிகவும் உண்மையான ஒரு விடயத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. இன்னும் பல எதிர்பார்ப்புக் களுடன் அடுத்த இதழுக்காகக் காத்திருக்கின்றேன்.

கா.ரீதம்பிரியன்
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

இன்றைய காலகட்டத்தில் அநேகர் இந்திய சஞ்சிகைகளின் மோகத்தில் விழுந்துள்ளனர். என்னதான் உள்நாட்டில் மிகத் தரமான சஞ்சிகைகள் வெளியானாலும்கூட இந்திய சஞ்சிகை களையே பலர் நாடுகின்றனர். இவ்வாறான காலத்திலும் இந்திய சஞ்சிகைகளின் தரத்திற்கு இணையாக இலங்கையிலிருந்து வெளிவரும் 'இருக்கிறம்' சஞ்சிகையும் கடும் போட்டியில் ஈடுபட்ட வண்ணம் உள்ளது. இதன் வேட்டை மேலும் தொடர்வதில் எனது பிரார்த்தனைகளும் நிச்சயம் இருக்கும்.

இதன் தொடர் வாசகி என்ற வகையில் சொல்கின்றேன். 'இருக்கிறம்' சஞ்சிகையின் நோக்கம் நிறைவேறுவது வெகுதொலைவில் இல்லை. இதன் 'அதற்குத்தக' எனும் பகுதி மற்றும் 'உண்மையின் பதிவு' மிகவும் சிறப்பானதாக அமைந்துள்ளது.

செ.சுதரினி
கொடாஞ்சேனை

60 ஆவது இதழ் வெளியாகிவிட்டது என்ற தகவல் மட்டும்தான் கிடைத்தது. கடைகளில் புத்தகத்தினைக் காணமுடியவில்லை. கடைக்காரரிடம் கேட்டேன். புத்தகம் விற்பனையாகிவிட்டது என்றார். இருந்தும் எனது முயற்சி யின் பலனால் எவ்வாறோ அலைந்து திரிந்து புத்தகத்தை வாங்கிவிட்டேன். நான் இவ்வாறு பிரயத்தனப்பட்டு வாங்கியதன் நோக்கம் சமூகப் பிரச்சினை களையும் அதிரடிக் கட்டுரைகளையும் துணிச்சலுடன் வெளியிட்டு வருவதே. அத்துடன் ஒவ்வொரு இதழும் அதிரடியான மாற்றங் களைத் தாங்கிவருகிறது.

இன்று இலங்கையிலே தரம் மிக்க ஒரு சஞ்சிகையாக 'இருக்கிறம்' வெளிவருவது பெருமையாக இருக்கிறது. இன்று வழமையாக வாங்கும் கடைகளில்கூட விற்றுத்தீர்ந்துவிடும் அளவுக்கு அதன் வளர்ச்சி இருப்பது ஆச்சரியப்பட வைக்கின்றது. துணிச்சல் மிக்க 'இருக்கிறம்' குழுவினருக்கு எனது நன்றியும் பாராட்டுகளும்.

மா. சுதரிசன்
ஆமரிவீதி, கொழும்பு 12

தங்கள் 60 ஆவது இதழ் கிடைக்கப்பெற்றேன். பல புதிய விடயங்களை சேர்த்து மெருகூட்டியுள்ளீர்கள். முக்கியமாக என் அபிமான வசந்தம் அறிவிப்பாளர்களை உங்கள் இதழ்மூலம் காணச்செய்துவிட்டீர்கள். மிக்க நன்றி. 'இருப்பு' தொடங்கி 'ஆசிரியர் தலையங்கம்', 'நேரடி ரிப்போர்ட்' என தொடரும் ஒவ்வொரு ஆக்கமும் சூப்பர். மேலும் வளர வாழ்த்துக்கள்.

எம். அஹம்மட், சாய்ந்தமருது

தங்கள் 60 ஆவது சிறப்பிதழைப் பார்த்தேன். நிறைவைத் தந்தது. தமிழ் சஞ்சிகை வரலாற்றில் 60 இதழ்கள் என்பது உண்மையில் ஒரு சாதனைதான். இன்னும் பல இதழ்களை தந்து வரலாற்றில் தடம் பதிக்க என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

நா. மோகேந்திரன்
பூந்தோட்டம், வவுனியா

கடந்த 'இருக்கிறம்' வாசிக்கக் கிடைத்தது. பல சுவையான அம்சங்கள் காணப்பட்டன. எந்திரன் படத்தில் இவ்வளவு தந்திரமா? இப்போதுதான் விளங்குகிறது. 'சன்னாங்கள் துரத்துகின்றன' சிறுகதை கண்களில் நீர் நிறைத்துவிட்டது. நகைச்சுவைக் கதை. கட்டுரை. சிறுகதை. விளையாட்டு. சட்டம். கலாட்டா. உண்மையின் பதிவு என ஒவ்வொன்றும் சிறப்பாக இருக்கின்றது.

ந. நந்தகோபால்
வாழைச்சேனை, மட்டக்களப்பு

ஒக்டோபர் 20 இல் வெளிவந்த இதழைப் பார்க்க கிடைத்தது. அதிக பக்கங்களுடன் சிறப்பிதழாக வெளியிட்டிருந்தீர்கள். எல்லா விடயங்களுமே நன்றாக இருக்கின்றன. நேரத்துக்கு கிடைக்காமையைத் தவிர.

நா.கலைவாணி
சாவகச்சேரி

'இருக்கிறம்' சஞ்சிகையை நான் நீண்டகாலமாக தொடர்ந்து வாசித்து வருகிறேன். பல தடைகளையும் தாண்டி தற்போது 'இருக்கிறம்' சஞ்சிகை சாதனைகளை படைத்து தொடர்ந்து வெளிவருவதில் இவ் வாசகி பெருமையடைகிறாள். ஒவ்வொரு இதழிலும் புதுப்புது அம்சங்கள், புதுப்படைப்புகள், சமகால நிகழ்வுகள் என்பன வெளிவர வேண்டும் என எதிர்பார்க்கிறேன். விளையாட்டுத் தகவல்கள் இன்னும் அதிகமாக தருவீர்கள் என நம்புகின்றேன். மேலும் அறிவியல் தொடர்பான தகவல்கள், தொழில்நுட்பம் தொடர்பான தகவல்கள் என்பன பாடசாலை மாணவர்களின் அறிவு விருத்திக்கு உதவியளிக்கின்றன. இன்னும் பல விடயங்கள் சிறப்பாக அமைய வேண்டு கின்றேன்.

சுபஸ்ரீதினி ஞானசேகரம்,
கொழும்பு பல்கலைக்கழகம்

ஒரு பொல்லாப்புமில்லை

இருக்கிறம்

மாதம் இருமுறை

இதழ் 61

காத்திருப்பு 06 - இருக்கை 01

ஈழமே மின்னும் ஒருவீட்டு வியாபாரம் வெளியிடுகிறது

#3, டொரிங்டன் அவனியு, கொழும்பு 07.

தொலைபேசி: +94 11 3150836

தொலைநகல் +94 11 2585190

மின்னஞ்சல் irukiram@gmail.com

நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்

ஆசிரியர் : அருளானந்தம் சஞ்ஜீத்

கார்ட்டூன் : சஞ்ஜீத்

வடிவமைப்பு : சி.திவாகரன்

கணனி தட்டச்சு : கு. நிரோஜன்

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.

ஸ்பெஷல் ரிப்போர்ட் - செம்மொழி விழா

மன்னார் செம்மொழி விழாவும்.....பக்கம் - 4

தமிழ் நாடு செம்மொழி விழாவையடுத்து அண்மையில் மன்னார் நகரில் நடத்தப்பட்ட செம்மொழி விழா பற்றிய நிகழ்வின் பதிவும், சொல்லப்படாத சங்கதிகளும். விரிவானகட்டுரை உள்ளே.

ஒரு பேனா பேசுகின்றது - தமிழ் - சிங்கள உறவு

மீண்டும் தொடங்கும் சிங்கள - தமிழ்.....பக்கம் - 42

எழுபது, எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பு தமிழ் சிங்கள உறவுகள் எவ்வாறு இருந்தன? இப்போது அந்த உறவுகள் எவ்வாறு புதுப்பிக்கப்பட்டு வருகின்றன? இந்த உறவுகளுக்கு அப்பால் இருக்கும் விபரீதம் என்ன? அனுபவப் பகிர்வாய் அமைந்திருக்கும் மூத்த பத்திரிகையாளர் கோபுவின் கட்டுரை.

கப்பலோட்டிய தமிழர்கள் - கரைதேடும் உயிர்கள்

தொடரும் கப்பல் பயணங்களும்.....பக்கம் - 44

அண்மையில் மன்னாரிலிருந்து அகதிகளாக சிறிய கப்பலொன்றில் பயணித்த தமிழர்களின் துயரத் தோய்ந்த அந்த நிமிடங்கள். நிமிடத்துக்கு நிமிடம் துடிக்கும் இதயங்களின் வலி கமந்த உண்மைக்கதை.

மலையகப் பார்வை - சீரழியும் மலையக சிறுவர்கள்

பொறுப்பற்ற பெற்றோர்களால்.....பக்கம் - 40

இன்று பெருந்தோட்டப்புறத்தைச் சேர்ந்த சிறுவர்கள் கொழும்பு மற்றும் ஏனைய இடங்களில் வீடுகளில் வேலைக்காக அமர்த்தப்படுகின்றனர். கல்வி நிலை என்பது பாரிய பின்னடைவை நோக்கிக் காணப்படுகின்றது. எதிர்கால மலையக வளர்ச்சி நிலை கல்வி ஒன்றிலேயே தங்கியிருக்கின்ற வேளை அதற்காக பெற்றோர்களும் ஏனையோரும் எவ்வாறான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்பதை விபரிக்கிறது.

உலகத் திரைப்பார்வை - மௌனத்தில் ஒரு காதல்

In the Mood for Love..... பக்கம் - 32

இரு மனங்களுக்கிடையிலான காதல் உணர்வுகளை உணர்வுபூர்வமாக தந்திருக்கின்ற படம் In the Mood for Love. மனைவி வேலையில் பிஸியாக இருப்பதால் தனித்து விடப்பட்ட கணவனும், கணவன் அடிக்கடி வெளிநாடு செல்வதால் தனிமைப்படுத்தப்படும் மனைவியும் சந்தித்துக் கொள்ளும் போது அவர்களது மனதில் தோன்றும் நட்புடன் கூடிய காதல் உணர்வை உயிரோட்டத்துடன் கூறும் ஒரு அழகான காதல் காவியம்...

புலனாய்வுப் பார்வை - மீள் குடியேற்றம்

இன்னொரு போருக்கு தமிழரைத்.....பக்கம் - 20

அபிவிருத்தி என்ற பெயரில் என்ன நடைபெறுகின்றது? மீள்குடியேற்றப்படுவது பாதிக்கப்பட்ட தமிழர்களா? அல்லது அத்துமீறும் சிங்களவர்களா? வெளிவராத தகவல்களை அம்பலமாக்கும் புலனாய்வுக்கட்டுரை.

சட்டம் பேசுகிறது - நிலைக்குமா திருமணம்?

பிரபுதேவா - நயன்தாரா.....பக்கம் - 22

இன்று திரையுலகில் பரவலாக பேசப்பட்டு வரும் நயன்தாரா - பிரபுதேவா திருமணத்தில் சட்டம் எவ்வாறு பேசவேண்டும் என்பதை விரிவாகத் தருகின்றார் பிரபல சட்டத்தரணி விவேகானந்தன்.

ஸ்பெஷல் ரிப்போர்ட் - யாழ்ப்பாணம் போகுற போக்கைப் பாரு...

யாழ்ப்பாணம் இன்று.....பக்கம் - 26

தமிழ் கலாசாரம், பண்பாடு, ஒழுக்கம் என்றால் முதலிடத்தில் இருந்தது யாழ்ப்பாணம்தான். கலைக்கும் கலாசாரத்துக்கும் பேர்போன யாழ்ப்பாணத்தில் இன்று இளம் சமுதாயம் சீரழியும் விதத்தையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் விளக்கும் ஸ்பெஷல் ரிப்போர்ட்...

பொருளாதாரம் - சூழல் விழிப்புணர்வு

புத்தளம் மாவட்டத்தின் இறால்.....பக்கம் - 30

புத்தளம் மாவட்டத்தில் இறால் உற்பத்தியின் இன்றைய நிலையும், அதனால் பாதிப்படையும் சூழலைப்பற்றிய விழிப்புணர்வுக்கட்டுரை.

உண்மையின் பதிவு: முறைகேடு

சட்டத்தை மீறும் பஸ் நடத்துனர்கள்.....பக்கம் - 12

தலைநகரில் சட்டத்தை மதிக்காத பஸ் நடத்துனர்களால் பொதுமக்கள் படும் அவஸ்தைகள் சொல்லிலடங்காதவை. தமிழ் யுவதி ஒருவருக்கு நேர்ந்த அவலமும், துணிந்து அவர் எடுத்த நடவடிக்கையால் கதி கலங்கிய சாரதி மற்றும் நடத்துனர் பற்றிய உண்மைப் பதிவைப் புரட்டுங்கள்.

மன்னார் செம்மொழி விழாவும் சொல்லவேண்டிய சங்கதிகளும்!!

இருபத்தேழு வருடங்களுக்குப் பிறகு முதன் முறையாக மன்னார் தமிழ் செம்மொழி விழாவுக்காக. மன்னார் செல்ல வேண்டி வந்தது

கொழும்பிலிருந்து ஏறக்குறைய 300 கிலோ மீற்றர் தூரம். தனி வாகனத்தில் ஒரு குதூகலப் பயணம் அது. மூத்த படைப்பாளிகளான ஜின்னாஹ் ஷரிபுத்தீன், அந்தனி ஜீவா, அல் அஸுமத், கலைவாதி கலீல், தாஸிம் அகமது மற்றும் சட்டத் தரணியும் இலக்கிய ஆர்வலருமான மர்ஸும் மௌலானா, பத்திரிகையாளர் எம்.ஏ.எம். நிலாம் ஆகியோருடன் நானும் இணைந்து கொண்டேன். அக்டோபர் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெற்ற இவ்விழாவில் மூன்று முழுத் தினங்கள் நாங்கள் கலந்து கொண்டோம். விழாவின் ஆரம்ப தினமான வெள்ளியன்று பிற்பகலில் புறப்பட்ட பயணம் நள்ளிரவு 12.00 மணிக்கு மன்னாரில் முடிந்தது. இதனால் தொடக்க விழாவையும் இசை விழாவையும் நாங்கள் இழந்தோம்.

■ அஷ்ரஃப் சிஹாப்தீன் -

செம்மொழி விழாவாக இதை மன்னார்த் தமிழ்ச் சங்கம் நடத்திய போதும் இவ்விழா ஒரு மாநாட்டின் எல்லையைத் தொட்டு நின்ற அழகைச் சொல்லியாக வேண்டும்.

கலை, கலாசார, பொது நிகழ்வுகள் அனைத்தும் மன்னார் நகர மண்டபத்திலும் ஆய்வரங்கங்கள் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியிலும் நடைபெற்றன. இரண்டாம் நாளிலிருந்து நகர மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்ற அதே வேளை சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் ஆய்வரங்குகளும் நடந்ததால் இங்கு கொஞ்ச நேரம் அங்கு கொஞ்ச நேரம் எனப் பங்கு கொண்டோம். மாலை நிகழ்வுகளில் முழுமையாகக் கலந்து கொள்ளக் கிடைத்தது.

இரண்டாம் நாள் காலை நகர மண்டபத்தில் "மொழியார்வம் நம்மிடையே முழுதாகி நிற்கிறது - முகமிழந்து போகிறது" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. மன்னார்ப் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவியர் இதில் கலந்து கொண்டனர். மன்றத்துக்கு தமிழருவி. த. சிவகுமாரன் தலைமை வகித்தார்.

இதே வேளை 'தமிழின் இலக்கியப் பாரம்பரியம்' என்ற தலைப்பில் நடந்த ஆய்வரங்கில் "தமிழகத்தின் இலக்கிய வேர்கள்" என்ற தலைப்பில் கலாநிதி துரை மனோகரன், 'அனைத்திந்தியாவுடனான முதல் இலக்கிய ஊடாட்டங்கள்' என்ற தலைப்பில் கலாநிதி வ.மகேஸ்வரன், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட என்ற தலைப்பில், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, 'அனைத்திந்தியப் பண்பாட்டுக்கு தமிழின் பங்களிப்பு' எனும் தலைப்பில், சோ.பத்மநாதன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். கலாநிதி அ.சண்முகதாஸ் இவ்வரங்குக்குத் தலைமை வகித்தார். மாலை நாட்டிய விழா இடம் பெற்றது. புஷ்பாஞ்சலி, சிவதரிசனம், குழு நடனம், வண்ண நடனம், கோலாட்டம், கிராமிய நடனம், கிராமிய வசந்தம், மன்னார் செவ்வியல் நடனம், பாங்ரா நடனம், காவடிச் சிந்து, நடன சங்கமம், போன்ற ஆடல், பாடல் நிகழ்வு வர்ணமயமாக அமைந்து மனதைக் கொள்ளை கொண்டது.

மூன்றாம் நாள் காலை "ஆதலினால் தமிழ் மேல் காதல் கொள்வீர்" என்ற தலைப்பில் கவிஞர் அகளங்கன் தலைமையில் கவியரங்கு இடம் பெற்றது. அந்தோனி முத்து, நெலோமி அன்ரனி குரூஸ், மன்னார் அமுதன், வஹீதா அவ்தாத், எஸ். சாந்த குமார், ஆகியோர் கவிதை படித்தனர். தலைமைக் கவிதை நெலோமி, மன்னார் அமுதன், ஆகியோரின் கவிதைகள் ரசிக்கும்படி அமைந்திருந்தன. சித்தி விநாயகர் கல்லூரியில் நடைபெற்ற ஆய்வரங்குக்கு கலாநிதி எம்.ஏ.நுஃமான் தலைமை வகித்தார். தமிழ் "சர்வதேசியத்தை நோக்கி" என்பது ஆய்வரங்கத் தலைப்பு. கலாநிதி கி. விசாக ரூபன் "ஈழத்தில் தமிழ்" எனும் தலைப்பிலும், கலாநிதி செ. யோகராசா "சிங்கப்பூர் முதல் அமெரிக்கா கனடா வரை" என்ற தலைப்பிலும், அருட் கலாநிதி ஜெயசேகரம் "கிறிஸ்தவமும் தமிழ்ப் பண்பாட்டின் அயர்ச்சியும்" என்ற தலைப்பிலும், முதுநிலை விரிவுரையாளர், ரமீஸ் அப்துல்லாஹ் "இஸ்லாம் தந்த தமிழ்" என்ற தலைப்பிலும், விரிவுரையாளர் இரகுபரன் "ஆங்கில வருகையும் தமிழின் நவீனமயமாக்கலும்" எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்தினார்கள்.

மாலை நாடக விழா இடம்பெற்றது. மன்னார் கீரி சிறுவர் கழகத்தின் "முயலார் முயல்கிறார் வெற்றிக்காக" என்ற நாடகம், மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் "ஞானசவுந்தரி" இசை நாடகம், சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவரின் "கோலியம்", "வங்காலை", ஆனாள் ம.மவி மாணாக்கரின் "தர்மத்தின் தீர்ப்பு", முருங்கன் முத்தமிழ் கலா மன்றத்தின் "கல்சுமந்த காவலர்கள்" ஆகிய நாடகங்கள் அரங்கேறின. நாடகங்களைப் பொறுத்தவரை எதுவும் சிலாகித்துச் சொல்லக் கூடிய

வாறு அமைந்திருக்கவில்லை. ஆனால் அவர்களது முயற்சிக்கும் பங்களிப்புக்கும் நன்றி சொல்ல வேண்டும். இறுதி நாளன்று காலை ஆய்வரங்கு மட்டுமே நடை பெற்றது. "மன்னார் மாதோட்ட மக்களின் வாழ்வியலும் கலை இலக்கிய முன்னெடுப்புகளும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற இவ்வாய்வரங்குக்கு முசலி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.டேவிட் தலைமை வகித்தார். "மன்னார் மக்களின் தொன்மையும் வரலாற்றுத் தொடர்ச்சியும்" என்ற தலைப்பில் மு.சுந்தரம் பாண்டியன், "மன்னாரின் கூத்து மரபு" என்ற தலைப்பில் எஸ்.ஏ. உதயன், "மன்னார் மக்களின் வாழ்வியலும் நாட்டார் வழக்காறுகளும்" என்ற தலைப்பில் பெப்பி விக்டர் லம்பேர்ட், "மன்னார் முஸ்லிம்களின் வாழ்வும் பண்பாடும்" என்ற தலைப்பில் கலைவாதி கலீல், "ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத்தில் மன்னார்" என்ற தலைப்பில் றெஜினா சந்தியோகு லோகு ஆகியோர் உரை நிகழ்த்தினர். இவ்வாய்வரங்கில் மு. சுந்தரம் பாண்டியனின் உரை தெளிவானதாகவும் ஆய்வுத் தகவல்களுடனும் கூடியதாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதி நாள் மாலை நிகழ்வுகளில் விருதுகள் வழங்கலும் சிறப்புரைகளும் இடம்பெற்று இரவு 8.30 அளவில் விழா நிறைவுற்றது.

விருந்தினர்களும், வளவாளர்களும், பேராளர்களும், தங்குவதற்கு உணவுடன் கூடியதாக நகரிலிருந்து ஆறு கி.மீற்றர்களுக்கு அப்பால் அமைந்துள்ள ஞானோதயம் என்ற இடத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். பஸ் வண்டி மூலம் அங்கிருந்து விழாவுக்கு அழைத்துச் சென்றார்கள். வேளை தவறாத உணவும் தேநீரும் தயார் செய்திருந்தார்கள். விழா அரங்கு நிறைந்திருந்த போதும் பேராளர்கள் மற்றும் விருந்தினர்கள் வந்தவுடன் தாம் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்து எழுந்து அமரச் செய்த மன்னார் மக்களின் பண்பு மெச்சத் தக்கது. எவ்வளவு சன நெருக்கடியிருந்த போதும் சிற்றுண்டி.பான வகைகளைக் காலடி யில் கொண்டு வந்து தருவதற்கும் அவ்வப் போது நீர்ப் போத்தல்களை வழங்குவதற்கு மென தனியே ஒரு கூட்டமே நின்றிருந்தது. அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டேயிருந்தார்கள். சுருக்கமாகச் சொல்வதாயின் பக்கா ஏற்பாடுகள். வித்துவான் ரஹ்மான், லோறன்ஸ் புலவர், ராஜம் புஷ்பவனம், சுண்டிக்குளிப் புலவர், செபஸ்டியன் குரூஸ் அண்ணாவியார், முகம்மது காசிம் புலவர், கவிஞர் நாவண்ணன், தனி நாயகம் அடிகளார், ஆறுமுக நாவலர், ஏ.எம்.ஏ.அஸீஸ் ஆகியோரின் பெயர்கள் அரங்குகளுக்குச் சூட்டப்பட்டிருந்தன.

குறிப்பாகச் சொல்ல வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன. கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் அவர்களது பேச்சு மிகவும் சிறப்பானது. ஆற்றொழுக்காகவும் தெளிவாகவும் அவர் பேசும்போது சபை கட்டுண்டு கிடந்தது. பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் எந்தவொரு விழாவிலும் பொன்னாடை போர்த்திக் கொள்ளமாட்டார். ஆனால் மன்னார் விழாவில் அவர் அதனை ஏற்றுக்கொண்டார்.

ஒரு விடயம் நடைபெறுவதன் மூலமே பல விடயங்களில் தெளிவு ஏற்படுகிறது. நடைபெறுவது நல்லதாயுமிருக்கலாம். கெட்டதாயுமிருக்கலாம். அந்த அடிப்படையில் எனக்கு ஏற்பட்ட சில புரிதல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் விரும்புகிறேன்.

எதையெடுத்தாலும் பேராசிரியர்களைக் கடவுளர்களாக்கும் ஒரு பண்பு இன்று நம் மத்தியில் வளர்ந்து வருவதாகத் தோன்றுகிறது. இப்படி நான் சொல்வதன் மூலம் அவர்களை நான் குறைத்து மதிப்பிடுவதாக அமையாது. அவர்களுக்கென்று சில போக்குகள் இருக்கின்றன. அவை எந்த அளவு சமூகத்துக்கும், நடைமுறைத் தேவைகளுக்கும் பயன்படுகிறது என்பது குறித்துச் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

முதல் ஆய்வரங்கில் பேசிய இரண்டொரு பேராசிரியர்கள் ஆய்வரங்குக்கான தலைப்புகளைப் பேராசிரியர் சிவத்தம்பி வழங்கியதாகவும் அவர் தமது குரு என்றும் நெகிழ்ந்து உருகி வழிந்தார்கள். பாடசாலை மாணவர்களை மண்டபம் நிறைய அமர்த்தி விட்டு விஜய நகரப் பேரரசு பற்றியும் கல்வெட்டுக்கள் பற்றியும் கங்கை வென்றதும், கடாரம் வென்றதும் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதால் இந்த நவீன உலகை எதிர் கொள்ளும் அவர்களுக்கு என்ன கிடைக்கப் போகிறது என்பது எனக்குப் புரியவில்லை. மாணவர்களது புரிதல்களுக்கு உட்பட்டவாறான உரைகளாகவும் அவை எனக்குத் தோன்றவில்லை. ஒரு சர்வதேச விழாவுக்குரிய ஆய்வரங்கை இந்த விழாவில் நடத்தியது பொருத்தமானதாக எனக்குத் தோன்றவில்லை. இவை கட்டுரை வடிவாக நூலில் வரவிருக்கையில் பேராசிரியர்களதும் மாணாக்கரதும் நேரத்தை வீணடித்ததாகவே எனக்குப்படுகிறது.

கடந்த முப்பது வருடங்களில் நமது இலக்கியம் என்ன செய்தது? அதன் வீழ்ச்சியும் எழுச்சியும் எத்தகைய வடிவினதாக அமைந்திருந்தது? நமது மொழி இன்று எந்த இடத்தில் இருக்கிறது? இலக்கியமும் நாடகமும் இசையும் எந்த இடத்தில் தரித்திருக்கிறது போன்ற தலைப்புக்களை நான் எதிர்பார்த்திருந்தேன். கிடைத்தது பெரிய ஏமாற்றமே. பேராசிரியர்கள் வந்து பேசி விட்டால் எல்லாம் சரியாக அமைந்து விடும் என்ற நிலைப்பாடு குறித்துச் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும். கவியரங்கில் மன்னார் பிரதேசத்தைப் பிரதிநித்துவப்படுத்துவோருக்கே இடமளிக்கப் பட்டிருப்பதாச் சொல்லப் பட்டது. பிரதேசக் கவியரங்குகள் நடைபெறும் போது வெளியிலிருந்து

ஆகக் குறைந் தது இரண்டு கவிஞர்களைச் சேர்த்துக் கொள்வதானது பிரதேசக் கவிஞர்களுக்கு ஓர் உற்சாகத்தை வழங்கும். மேடைக் கவிதைகள் பற்றிய ஒரு நல்ல புரிதலையும் பார்வையாளர்களிடம் நல்ல ரசிப்புத் தன்மையையும் அது உருவாக்கும்.

விருதுகளும் பொன்னாடைகளும் அதிகமாகவும் கல்வியி

யலாளர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டது பாராட்டுக்குரியதுதான். அதேவேளை பிரதேசத்தின் இளைய படைப்பாளிகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எல்லாப் பிரிவினரையும் தமிழ்ச் சங்கம் ஒருங்கிணைத்ததானது ஒரு நல்ல முன்மாதிரியாக இருந்தது.

மன்னாரையொட்டிய மாவட்டங்களில் யாழ் மாவட்டத்தி லிருந்தே அதிகம்பேர் கலந்து கொண்டிருந்தனர். அல்லது அழைக்கப்பட்டிருந்தனர். புத்தளம் மாவட்டத்திலிருந்து பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் ஜவாத் மரைக்கார் அனுராதபுர மாவட்டத்தி லிருந்து அன்பு ஜவஹர்ஷா போன்ற மூத்த எழுத்தாளர்களைக் காணக் கிடைக்கவில்லை. பேராசிரியர் அனஸ் குறித்து நண்பர் கலைவாதி கலீலிடம் வினவியபோது பேராசிரியரை அழைத்த தாகவும் அவர் தனக்கு வர வாய்ப்பில்லை என்று தொலைபேசித்ததாகவும் சொன்னார். மேற்குறித்த மூவரிடமும் தங்கள் வருகையை எதிர் பார்த்தோம் என்று சொன்ன போது தமக்கு இவ்விடயம் சம்பந்தமாக எந்தவித அழைப்போ தகவலோ கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். மன்னாரைச் சேர்ந்த கவாநிதி ஹிஸ்புல்லாஹ் ஆய்வரங்குக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அழைப் பிதழில் அவரது பெயரைக் காணவில்லை. எமக்கே அழைப்பிதழ் இரண்டாம் நாள் அதிகாலையே கிடைத்தது.

ஆய்வரங்கொன்றுக்கு அறிஞர் ஏ.எம்.ஏ.அஸீஸ் அரங்கு என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. ஆனால் அழைப்பிதழிலும் பதாதையிலும் ஏ.சி.எம். அஸீஸ் என்றே அவரது பெயர் இடம் பெற்றிருந்தது. இலங்கைக் கல்விச் சமூகத்துக்கு யாழ்ப்பாணம் தந்த ஒரு பேரறிஞர் அவர். இத்தவறைச் சுட்டிக் காட்டினோம். அறிவிப்புச் செய்த சகோதரரிடம் பெயரைத் திருத்தி வாசிக்கக் கோரினோம். அவர் சரியாக வாசித்தார். கலைவாதி கலீல் தவிர வேறு யாரும் அப்பெயரைச் சரியாகச் சொல்லவில்லை. எல்லோரும் ஏ.சி.எம். அஸீஸ் என்றே குறிப்பிட்டுப் பேசினார்கள். இலங்கையின் ஒரு பிரபல அறிஞரின் பெயரைச் சரியாகச் சொல்லத் தெரியாதவர்கள் தாம் அன்றைய ஆய்வரங்கில் பேசியவர்கள்.

இறுதி நாள் நிகழ்ச்சியின் போது கலைவாதி கலீல் "மூன்று முஸ்லிம்களுடைய பெயரால் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு முஸ்லிம் பெண் கவியரங்கில் கவிதை வாசிக்க அனுமதிக்கப் பட்டிருக்கிறார். நான் ஆய்வரங்கிலும் இங்கும் பேசுகிறேன். முஸ்லிம்களுக்கு அதிக இடம் வழங்கிவிட்டார்கள்" என்று உளறி னார். அங்கு நடந்தது தமிழ்ச் செம்மொழி விழாவே தவிர இட ஒதுக்கீட்டு மாநாடல்ல. முஸ்லிம்களுக்கு இடம் தருவதற்கு முஸ்லிம்கள் ஒன்றும் இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளும் அல்லர். இந்த விழாவை நடத்திய எவரும் இன அடிப்படையில் சிந்திக்கவும் இல்லை. அவ்வாறான நிலையில் இவ்வாறு மத ரீதியாக, இன ரீதியாக உளறுவதும், பிரித்துப் பார்ப்பதும் ஒரு கல்வியாளன் செய்யும் காரியம் அல்ல. முஸ்லிம்களுக்கு இவ்வளவுதான் என்று வழங்குவதற்கு மன்னார்த் தமிழ்ச் சங்கத்துக்குத் தமிழை யாரும் தாரை வார்த்துக் கொடுக்கவில்லை. ஒருவன் தனது தாய்மொழியைப் பேசவும், எழுதவும் உள்ள உரிமை பிறப்போடு வருவது. அதை யாரும் பங்கு பிரித்துக் கொடுக்கத் தேவையில்லை என்பதை நண்பர் கலைவாதி கலீல் போன்றவர்கள் உணர வேண்டும்.

விழாவின் வெற்றியை, எந்நேரமும் நிறைந்த படியிருந்த அரங்குகள் உறுதிப்படுத்தின. சில வேளை நடந்து செல்வதற்குக் கூட நெருக்குப் பட வேண்டியிருந்தது. மற்றொரு விழாவை மன்னார் காண வேண்டுமாக இருந்தால் அரங்கு அகலமாக இருக்க வேண்டும். இந்த விழா மன்னாருக்கு மட்டுமல்ல இந்தத் தேசத்துத் தமிழ் பேசும் அனைத்து நெஞ்சங்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டான விழா. இதன் முழுப் பெருமையும் இதன் மூளையாகவும், முதுகெலும்பாகவும் செயற்பட்ட தமிழ்நேசன் அடிகளாருக்கே உரியது. அவரது எதிர்கால முயற்சிகளுக்கும் தமிழுக்கும் இவ்விழாவானது இன்னும் வலுச்சேர்க்கும் என்று ஒரு பெரும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

மன்னாரில் என்ன விசேஷம் என்று கேட்டால் கழுதை, கருவாடு, என்றுதான் எல்லோரும் சொல்லுவார்கள். இனிமேல் தமிழ்ச் சங்கம் என்று மட்டுமே சொல்ல வேண்டும்●

செய்திச் சிதறல்கள்.

அல்-இஸ்லாஹ் சஞ்சிகை வெளியீடு

தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் வெளியீடான அல்-இஸ்லாஹ் சஞ்சிகை வெளியீட்டு விழா தென்கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் தலைவர் ஏ.எம். அஸ்மம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.எம். எம். இஸ்மாயில் பிரதம அதிதியாகவும் இஸ்லாமிய அரபு பீட பீடாதிபதி எம். எஸ். எம். ஜலால் தீன், கலை, கலாசார பீடாதிபதி எஸ். எம். ஆஷிப், வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி எம்.பி.எம். அம்ஜத், பிரயோக விஞ்ஞானங்கள் பீடாதிபதி கலாநிதி எம். ஐ.எஸ். சபீனா உட்பட ஏனைய விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர். முஸ்லிம் மஜ்லிஸின் தலைவர் ஏ.எம். அஸ்மம் பிரதம அதிதிக்கு முதல் பிரதியை வழங்குவதை படத்தில் காணலாம்.

எஸ்.எம்.எம். றம்ஸான்

போத்தலவுக்கு சர்வதேச விருது!

இலங்கையின் பிரபல ஊடகவியலாளர் போத்தல ஜயந்தவுக்கு ட்ரான்பரன்ஸி இண்டர்நெஷனல் அமைப்பின் நேர்மைக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் பொதுச்செயலாளராக கடமையாற்றி வந்த போத்தல ஜெயந்த கடந்த ஜூன் மாதம் இனம் தெரியாத நபர்களினால் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்திருந்தார். அதன் பின் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தார். இந்நிலையில் போத்தல ஜெயந்தவுக்கு சர்வதேச விருதொன்று வழங்கப்படுகிறது. "இலங்கையின் அரச ஊடகத்தில் பணியாற்றியபோது ஊழல்களுக்கு எதிராகவும் ஊடக சுதந்திரத்திற்காகவும் என்னால் போராட முடிந்தமை குறித்து மகிழ்வடைகின்றேன். ஆனால் அதன் விளைவாகவே நான் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியிருந்தது கவலையளிக்கிறது என போத்தல ஜெயந்த தெரிவித்துள்ளார்.

ஏமாற்றி பணம் வசூலித்து வந்த கும்பல் கைது!

இராணுவத்தால் வட மாகாணத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களின் உறவினர்களை ஏமாற்றி பெரும்தொகைப் பணத்தை மோசடி செய்து வந்த கும்பல் ஒன்று கடந்த வாரம் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொலிஸாரால் கையும் மெய்யுமாக பிடிபட்டது. இராணுவ மேஜரை போல் நடித்து வந்த மோசடிச் சூத்திரதாரி உட்பட நால்வர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இக்குழுவினர் புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் 300 பேரின் உறவினர்களை தலா ஒன்றரை இலட்சம் ரூபாய் பணத்துடன் கண்ணகி புரம் மத்திய கல்லூரிக்கு வரச் சொல்லி இருக்கின்றார்கள். பணத்துடன் வந்தால் கைதான வர்களை கல்லூரியில் வைத்து மீட்டுக் கொண்டு செல்லலாம் என்று சொல்லி இருக்கின்றனர். இதனை நம்பி புலிகள் இயக்க சந்தேக நபர்களின் உறவினர்கள் பெருந்திரளானோர் பணத்துடன் வந்திருந்தனர். ஆனால் தகவல் அறிந்து தயார் நிலையில் வந்திருந்த பொலிஸார் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் இம் மோசடிக் கும்பலை பிடித்து விட்டனர்

கல்முனைப் பிரதேசங்களில் பெருமளவில் மீன்கள்

கல்முனைப் பிரதேசங்களில் மீனவர்களால் பெருமளவில் மீன்கள் பிடிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த சில வாரங்களாக கரைவலை மீனவர்கள் இந்நூ மீன்பிடியால் அதிக வருமானத்தைப் பெற்றுவருவதுடன் சந்தையில் மீன்களின் விலையும் குறைவடைந்திருந்ததைக் காணக்கூடியதாக விருந்தது.

குவைத்தில் ஊசி ஏற்றப்பட்ட மற்றுமொரு இலங்கை பணிப்பெண்

குவைத் சென்று அங்கிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட வீரையா லட்சுமி என்ற மற்றொரு பெண்ணுக்கும் ஊசி ஏற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 38 வயதுடைய இரண்டு குழந்தைகளின் தாய் ஒருவரது உடம்பில் இருந்து ஒன்பது ஊசிகள் அகற்றப் பட்டுள்ளதாகவும் இன்னும் 5 ஊசிகள் அகற்றப்படவுள்ள தாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த சத்திர சிகிச்சைக்கு இரண்டு மணித்தியாலங்கள் எடுத்ததாக குருநாகல் வைத்தியசாலை அத்தியட்சகர், டாக்டர் எஸ். ராஜமந்திரி தெரிவித்தார். மூன்று மாதங்களுக்கு முன்பு குவைத்தில் வைத்து தனது மாதாந்தச் சம்பளத்தைக் கேட்டபோது தன்னை துன்புறுத்தி, சித்திரவதை செய்து, ஊசி ஏற்றியதாக அவர் தெரிவித்துள்ளார். ஊசி போன்ற மெல்லிய கம்பிகளே அவ்வாறு ஏற்றப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவில் சாட்சியம் சொல்பவர்களுக்கு கொலை மிரட்டல்!

இலங்கைக் கடற்படையின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதிகளில் நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளில் சாட்சியங்களைப் பதிவு செய்ய வந்த பலருக்கு ஈ.பி.டி.பி இனரும் கடற்படையினரும் சேர்ந்து கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இக் கொலை மிரட்டல் விடுகைக்கு சில அரசாங்க அதிகாரிகளும் உதவிவருவதாகத் தெரிய வந்துள்ளது. வன்னி இறுதிக் கட்டப் போரில் பாதிக்கப்பட்டு தற்போது தீவுப்பகுதிகளில் குடியேறியுள்ள மக்கள் பலரும் தமது சாட்சியங்களைப் பதிவு செய்ய விரும்பியுள்ள போதிலும், இக்கொலை மிரட்டல்களால் பயந்துபோய் உள்ளனர். இதையடுத்து யாழ்ப்பாணத்தில் சாட்சியமளித்தவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது தீவுப்பகுதியில் சாட்சியமளிப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

இதேவேளை ஆணைக்குழு முன்னிலையில் அளித்த சாட்சியம் ஒன்றைப் படம்பிடித்த பத்திரிகைச் செய்தியாளர் ஒருவருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. சாட்சியம் அளிக்கப்படும் விடயங்கள் ஊடகங்களில் வெளியாகி, பிறரும் அறிந்துகொள்வதைத் தடுக்கும் விதமாகவே செய்தியாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடப்படுகிறது. இந்த அச்சுறுத்தல் குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போது பத்திரிகையாளரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும், எனினும் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஊடகத்துறையிலும் நாமலின் அடாவடித்தனம்

ஊடகத்துறையிலும் தனது ஆதிக்கத்தை செலுத்தும் நாமல் ராஜபக்ச ஏற்கனவே யூத் எப்.எம், ஏ. சீ.என் போன்ற அலைவரிசைகளை நடாத்திவரும் நிருபர் காணாத நிலையில் அரசாங்க தொலைக்காட்சியான ரூபவாஹினி கூட்டுத்தாபன அலைவரிசையிலும் தனக்கு பிரத்தியேகமாக ஒரு அலை வரிசை வேண்டுமென தனது தகப்பனார் மஹிந்தவிடம் கேட்டுள்ளார். தனது மகனின் வேண்டுகோளுக்கு இணங்க ரூபவாஹினி கூட்டுத்தாபன அலை வரிசையில் நாமல் ராஜபக்ஷ விற்கு விசேடமாக ஓர் சனல் வழங்குமாறு ரூபவாஹினி கூட்டுத் தாபன நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவிற்கு அமைய ரூபவாஹினி அதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்து நாமலுக்கு ஓர் விசேட அலைவரிசையை வழங்கியுள்ளது. இந்த அலை வரிசைக்கு இணையோர் அலை வரிசை என்ற பெயரில் நாமல் இராஜபக்ஷவின் அரசியல் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

“அப்பே ரட்ட”

எங்களைச் சுற்றி என்னென்னவோ நடந்து கொண்டு போகின்றன. அவற்றை ஆற, அமர ஆராய்ந்தால்தான் அரசியல் போக்குகளை விளங்கிக் கொள்ளலாம் போலும். வடக்கினை முற்றுகையிடும் சிங்கள டூரிஸ்டுக்களுடன் இன்றைய எமது ஆராய்ச்சி ஆரம்பமாகின்றது. பாதை திறந்தவுடன் தென்பகுதி யிலிருந்து சாரிசாரியாக சென்று வந்தார்கள். சரி, யாழ்ப் பாணம் பார்க்க விரும்புபவர்கள், அங்கு பிஸ்னஸ் தொடங்க நினைப்பவர்கள் போகிறார்கள் என்றுதான் நாம் நினைத்தோம். ஆனால் சமீபத்தில் நாம் கண்ட அனுபவங்களைக் கொண்டு முன்பு மிகவும் வெகுளித் தனமாக நினைத்து விட்டோமோ என்று கருதத் தோன்றுகிறது. அனுபவம் இதுதான்.

சென்ற வாரம், வெள்ளிக்கிழமை விடுமுறை தினம். யாழ்ப்பாணத்துக்கு ஒரு தனியார் வாகனத்தில் நாம் சிலர் கிளம்பினோம். வழியில் அனுராதபுரத்தில் பொலிஸார் எம்மை மறித்து எங்கு போகின்றோம் என விசாரித்துவிட்டு “ஏற்கனவே 5000 வாகனங்கள் இந்த வழியால் யாழ்ப்பாணத்திற்கு போயுள்ளன. இது நீண்ட விடுமுறை காலம் என்பதால் இன்னும் வாகனங் கள் போகும் என்று நம்புகின்றோம். ஆகையால் விபத்துக்கள் நிகழக்கூடும். கவனமாகப் போங்கள்” என்றார்கள். “5000 வாகனங்களா?” என நாம் வாயைப் பிளந்து கொண்டு யாழ்ப்பாணம் சென்றடைந்தோம். அங்கு ஹொரண, காலி என்று பல்வேறு போர்டுகள் போட்டு ஓடித்திரிந்த பஸ் வாகனங்களைக் கண்டுதான் 5000 வாகனங்கள் வெறும் கார்கள் அல்ல என்பதையும் உணர்ந்தோம்.

இப்பொழுது ஏராளமான உல்லாச விடுதிகளும் தங்குமிடங்களும் அங்கு திறக்கப்பட்டிருப்பினும் எங்க ளுக்குத் தங்குவதற்கு ஒரு அறை கிடைக்கவில்லை. “திங்கட்கிழமைக்குப் பிறகு வாருங்கள். எத்தனை அறைகள் வேண்டுமானாலும் தருவோம்” என்றனர் ஹொட்டேல்காரர்கள். கடைசியாக ஒரு இடத்தில் நாம் எப்படியோ ஒண்டிக் கொண்டபோது அங்கும் ஒரு சொகுசு பஸ் வந்திறங்கிவிட்டது. கிட்டத்தட்ட 200 சிங்கள மக்களுக்கு இடம் கொடுக்க வேண்டியதாகப் போக கடைசியில் அவர்கள் தங்கள் பெட்டி படுக்கை களைப் பரப்பி அந்த விடுதியின் ஹோலில் தங்க நேரிட் டது.

அன்று மாலை வேறொரு ரகளையும் யாழ்ப் பாணத்தில் ஏற்பட்டது. யாழ். பொது நூலகத்தைப் பார்வையிடப் போன எங்கள் டூரிஸ்டுக்கள் அது மூடியிருந்ததைக் கண்டு கொதித்துப் போனார்கள். “இது அப்பே ரட்ட. எப்படி நாங்கள் பார்க்க முடியா மல் மூடியிருக்கலாம்” என்று கேட்டுப் போட்ட ரகளை யில் நூலக அலுவலர்கள் கீழ் பிரிவினைத் திறந்து விட வேண்டியதாயிற்று. மேல் பிரிவையும் திற என்று சனம் கூச்சல் போட நல்லவேளை அதற்கு மசியவில்லை அவர்கள். பின்னர் கீழ் பிரிவில் உள்ளே சென்று புத்தகங் களை அங்குமிங்குமாக இறைந்து விட்டு சனம் வெளி யேறி விட்டது. யாழ். மாநகரசபை மேயருக்கு இதைப் பற்றிய அறிக்கை போயிருக்கிறதாம்.

போர் முடிந்து இத்தனை காலமாகி விட்டும் இப்படி ஏராளமாக, எதைப் பார்க்கத்தான் இவர்கள் வருகிறார்களோ என்று யாழ். வாசிகள் முணு முணுத்த படி இருக்கின்றனர். அதற்குப் பதில் கூறுவதானால் இந்தக் கதையில் அந்த “அப்பே ரட்ட” வசனம்தான் முக்கியமானது என்போம். ஒரு பிரதேசத்தை நீங்கள் எதிரியை அடித்து வீழ்த்தி கைப்பற்றினால் அதைப் பற்றி ஒன்றும் செய்யாமல் இருப்பீர்களா? ஒருமுறை வந்து இப்பொழுது அவர்களுடைய கைகளில் இருந்து பறிக்கப்பட்டு உங்களதாகி விட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டு, நாட்டாமையுடன் உலாவி வரமாட் டீர்களா? அதுதான் வடக்கில் நிகழுகின்றது. அங்கு வருகின்ற டூரிஸ்டுக்கள் கைப்பற்றப்பட்ட தங்கள் பிரதேசத்தைப் பார்வையிடத்தான் வருகின்றனர். அங்குள்ள நாகவிகாரையில்தான் கும்பிடவேண்டும், அங்குள்ள கள்ளைத்தான் குடிக்க வேண்டும், அங்குள்ள பனங்காரத்தைக் கொண்டு போய்த் தம் அயலவர் களுக்குக் காட்ட வேண்டும்.

அரசினதும், இராணுவத்தினரினதும் ஆதரவுடன் வாழும் மக்களுக்கு அவற்றின் ஆதிக்கக் கலாசாரமே தொற்றிவிடும். அதற்குப் பிறகு சமூக நீதி, ஒற்றுமை, சமாதானம் என்பன முக்கியமாக இருக்காது.

ஒக்டோபர் மாதக் கடைசியில் வன்னி அகதிகளுக்கென செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்படவிருந்த லாண்ட்மாஸ்டர்களில் அரைவாசி இயந்திரங்கள் அப் பட்டமான முறையில் சிங்கள மக்களின் கைகளில் சேர்க்கப்பட்ட சம்பவம் இன்றைய யதார்த்தத்திலைக் கோடு காட்டியதாக அமைந்தது. வன்னி மக்கள் போரின்போது வன்னியை விட்டு வெளியேறும் வேளையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் முழுசாக நின்ற கிராமங்கள், இப்பொழுது போய்ப் பார்த்தால் இருந்த இடம் தெரியாமல் புல்லு முளைத் திருப்பதாகக் கூறுகின்றனர். மக்களின் வாழ்விடங்க ளெல்லாம் பறிபோகும் எதிர்காலத்தை இது கட்டியம் கூறுகின்றது. இந்த உண்மை தமிழ் மக்களுக்கு மெல்ல மெல்ல உறையத் தொடங்கியிருக்கிறது. இப்படியே போனால் நம்பிக்கையில்லா எதிர்காலம் ஆகிவிடுமே எனக் கவலைப்படுகின்றனர். மாற்று நடவடிக்கை என்னவாக இருக்கலாம் என்று குழம்புகின்றனர். யார் இதற்குத் தலைமை தாங்க முடியும் எனத் தடுமாறு கின்றனர்.

சமீபத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்த சம்பவம். ஒரு முல்லைவாசி தனது வீட்டினைப் பார்க்கப் போயிருக்கின்றார். அங்கு பார்த்தால் வெளியே உழவு இயந்திரம் நிற்பாட்டப்பட்டு வீட்டுக் குள் ஆளரவம் கேட்கின்றது. உள்ளே சென்று பார்த் தால் ஒரு சிங்களக் குழு அங்கு குடியமர்ந்திருக்கின்றது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்து தனது வீட்டில் என்ன செய்கிறீர்கள் என்று கேட்கவே, "அப்படித்தான் செய் வோம். இனி இது எங்களது இடம்" என்று அவர்கள் பதில் சொன்னதாகத் தகவல். இனி என்ன செய்ய.. இரவு வரைக்கும் அங்கு ஒளித்திருந்து விட்டு இரவான தும் அங்கிருந்த வீடு வளவுக்கெல்லாம் தீ மூட்டி அழித்து விட்டு இவர் ஓடி வந்தாராம். வேறு வழி தெரியாது விரக்தி யின் எல்லைக் கோட்டில் நிற்கும் மக்கள் நீதியைத் தங்கள் கையில் இப்படித்தான் எடுப்பார்களோ? அப்படியாக தமிழ் மக்கள் எடுத்தால்...

இனி ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் ஓர் ஒத்துழையாப் போராட்டத்தில்தான் இறங்கவேண்டும் போலிருக்கின்றது. ஒத்துழையாப் போராட்டம் என்றால் என்ன? ஒரு மக்கள் தமக்கு ஒவ்வாத நிர்வாகமும், ஆட்சியும் நடைபெறும் தமது இடங் களில் அந்த நிர்வாகத்தையும் ஆட்சியையும் சுமூகமாக நடைபெற விடாது அதற்கு எந்தவிதமான ஒத் துழைப்பையும் கொடுக்காது இருத்தலாகும். இது ஒவ் வொருவரும் தனிப்பட்ட முறையில் தத்தமது தளங் களில் முன்னெடுக்கும் நடவடிக்கையாகும். இதைச் செய்வதற்கு குறிப்பிடத்தக்க தலைமைத்துவம் எதுவும் தேவையில்லை. ஒருவர் காகத்தைப் பார்க்க வெளிக் கிட, அவரைப் பார்த்துப் பலரும் குவிந்து காகத்தைப் பார்த்துக் கொண்டு நின்ற கதை போல, ஒருவர் செய்ய ஆரம்பிக்க அது தனித்தனியே சேர்ந்து பின்னொரு கூட்டு முயற்சியாகும். கூட்டாகச் செய்யும் அந்த முயற்சியே ஒரு கூட்டுக் கலாசாரமாக மாறும். இந்த ஒத்துழையாமை நடவடிக்கை செய்யப்படாததும் செய்யப்படுவதுமான நடவடிக்கையாக இருக்கலாம். அதாவது ஆங்கிலத்தில் "omissions and commissions"என்று சொல்வார்கள். ஒன்றும் செய்யாம லும், ஒத்துழையாமல் இருக்கலாம். ஏதும் செய்வதன் மூலமும் ஒத்துழைக்காமல் இருக்கலாம். அந்த முல்லைத்தீவு வாசி செய்ததைப் போல.

அந்த முல்லைத்தீவு வாசியின் நடவடிக்கையை நாம் பின்பற்றுவதாக இருந்தால் தமிழ் மக்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களின் எந்த முயற்சியும் அது ஒரு வியாபாரமாக இருக்கலாம். அல்லது ஒரு வயல் வேலையாக இருக்கலாம். அவை இரவோடிரவாக நீக்கு இரையாகுமே! தமிழ் பிரதேசங்களில் வாழும் அல்லது உழைக்கும் எந்த சிங்களவரும் கட்டாயமாக இராணுவத்தினரின் உதவியோடும் பாதுகாப்போடும் தான் இருக்க வேண்டி நேரிடுமே. தமிழ் மக்கள் எவரையும் நம்பி ஆறுதலாக இருக்க முடியாது என்கின்ற அளவுக்கு தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் சிங்கள மக்களுடைய பாதுகாப்புப் பிரச்சினைகள் அதிகரித்துவிடுமே! இதுதான் ஒன்றிணைந்த இலங்கையின் எதிர்காலமோ?



அதற்குத் தக

அஷ்ரஃப் சிஹாபுதீன்
ashroffshihabdeen@gmail.com



மாட்சிமை பொருந்திய சவூதி அரசரின் சமூகத்துக்கு-

எல்லாம் வல்ல இறைவனின் சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாக.

இந்துமா சமுத்திரத்தில் கண்ணீர் வடிவான அழகிய தேசத்திலிருந்து ஓர் ஏழை முஸ்லிம், தங்கள் சமூகத்துக்கு எழுதும் திருமுகமாவது,

நீங்கள் எப்போதும் அமெரிக்காவுடனும் ஏனைய மேலைத்தேய நாடுகளுடனும் மட்டுமே நட்புப் பாராட்டுவதால் இந்தத் தீவு எங்கேயிருக்கிறது என்பதுகூட உங்களுக்குத் தெரிந்திருக்காது. அவர்களைப் பகைத்துக் கொள்வதன் மூலம் தங்களது பதவிக்கே ஆபத்து என்பதால் அவர்கள் காலால் இட்டதைத் தலையால் செய்துகொண்டு, தலை தப்புவதே தம்பிரான் புண்ணியம் என்று வாழ்ந்து வருகிறீர்கள் என்பதை நானும் என்னைப் போன்று உலகளாவிய ரீதியில் லட்சக்கணக்கானோரும் அறிவோர்கள்.

அல்லாஹ் உங்களுக்கும் உங்களது தேசத்துக்கும் அளித்திருக்கும் பேரருளைப் போல் வேறு யாருக்கும், வேறு எந்தத் தேசத்துக்கும் அளித்ததில்லை. நாங்கள் கிணறுகளில் தண்ணீர் எடுக்க, நீங்களோ எண்ணெய் எடுக்கிறீர்கள். எங்களதும் உங்களதும் கண்ணின் மணியான ரஸூலே கரீம் (ஸல்) அவர்களை இறைவன் அந்தப் பூமியிலேயே பிறக்கச் செய்தான், இறக்கச் செய்தான். இறையில்லமான கஃபாவையும் அதே பூமிக்கே வழங்கினான். அரைகுறைப் படிப்பாளியான நான் ஒரு காலத்தில், முஹம்மது நபியை எதற்காக அந்தத் தேசத்தில் பிறக்கவைத்தான் என்று பலமுறை சிந்தித்திருக்கிறேன். சரித்திரத்தை நான் ஆழமாகப் படித்ததில்லை. மனிதர்களைப் படைத்த இறைவனுக்கு தனது நபியை எங்கு பிறக்கச் செய்ய வேண்டும் என்று தெரியாதா என்று சமாதானம் சொல்லிக் கொள்வேன். அறியாமைக் காலத்தில் அந்த நிலத்தில் வாழ்ந்த உங்களது முன்னோர் மிருகங்களுக்கு ஒப்பாக வாழ்ந்திருக்க வேண்டும். மக்காவுக்கு ஹஜ்ஜுக்காகச் சென்றபோது இந்த வினாவுக்கு ஓரளவுதான் எனக்கு விடை கிடைத்தது. சரியான விடையை தங்களது தேசத்

தில் வயிற்றுப் பிழைப்புக்காக வந்த எனது தேசத்தின் சகோதரி ஆரியவதிதான் கொண்டுவந்தாள்.

இந்தத் திருமுகத்தைத் தங்கள் மேலான சமூகத்துக்கு எழுதும் அஜமி அறபிகளின் வழித்தோன்றல்தான் என்று சரித்திரத்தில் ஆங்காங்கே குறிப்புக்கள் இடைக்கின்றன. ஆரியவதி நாட்டுக்குத் திரும்பியபோது அந்தச் சரித்திரக் குறிப்புக்காக நான் வெட்கமும் வேதனையும் அடைந்தேன்.

வறுமையை நீக்கவும், வயிற்றுப் பசிக்காகவுமே மூன்றாம் உலகத்திலிருந்து உங்கள் தேசத்துக்குப் பணிப்பெண்கள் வருகிறார்கள். பணக் கொழுப்பிலும் செல்வச் செழிப்பிலும் திமிர்த்து வாழும் தங்களது தேசத்து ஆண்கள் - பேரன் முதல் பாட்டன் வரை இப்பணிப் பெண்களில் பலருக்கு ஆப்பு அடிப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஆணியும் அடிப்பீர்கள் என்பதை ஆரியவதிதான் உயிர்ச் சாட்சியாக வந்து உணர்த்தியிருக்கிறாள்.

உலகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு பல நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். சிறுபான்மை முஸ்லிம்கள் மட்டுமன்றி எல்லா முஸ்லிம்களுமே பெருமைப்படுவதற்குரிய ஒரு அம்சம் அங்கு உள்ளது. அதுதான் இறையில்லமான கஃபா. அது ஒரு கற்கட்டடம்தான். ஆனால் அதன் ஈர்ப்புச் சக்தியும் அதன் முக்கியத்துவமும்தான் அங்கு வருவதையும் அதைத் தரிசிப்பதையும் ஓர் இறை வணக்கமாக்கியிருக்கிறது. எனவே கண்ணுக்கும் சிந்தைக்கும் தெரியும் தாட்



பரியம் என்னவெனில், உலகத்தில் எந்த இனத்துக்கும் இல்லாத வகையில் சாதி, இனம், குலம், கோத்திரம், நாடு, கண்டம், ஏழை, பணக்காரன் என்ற எந்த வேறுபாடுமின்றி அங்கு தோளோடு தோள் இணைவதாகும். இதனால் உலக முஸ்லிம்களே பெருமைப்படுகிறார்கள். இந்தப் பெருமையின் பெருமிதத்தில் நாங்கள் வாழ்கின்ற போது வியர்வை உலருமுன் கூலியைக் கொடுத்து விடுங்கள் என்று கட்டளையிட்ட முகம்மது நபி பிறந்த மண்ணில் வாழும் உங்கள் மக்கள், எமது ஏழைகளுக்கு ஆணி அடிப்பதும் ஆப்பு அடிப்பதும் எவ்வளவு வெட்கக் கேடானது என்பதை நீங்களும் உங்கள் நாட்டு மக்களும் ஏன் இன்னும் உணரவில்லை?

வேறு இனங்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு தேசத்தில் இரண்டாம் சிறுபான்மையாக வாழும் நாங்கள் இதையிட்டு வெட்கப்படுவதைத் தவிரப் பெருமைப்பட முடியவில்லை. இஸ்லாத்தையும், அதன் சாத்வீகப் பண்புகளையும், சமாதானத்தின் தூதையும் எப்படி அந்நிய இனச் சகோதரர்களுக்கு நாங்கள் எடுத்துச் சொல்வது? எங்களைப் போன்ற அப்பாவிகளையும் அவர்கள் ஆணி அடிக்கும் மனிதர் கூட்டத்தில்தானே சேர்ப்பார்கள் அரசரே!

ஆணியை ஆரியவதி அடித்தாளா? அங்குள்ள எஜமானர் அடித்தாரா? என்பது ஒரு சர்ச்சையாக இருந்த போதும் ஒரு பெண் தனக்குத் தானே 23 ஆணிகளை அடித்துக் கொள்வாளா? என்பதைச் சிந்திக்க வேண்டும். இரண்டு ஆணிகளை அடித்தால் போதும்தானே? ஆனால் வீட்டுப் பணிப் பெண்கள் அங்கு நடத்தப்படும் விதங்களையும் அது பற்றிய செய்திகளையும் படிக்கும் போது மனது சுருண்டு போய் விடுகிறது சக்கரவர்த்தி.

அண்மையில் உம்ராக் கடமைக்காக வந்த ஒரு ஆபிரிக்கச் சிறுமி கற்பழிக்கப்பட்டு மேல்மாடியிலிருந்து தள்ளிவிடப்பட்டாள் என்ற செய்தியைப் படித்தபோது நெஞ்சு விம்மி வெடித்தது. இறைவனின் இல்லத்தில் வணக்கத்துக்காக வந்த ஒரு சிறுமிக்கு இந்தக் கதி ஏற்படுவது நன்றாகவா இருக்கிறது உங்களுக்கு? அறியாமைக் காலத்தில் உங்களது முன்னோர் பெண் குழந்தைகளைக் குழி தோண்டிப் புதைத்தார்கள் என்று வரலாறு சொல்கிறது. அதை இப்போது உங்கள் பரம்பரை, வேறு ஒரு வடிவில் செய்து வருகிறதா? இந்த நிலை தொடருமாக இருந்தால் நாங்கள் எங்களது பெண்களோடு ஹஜ்ஜுக்கு வருவதற்கு முடியுமா?

குற்றம் செய்தால் அறபிக்கு ஒரு நியாமும், அஜமிக்கு ஒரு நியாமும் செய்யப்படுவதாகப் பேசப் படுகிறது. அறபியின் சொல்லுக்கே அங்கு முதலிடம் தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இஸ்லாத்தில் இந்த நீதி எங்கே இருக்கிறது? என்று உங்களைக் கேட்க விரும்புகிறேன். இஸ்லாத்தின் தண்டனைகள் கடுமையானவை, குற்றங்களைக் குறைப்பவை என்று ஒரு பரவலான கருத்து உண்டு. இதை நீங்கள் ஆள்பார்த்துச் செய்வீர்களாயின் சவூதி அரேபியா அறியாமைக் காலத்தை நோக்கி வேகமாக நகர்வதை நீங்கள் தவிர்க்க முடியாது. மனிதர்களிலிருந்து மிருகங்கள் தோன்றுவதையும் நிறுத்த முடியாது.

எல்லா நாடுகளிலும், எல்லா இனத்தினரிடையேயும் இந்தக் குற்றங்கள் நடைபெறவே செய்கின்றன என்ற வாதம் நமக்குப் பொருத்தமானது அல்ல. நாம் நல்லதை எடுத்துச் சொல்லவும், அல்லதைத் தவிர்க்கவும் வேண்டியவர்கள் என்று நபிகளார் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதை ஏற்றுக்கொண்டு நாமே முழு உலகத்துக்கும் நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

மேற்கத்தேய சியோனிசச் சக்திகளின் ஆலோசனைகளுக்குத் தயவுசெய்து காது கொடுக்காதீர்கள். உங்களிடம் உள்ள பொருளைத் திருடும் வரையே அவர்கள் நண்பர்கள். தமது காரியம் முடிந்தால் அம்போ என்று கைவிட்டு விடுவார்கள். பிலிப்பைன்ஸின் மார்க்கோசுக்கும் ஈரானின் ஷா மன்னருக்கும் நடந்த கதி உங்கள் கண்முன்னால் விரிந்து கிடக்கிறது. இக்குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உங்களால் எந்த ஏற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாத பட்சத்தில் ஆகக் குறைந்த அளவில் நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றிருக்கிறது. அதுதான் மக்கா, மதீனா, தபூக் ஆகிய மாநிலங்களைத் தனிநாடாக அறிவித்து விடுவது. சர்வதேச முஸ்லிம்களை கொண்ட ஒரு குழுவால் அப்பிரதேசம் நிர்வகிக்கப்படட்டும். நீங்களும் அதில் ஒருவராயிருந்துப் போகலாம். வருடா வருடம் ஹஜ்ஜுக்காக வரும் முஸ்லிம்கள் மூலம் கிடைக்கும் வருவாயில் பாதியை இறையில்லங்களைப் பரிபாலிப்பதற்கும், மீதியை மேற்கத்தேய நாடுகளின் சூழ்ச்சிகளால் துன்பமுறும் ஏழை முஸ்லிம்களின் நல்வாழ்வுக்காகவும் வழங்க முடியும். இதன் மூலமே ஹஜ் வணக்கத்துக்காக வரும் முஸ்லிம்களாவது பாதுகாப்புப் பெறமுடியும்.

வஸ்ஸலாம்.

சட்டத்தை மீறும் பஸ் நடத்துனர்கள்!!

உண்மையின் பதிவு

■ கலாவர்ஷினி கனகரட்ணம்

பஸ் பயணம் என்பது இன்று எம்மைப் பொறுத்தவரையில் அவசியமான ஒன்றாக மாறிவிட்டது. பல்வேறு போக்குவரத்து தேவைகளுக்கும் இன்று உறுதுணையாக இருப்பது இந்த பஸ்களே. பஸ் கட்டணங்கள் எமது பொருளாதார நிதிக்கு ஓரளவுக்கு முகங்கொடுக்கக்கூடியவாறு இருப்பதால் நாம் அதிகமாக பஸ் பயணங்களையே விரும்புகின்றோம்.

ஆனாலும் எவ்வளவு தூரம் அதன் சௌகரியத்தை அனுபவிக்கின்றோமோ இல்லையோ, எல்லோரும் ஏதோ ஒரு வகையில் இந்த பஸ் பயணங்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம்.

அதுவும் தலைநகரைப் பொறுத்தவரை தினமும் பஸ்களில் நடத்துனர்களுடனும் சாரதியுடனும் மக்கள் சண்டை பிடிப்பதை கண்கூடாகப் பார்த்து வருகின்றோம். பஸ் வண்டியை ஓட்டுவதற்கும் நடத்துவதற்கும் என பல விதிமுறைகள் காணப்பட்டாலும் அவற்றைக் கடைப்பிடிப்பது என்னவோ குறிப்பிட்ட ஒரு சிலர்தான். பயணிகளை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் குறிப்பிட்ட நிறுத்தங்கள் இருக்கும்போதும் தாங்கள் நினைத்த நிறுத்தத்தில் இவர்கள் நிறுத்துவது மக்களுக்கு பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்தி விடுகின்றது. இதனைத் தடுக்க போக்குவரத்துப் பொலிஸார் ஆங்காங்கே நிற்கின்றபோதும் எப்படியோ இவர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு பயணிகளை அள்ளிக்கொண்டு பறந்துவிடுவார்கள் இந்த நடத்துனர்கள். அதுமட்டுமல்ல அநேகமான பஸ்களில் பெல்கூட சரியாக இயங்குவதில்லை. இதனாலும் பயணிகளுக்குப் பிரச்சினைதான்.

அண்மையில் எனது நண்பிக்கு நடந்த ஒரு சம்பவம். அன்று கடும் மழை. நாரஹென்பிட்டியில் இருந்து கோட்டை நோக்கி 103 ஆம் இலக்க பேரூந்தில் பயணித்த அவள் இறங்க வேண்டிய இடம் மருதானை. இறங்கும் இடம் வரவே, பெல்லை அழுத்தியிருக்கின்றாள். துரதிஷ்டவசமாக அது இயங்கவில்லை. ஆனால் இவள் நின்றதோ பின் கதவருகில். பஸ் நடத்துனர் நின்றதோ முன் கதவருகில். இறங்கும் இடம் கடந்து சிறிது தூரத்தில் பஸ் நிறுத்தப்பட்டது. பஸ் நின்ற காரணம் அங்கு நின்ற பயணியை ஏற்றுவதற்கு. அந்தப் பயணியோ முன் கதவில் ஏற நண்பியோ பின் கதவில் இறங்க முற்பட்டிருக்கின்றாள். ஒரு கால் மிதிபலகையிலும் மறுகால் வீதியிலும் இருக்க எதிர்பாராத விதமாக பஸ் புறப்பட ஆரம்பித்தது. நிலை தடுமாறிய நண்பி வீதியில் விழுந்து முழங்கையிலும் தலையிலும் பலத்த அடி. உடனடியாக பஸ்ஸை நிறுத்தி அவளை வந்து பார்த்த நடத்துனர் சாரதியை நோக்கி "ஒன்றுமில்லை பஸ்ஸை எடுங்கள்" என்று மனிதாபிமானமற்று சொல்ல.. ஆத்திரமடைந்த நண்பி நடத்துனரோடும் சாரதியோடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருக்கிறாள். துணிச்சலுடன் தனக்குத் தெரிந்த அரைகுறை சிங்களத்தில் அவள் கத்திய கத்தில் அவ்விடத்தில் கூட்டமும் பெருகிவிட்டது. நிலைமை மோசமாவதை உணர்ந்த பஸ் நடத்துனரும் சாரதியும் "உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள்" எனக் கூறிவிட்டு பஸ்ஸை எடுத்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள். கொழும்பிலுள்ள ஊடகமொன்றில் பணிபுரியும் அவள் உடனடியாக பஸ் இலக்கத்தை குறிப்பெடுத்துக் கொண்டு நேராக மருதானை பொலிஸ் நிலையம் சென்று முறையிட்டிருக்கிறாள்.

மறுநாள் மருதானை பொலிஸ் நிலையத்திலிருந்து அழைப்பு வந்தது. குறிப்பிட்ட அந்த பஸ்ஸை தாம் பிடித்து உள்ளே போட்டிருப்பதாகவும் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு வருமாறும் அழைப்பெடுத்தவர்கள் கூறியுள்ளனர். உடனடியாக தனது தந்தையையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலைத்துக்குச் சென்றாள். இலங்கையில் பொலிஸ் சேவை இவ்வளவு விரைவாக, சிறப்பாக இயங்குகிறதா என மனதுக்குள் வியந்தபடி நானும் கூடவே அவளுடன் சென்றிருந்தேன்.

அங்கு அந்த பஸ்ஸின் சாரதி, நடத்துனர் என இருவரைப்

பிடித்து உட்கார வைத்திருந்தார்கள். நண்பியின் முகம் சுருண்டது. காரணம் சம்பவ தினமிருந்த ஓட்டுனர். நடத்துனர் இருவருமே எஸ் கேப். அன்று புதிதாக பஸ்ஸில் கடமையிலிருந்த இருவருமே அவர்கள். பிறகு சம்பவ தினத்தன்று கடமையிலிருந்த நடத்துனர் மற்றும் ஓட்டுனர் பொலிஸ் நிலையம் வரவழைக்கப்பட்டனர். கூடவே பஸ் உரிமையாளரும் வந்திருந்தார். அப்போதும் அந்தத் திமிர் பிடித்த நடத்துனர் தன் பிழையை ஏற்றுக் கொள்ளவில்லை. பெல் இயங்காவிட்டால் நடத்துனர் பின் கதவருகில் நின்றிருக்க வேண்டும். முன்னால் இறங்குபவரை சாரதி பார்ப்பார்.

ஆனால் பஸ்ஸில் பெல்லும் இயங்கவில்லை ஓட்டுனரையும் காணவில்லை. அங்கும் நண்பி வாக்குவாதப்பட்டாள். பொலிஸாருக்கு நிலைமை புரிந்தது. பிறகு பொலிஸார் நடத்துனரை மிரட்ட, ஆள் சரண்டர். இப்படியே விட்டால் அன்றைய தனது வருமானம் பாழாய்ப் பொய்விடுமோ என அஞ்சிய அந்த பஸ் உரிமையாளர் நிலைமையை முடிவுக்குக் கொண்டுவர விரும்பி நண்பியின் தந்தையிடம் 1000 ரூபாவைக் கொடுத்து நண்பியின் காயங்களுக்கு மருந்து போடுமாறு கூறினார். நல்ல மனம் படைத்த நண்பியின் தந்தையோ அந்தப் பணத்தை வாங்க மறுத்துவிட்டார். "நான் காசு வாங்க வரவில்லை. மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளும்படி உங்களுக்குச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்" என்றார். பின்னர் பொலிஸாரும் பஸ் நடத்துனரையும் சாரதியையும் நன்றாக எச்சரித்துவிட்டு அனுப்பினார்கள்.

இது கொழும்பில் மட்டுமல்ல. பல இடங்களிலும் இப்படியான பிரச்சினைகள் சாதாரணமாக நடந்து வருகின்றன. தாங்கள் இறங்குவதை தெரிவிப்பதற்கான சைகை இல்லாவிட்டால் இறங்க முடியாது. நடத்துனர் பயணிகள் ஏறி இறங்குவதில் அவதானம் எடுக்கவேண்டும். ஆனால் அவர் முன் கதவருகில் சென்று ஓட்டுனருடன் கலாய்த்துக் கொண்டு செல்வார். இது பல்வேறு விபத்துக்களுக்கும் காரணமாக அமைகின்றது. பயணிகளும் கட்டாயமாக பயணிகளுக்கான விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். பஸ்ஸின் பின்பக்க கதவின் வழியாக ஏறி முன்பக்க கதவின் வழியாக இறங்குவதை வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். அத்தோடு இன்று தெருத்தெருவாக நிற்கும் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் பஸ்ஸை நிறுத்தி ஓட்டுனரும் நடத்துனரும் சீருடை அணிந்துள்ளனரா? டிக்கட்டுகள் ஒழுங்காகக் கொடுக்கப்பட்டுள்ளனவா என கண்காணிக்கின்றார்களே! பஸ்ஸினுள் எல்லாம் ஒழுங்காக இயங்குகின்றனவா என ஒரு முறையாவது ஏறிப் பார்த்திருப்பார்களா? இவற்றையும் கவனிக்க வேண்டியது அவர்களின் பொறுப்பல்லவா?

சில பஸ் வண்டிகள் ஒன்றோடு ஒன்று போட்டிக்கு முந்திச் செல்லும். அவ்வாறான வேளைகளில் பயணிகள் பாடு திண்டாட்டம் தான். அப்படி ரேஸ் ஓடும்போது அவர்கள் அடிக்கும் பிரேக்கில் எத்தனையோ பேர் நிலைதடுமாறி ஒருவர் மேல் ஒருவர் ஏறி விழுகின்றனர். இந்த நடத்துனர்கள் ஆடு மாடுகளை இறைச்சிக்காக ஓட்டிச் செல்வதைப் போல் பயணிகளையும் நினைக்கின்றனர் போலும். அப்படியான நேரங்களில் ஏறுவதும் இறங்குவதும் பெண்களைப் பொறுத்தவரையில் நரகவேதனைதான். காரணம் அப்படியான வேளைகளில் பஸ் வண்டி நிறுத்தப்படாமல் மெதுவாக நகர்ந்தபடி (slow motion இல்) ஓடிக்கொண்டிருக்கும். அவர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு செல்வதற்காக பயணிகள் பலிக்கடா ஆக வேண்டிய நிலை.

இதற்கெல்லாம் காரணம் இவர்களைக் கண்காணிப்பதற்கு ஒழுங்கான அதிகாரிகள் இல்லாமையே. போக்குவரத்து பொலிஸார் கூட ஏதோ ஒரு மரத்தடி நிழலில் நின்றுகொண்டு பராக்குப் பார்ப்பார். சிலர் செல்போனில் தொங்கிக்கொண்டு நிற்பர்.

சில நேரம் இவர்களின் கண்களில் பட்டு சாரதிகள் மாட்டிக் கொண்டால்கூட சில தாள்களை கையில் திணித்துவிட்டு எஸ்கேப் ஆகிவிடுவர். இப்படி ஒவ்வொருவரும் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்கிறார்களே தவிர பொதுமக்களின் பிரச்சினைகள் பற்றி சிந்திப்பதில்லை. பொதுமக்கள்கூட தமக்கு ஏன் வீண் வம்பு என்று கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு சும்மா இருந்து விடுகின்றனர். இனிமேலாவது நுகர்வோருக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை பொதுமக்கள் தட்டிக் கேட்க முன்வர வேண்டும். மக்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் பாதுகாப்புத் தரப்பினருக்கும் சட்ட ஒழுங்கை முறையாக நிலைநாட்ட முடியும்●

டொக்டர் எம்.கே. முருகானந்தன்

'இருக்கிறம்' இதழ் தொடர்ச்சியாக வெளிவந்து குறுகிய காலத்திற்குள் 60 ஆவது இதழை எட்டியிருப்பதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். 60 இதழ்களை எட்டுவது வாழ்த்துக்கு உரியதாயினும் என்னைப் பொறுத்தவரையில் ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. காரணம்என்ன? தனது பாதை பற்றிய தெளிவான சிந்தனையும். பரந்த பார்வையும் இளைஞர்களின் அயராத பங்களிப்பும் இருந்ததால்தான் குறுகிய காலத்துள் இவ்வளவு வேகமாகப் பயணிக்க முடிந்திருக்கிறது. ஈழத்து சஞ்சிகை வரலாற்றில் மல்லிகை. ஞானம் தவிர வேறெதுவும் இவ்வாறு நீண்டு வெளிவராத நிலையில் 'இருக்கிறம்' குறுகிய காலத்திற்குள் பெருமைக்குரிய வரலாற்றைப் படைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது. இலக்கியச் சிற்றேடுகள், ஜனரஞ்சக இதழ்கள் என்று வெவ்வேறு திசைகளில் பயணித்த காலம் கரைந்து கொண்டு போகிறது. உயிர்மை, அம்ருதா, தீராநதி போன்றவை வாசகர்களுக்கு சீரியசான விடயங்களையும் எளிமையாகக் கொடுத்து வருகின்றன. ஆனால் 'இருக்கிறம்' அவற்றின் வழியில் கூடப் பயணிக்காது தனிவழியே செல்வது மகிழ்ச்சியளிக்கிறது. எமது நாட்டுச் சூழலுக்கு ஏற்ப எமது வாசகர்களின் சுவைக்கும் தேவைகளுக்கும் ஏற்ற விடயங்களை சுவையாகவும் அழகான வடிவமைப்பிலும் தருவதுதான் அதன் வெற்றியின் ரகசியமாகும். தொடர்ந்து அது எட்ட இருக்கும் உச்சங்களுக்கு என் முற்கூட்டிய வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

வணக்கம் வாசகர்களே!

தாமதத்திற்கு பொறுமை காக்க வேண்டும். இன்று 'இருக்கிறம்' 61 ஆவது இதழில் காலடி எடுத்து வைக்கிறது. வழமைபோலவே வெளியீட்டிலுள்ள தாமதங்கள், பொருளாதாரத் தடைகள் என பல பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து, பகீரத பிரயத்தனத்திற்கு மத்தியில் 'இருக்கிறம்' வெளிவந்திருக்கிறது. இலங்கைத் தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றில் முதன் முதலாக ஒரு மக்கள் சஞ்சிகையாக சமூகப்பிரச்சனைகளைத் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கும் 'இருக்கிறம்', இன்று சமூக எழுச்சி மிக்க மக்கள் சஞ்சிகையாக தலைமிர்ந்து நிற்பது பெருமைப்பட வேண்டியதே.

அதிகரித்து வரும் செலவீனங்கள், விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தலிலுள்ள குறைபாடுகள் என பல்வேறு நெருக்கடிகளுக்குள் நாம் இருந்தாலும், மனதில் துணிவும், நம்பிக்கையும், ஆதரவளிக்கும் வாசக உள்ளங்களும் இருக்கும்வரை தொடர்ந்து மக்கள் குரலாய் 'இருக்கிறம்' முழங்கும்.

விநியோகஸ்தர்கள் மற்றும் விளம்பரதாரர்களுடைய ஆதரவையும் நாம் வேண்டி நிற்பது காலத்தின் தேவையாக இருக்கின்றது. துணிச்சல் மிக்க எழுத்தாளர்களுக்கும், இளம் பத்திரிகையாளர்களுக்கும் 'இருக்கிறம்' களம் கொடுக்கக்காத்து நிற்கிறது. பத்திரிகைத் துறையில் ஆர்வம் உள்ளவர் களும் துணிச்சல் மிக்கவர்களும் எங்களுடன் கை கோர்த்துக் கொள்ளுங்கள்.

எல்லோருக்குமாக நாமும் இருப்போம்.

-ஆசிரியர்-

காற்றாய் வருவேன் 12

மொழிவாணன்

நாம் சந்திப்போம் அந்த நிலவில்!

"அது என்ன வழி கமல்?" அவனை ஆர்வத்தோடு பார்த்தபடியே கேட்டார் இன்ஸ்பெக்டர்.
"எனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் இருக்கிறார். இந்த ஆவிகளை அழிக்கும் விசயத்தில் கைதேர்ந்தவர். அவர் என்னுடைய நெருங்கிய நண்பர். அவர் பெயர் கண்ணன்.
அவரிடம் போய் இந்த விசயத்தை நாம் சொன்னால் அவர் நிச்சயம் எங்களுக்கு உதவி செய்வார்"
"அப்படியானல் நாம் இப்போதே போய் அவரைப் பார்க்க வேண்டும். பார்த்து அவரையும் அழைத்துக் கொண்டு இன்றிரவே ஹப்புத்தளைக்குப் போக வேண்டும்"
என்று படபடப்புடன் சொன்னார் இன்ஸ்பெக்டர்.
"இந்த விசயம் எல்லாம் சீதாவுக்குத் தெரிந்திருப்பதால்
பேயாகிவிட்ட அந்தப் பெண் அவளையும் பழிவாங்கினாலும் வாங்கலாம், இல்லையா இன்ஸ்பெக்டர்?"
கேட்டுவிட்டு,
சீதாவைக் கவலையுடன் பார்த்தான் கமல்.
"ஆமாம் அப்படி நடந்தாலும் நாம்
ஆச்சரியப்படுவதற்கு
இல்லை. இன்னும் பல விபரீதங்கள் நடப்பதற்குள்
பேயாகிவிட்ட அந்தப் பெண்ணை நாம் உடனே அழித்தாக வேண்டும்.
இப்போது எங்கள் முதல் வேலை டாக்டர் கண்ணனை சந்திப்பதுதான்.
அதற்கு முன்பு ஹப்புத்தளையில் இருக்கும் அந்த பங்களாவின்
முகவரியை சீதாவிடம் இருந்து வாங்கிக் கொள்ளுங்கள்"
என்றார் இன்ஸ்பெக்டர்.
"உங்களோட நானும் வருகிறேனே?"
என்று கெஞ்சுவதைப் போல் கேட்டாள் சீதா.
"வேண்டாம்... வேண்டாம்... இந்த நிலையில் நீங்கள் எங்களுடன் வருவது அவ்வளவு நல்லதல்ல. நீங்கள் நன்றாக ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள்"
என்று சொல்லியபடியே, முன்னால் நடந்தார் இன்ஸ்பெக்டர்.
சீதாவிடமிருந்து பங்களாவின் முகவரியை வாங்கிக்கொண்டு, அவளிடமிருந்து விடைபெற்றான் கமல்.
"கமல் எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள். அந்த மல்லிகா பேயாகிவிட்டதால் அவளிடம் நிறைய சக்திகள் இருக்கிறது!"
"நீங்கள் கவலைப்படாதீர்கள் சீதா.
என்னுடைய நண்பன் டாக்டர் கண்ணன்
ஆவிகளை அழிப்பதில் பலே கில்லாடி.
அதனால் எல்லாவற்றையும் அவர்
பார்த்துக்கொள்வார்"
ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே வந்த இருவரும்

நேராக டாக்டர் கண்ணன் வீட்டிற்குச் சென்றார்கள்.
நல்ல வேளை,
அவர்கள் அங்கே செல்லும்போது,
டாக்டர் வீட்டிலேயே இருந்தார்.
இதுவரையில் நடந்த எல்லா சம்பவங்களையும்
அவரிடம் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

எல்லாவற்றையும் அமைதியாகக்
கேட்டுக்கொண்டிருந்த டாக்டர் கண்ணன்
சொன்னார்.
"இது கொஞ்சம் விசித்திரமான ஆவியாக இருக்கிறது.
இந்தப் பெண் ஆவியாக மாறியதற்குக் காரணம்,
பழிவாங்கும் எண்ணம்தான். இதனால்,
சம்பந்தப்பட்டவர்களைப் பழிவாங்கிய பிறகு,
தானாகவே இந்தப் பேய் அழிந்துவிடும் என்று
நினைக்கிறேன்.
இருந்தாலும் சொல்ல முடியாது.
சில ஆவிகள் ஆண் வர்க்கத்தையே பழி வாங்கக்
கிளம்பிவிடும்.
அதனால் அங்கே போய்த்தான் நிலமை எப்படி
இருக்கிறது? என்று பார்க்க வேண்டும்.
நாம் இன்று இரவே அங்கு போவதுதான் நல்லது"
"டொக்டர் அந்த ஆவியினால் சீதாவுக்கு ஏதாவது,
ஆபத்து ஏற்பட வாய்ப்பிருக்கிறதா?"
கரகரத்த குரலில் கேட்டான் கமல்.
"இல்லை அப்படி ஒரு சம்பவம் நடைபெற
வாய்ப்பில்லை என்றுதான் நினைக்கின்றேன்.
ஏனென்றால் அந்த ஆவிக்கு உயிர் கொடுத்திருப்பதே
சீதாதான்.
அதைவிட சீதா அந்தப் பெண்ணின் நெருங்கிய
தோழி வேறு"
"சரி டொக்டர் நாம் இன்னும் சிறிது நேரத்தில் இங்கு
வருவோம்.
ஹப்புத்தளைக்குப் போக வேண்டிய
ஏற்பாடுகளுடன் தயாராக இருங்கள்!"
என்று சொல்லிவிட்டு,
இருவரும் அங்கிருந்து வெளியேறினார்கள்.
★★★

ராஜா ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டபொழுது,

அவன் தன் சுயநினைவை இழந்திருந்தான்.
என்ன நடந்தது என்பதை ராஜாவிடமிருந்து
தெரிந்துகொள்வதற்கு, டாக்டர் வேலன்
எவ்வளவோ முயற்சிசெய்த போதிலும்,
அது கடலில் கரைந்த உப்பாகவே இருந்தது.
இரண்டு நாட்களாக அவனுக்கு நினைவே
வரவில்லை.
அவன் முகத்தில் ஏற்பட்டிருந்த கீறல் காயங்கள்,
கொஞ்சம் காய்ந்துபோய் இருந்தன.
ஆனால் கழுத்தில் ஏற்பட்டிருந்த சிறிய துவாரங்கள்
வழியாக,
கொஞ்சம் கொஞ்சமாக கசிந்து கொண்டிருந்த,
இரத்தத் துளிகளை,
என்ன செய்தும் நிறுத்த முடியவில்லை.
டாக்டர் வேலனும் எவ்வளவோ முயற்சி செய்து
பார்த்தார்.
பலன் என்னவோ பூஜ்ஜியம்தான்.
அவன் உயிர் பிரியும் வரையில் அதை நிறுத்த
முடியாது என்பதைப்போன்ற உள்ளுணர்வு அவருக்கு
ஏற்பட்டிருந்தது.
ராஜாவிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள
முடியாத விசயத்தை குமாரிடமிருந்து தெரிந்து
கொள்வதற்கு,
டாக்டர் வேலனும் இன்ஸ்பெக்டரும்,
எவ்வளவோ முயற்சி செய்தார்கள்.
ஆனால்,
வேறு என்னவோ கதைகளைச் சொல்லி,
அவன் சமாளித்து விட்டான்.
"இன்ஸ்பெக்டர், இவர்களுக்கிடையே ஏதோ,
பயங்கர சம்பவம் நடந்திருக்கிறது.
அந்தச் சம்பவத்திற்கும் இந்த விபத்துக்களுக்கும்,
ஏதோ தொடர்பிருக்க வேண்டும் என்று,
நான் நினைக்கின்றேன்.
ஆனால்,
அது என்னவென்று சொல்வதற்கு குமார்
தயங்குகிறான்.

நீங்கள்தான் இதைப் பற்றி கொஞ்சம்,
விசாரித்துப் பார்க்க வேண்டும்" என்று,
சொன்னார் டாக்டர் வேலன்.
"ஆமாம் டாக்டர். எனக்கு இப்போது,
அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.
இதைப் பற்றி நான் விசாரிக்கிறேன்."
ம்...
டாக்டர் ஒரு புதிய தகவல் கிடைத்திருக்கிறது!"
"என்ன தகவல் இன்ஸ்பெக்டர் அது?"
கொஞ்சம் சிந்தித்தபடியே கேட்டார் டாக்டர்.
"இது சம்பந்தமாக விசாரிப்பதற்கு
கொழும்பிலிருந்து,
இன்ஸ்பெக்டர் ராம்குமாரும்,
ஆவிகளைப் பற்றி ஆராய்சி செய்யும் டாக்டர்,
கண்ணனும் இன்று இரவு இங்கே வருகிறார்களாம்!"
"ஓ... அப்படியா...! வரட்டும்... வரட்டும்...
டாக்டர் கண்ணனை எனக்கு நன்றாகத் தெரியும்.
அவர்கள் இங்கே வந்தால் எங்களுக்கு உதவியாக
இருக்கும்"
என்று மகிழ்ச்சியுடன் சொன்னார் டாக்டர்.
ராஜாவை ஆஸ்பத்திரியில் சேர்த்த மூன்றாம்
நாள்,
இரவு,
11 மணி இருக்கும்.
கட்டிலில் கிடந்த ராஜா,
இலேசாகக் கண்களைத் திறந்து பார்த்தான்.
விழிகளைத் திறந்து பார்த்த அவன்,
எழுந்திருப்பதற்கு முயற்சி செய்தான்.
ஆனால்,
அவன் அருகில் நின்றிருந்த நர்ஸ்,
அவளை அழுத்தியபடியே,
அவனுக்கு நினைவு வந்த தகவலை,
டாக்டருக்குச் சொல்லி அனுப்பினாள்.
அதே நேரம்,
அந்த அறையில் இருந்த ஜன்னல் கதவு,
படாரென்று அடித்துக் கொண்டது.
ராஜா விழிகளை உருட்டிப்
பார்த்தான்.
அந்த ஜன்னலின்
மேலே,
பெரிய
வெளவால்
ஒன்று,
தொங்கிக்
கொண்டிரு
ந்தது●

மர்மம் தொடரும்...

அந்த நேரம் பார்த்து ஏதாவது சத்தம் கேட்டாலோ அரவம் கேட்டாலோ என்ன சத்தம் இந்த நேரம் என்று கடுப்பாகுர்கள் சிலர். சத்தம் இல்லாமல் இருந்தால்தான் யுத்தம் சிறப்பாக இருக்கும் என்பது பொதுவான ஒரு கருத்து.

இதனால்தானோ என்னவோ இரவுநேரம் அதற்கேற்ற இனிய நேரமாக வகுக்கப்பட்டதா என்று தெரியவில்லை. இப்போது விடயம் வேறு. 'அந்த' சமயத்தில் சத்தம் இல்லாமல் இருப்பதை விட மனதுக்குப் பிடித்த மென்மையான இசையை ஒலிக்க விட்டபடியே இயங்கினால் இனிமை மேலும் கூடுதலாக இருக்கும் என்று கூறுகிறது ஒரு ஆய்வு.

சிறப்பான செக்ஸ் உறவுக்கு அருமையான ரம்யமான மெல்லிசை அல்லது மனதுக்குப் பிடித்த நல்ல பாடலை கேட்டபடியே இயங்குவதே என்று அந்த ஆய்வில் கண்டுபிடித்துள்ளனராம்.

அதேசமயம் அந்தப் பாடலோ அல்லது இசையோ இருவருக்கும் பிடித்ததாக இருக்க வேண்டும். யாராவது ஒருவருக்கு மட்டும் பிடித்து மற்றவருக்குப் பிடிக்காமல் போய்விட்டால் மெலடி டிராஜடியாகி விடும் வாய்ப்புள்ளது.

சாதாரண பாடல்களாக இல்லாமல் ரொமான்டிக்கான பாடல்கள் மென்மையான இசை என தேர்வு செய்து அந்த நேரத்தில் சின்ன சப்தத்தில் ஒலிக்க வைக்கலாம். இசையோடு கலந்து செக்ஸ் உறவில் இறங்கும்போது இனிமை பலமடங்கு கூடுமாம்.

இந்த ஆய்வுக்காக சில தம்பதிகளைத் தேர்வு செய்து அவர்களை செக்ஸ் உறவின்போது குறிப்பிட்ட சில பாடல்களைக் கொடுத்து அதை இசைத்தபடியே உறவில் ஈடுபடுமாறு அறிவுறுத்தினர். அவர்கள் கொடுத்த பீட்பேக்கின் அடிப்படையில் இனிய இசை உறவை மேலும் இனிமையாக்குவதாக தெரிவித்துள்ளனர்.

பெண் வெளிநாட்டு வேலைக்குப் போவது

கமலா: என்ன வள்ளி.. நல்லாப் பிந்திட்டுது. இண்டைக்கு வேலைக்கு வரமாட்டாய் எண்டு நினைச்சன்.

வள்ளி: அம்மா உங்ககிட்டை ஒரு விசயம் சொல்லணும். நான் வெளிநாட்டு வேலைக்குப் போக யோசிக்கிறன். அதுதான் ஒரு ஏஜன்டை பார்க்கப் போனனான்..

கமலா: ஏன் அப்படி யோசிக்கிறாய் வள்ளி?

வள்ளி: வெளிநாட்டிலை நல்ல சம்பளம் தாறாங்களாம். ஒரு 2 வருசம் வேலை செஞ்சா கொஞ்சக் காசு சேத்துப் போடலாம்.

கமலா: உண்மைதான். அப்ப அப்பிடி போறதுதான் எண்டு முடிவு செய்ததால சில முக்கியமான விசயங்களை நீ அறிஞ்சிருக்க வேணும்.

வள்ளி: அது என்ன விசயங்கள் அம்மா?

கமலா: புறப்பட முதல் பாதுகாப்பா ஒரு இன்சூரன்ஸ் எடுக்க வேணும். தற்செயலா அங்கை உனக்கு விபத்தினாலோ அல்லது ஏதும் நோயினாலோ வேலை செய்ய முடியாமல் போனால் அல்லது மரணம் ஏற்பட்டால் உன்டை குடும்பத்துக்கு ஏதுவாக கிடைக்குமெல்லே..?

வள்ளி: அப்பிடியா அம்மா? அது எப்படி எடுக்கிறதெண்டு சொல்லித் தாறீங்களா அம்மா?

கமலா: ஓம் இந்த விபரங்களை நான் உனக்குத் தாறன் அதோடை நீ என்ன வேலைக்குப் போறாய்? எங்கை போறாய்? எண்ட விபரங்களை எல்லாம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலை போய் பதியவேணும்.

வள்ளி: ஏனம்மா ஏஜன்டிட்டை எல்லா விபரமும் இருக்கும்தானே...?

கமலா: இந்த பணியகத்தில பதிய வேண்டும் எண்டு சட்டம் இருக்கு. அதோடை ஏஜன்ட் ஏஜன்சியை மூடிக்கொண்டு போனால் பிறகு அவரைக் கண்டுபிடிக்க ஏலாது. அதோடை இந்த தகவல்களை எல்லாம் உன்ட வீட்டுக்காரர்கிட்டையும் நெருங்கிய சொந்தக்காரர்கிட்டையும் குடுத்து வைக்க வேணும்.

வள்ளி: ஓம் அம்மா. கட்டாயம் அப்படிச் செய்யிறன்.

கமலா: அதோடை உன்டை பாஸ்போட் கொப்பிகளையும் வீட்டுக்காரரிட்டை குடுக்க வேணும். கட்டாயம் ஒரு பாங்க் எக்கவுண்ட் துறந்து வெளியிலை இருந்து அனுப்பிற காசை அதிலை போட வேணும். சொந்தக்காரரிட்டை அனுப்பக்கூடாது. அவையளுக்கு குடுக்கிறது என்றால் நீ பாங்கில இருந்து எடுத்துக் குடுக்கலாம்.

வள்ளி: ஓம் அம்மா. அதுதான் நல்லது.

கமலா: இதிலை ஆக முக்கியமான விசயம் என்னண்டால். உன்டை பிள்ளையளை பொறுப்பான, நம்பிக்கையான ஆக்களிட்டை விட்டுட்டுப் போகணும். உனக்குத் தெரியும் தானே பல விதங்களிலையும் பிள்ளைகளை இம்சைப்படுத்திற ஆக்கள் இருக்கினம்.

வள்ளி: ஆமா.. அதுகளை பத்திரமா என்டை அம்மாட்டைத்தான் விட்டுட்டுப் போவன்.

கமலா: வள்ளி... இதையும் நீ கேள்விப்பட்டிருப்பாய். பொம்பிளையள் வேலைக்கு வெளியில போறதாலை பல குடும்பங்களிலை கணவன் மனைவிக்கிடையிலை பிரிவு ஏற்படுகுது. இதுகளை அறிஞ்சு அப்படி உன்டை குடும்பத்திலை ஏற்படாமல் நீ பார்த்துக் கொள்ளவேணும்.

வள்ளி: ஆமாம்மா. எனக்குத் தெரிஞ்ச குடும்பங்களிலையே இப்படி நடந்திருக்கு.

கமலா: போற இடங்களிலையும் கஷ்டங்கள் வரக்கூடும் வள்ளி.. உன்னைப்போல வேலைக்குப் போறவையை கொடுமைப் படுத்துறதும் ஆம்பிளையள் பலாத்காரம் செய்யிறதும் எண்டு கன கதையள் கேள்விப் பட்டிருக்கிறம். போற இடத்திலை கவனமா இருக்கவேணும்.

வள்ளி: ஆமாம்மா... நல்லா யோசிச்சுத்தான் இதைப்பத்தி முடிவு எடுக்கவேணும்.

கமலா: ஓம் வள்ளி... யோசிச்சு முடிவு செய்●

மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத்

தமிழ்த்தொண்டு செய்த முஸ்லிம் புலவர்கள்

தென் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்கின்ற பெரும்பாலான முஸ்லிம்களின் தாய்மொழி தமிழென்றால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இம் முஸ்லிம்கள் தங்கள் தாய் மொழியாகிய தமிழ்மொழி வளர, அதன் மகிமையை எடுத்துக்காட்ட கன்னித் தமிழிலே கவி பாடியும், அழகுத் தமிழிலே அரிய பெரிய புத்தகங்கள் எழுதியும் சேவை செய்துள்ளார்கள். இப்படிப் பணியாற்றிய பலருள் புராணம் பாடிப் புகழ் பெற்ற உமறுப் புலவரே முதலிடத்தை எடுக்கக் கூடியவர்.

இவர் பாடிய சீறாப்புராணம் என்னும் நூலிலே நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மூன்று காண்டங்களாக வகுத்துப் பாடியுள்ளார். இவருடைய கவிப்போக்கு பெரும்பாலும் கம்பருடைய கவிப்போக்கை ஒத்திருக்கிறது. இவர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த எட்டையபுரத்து சமஸ்தான வித்துவான்களில் ஒருவராவார்.

இவர் சீறாப்புராணம் மட்டுமல்லாது முதுமொழி மாலை போன்ற நூல்களையும் தமிழ்மொழியிலே பாடித் தமிழ்த்தாயை ஆதரித்தார். இவர் இயற்றிய சீறாப்புராணத்தை அறியாத முஸ்லிம்கள் இல்லையென்றே கூறலாம். அவ்வளவு பிரபல்யம் வாய்ந்தது இந்த சீறாப்புராணம்.

அடுத்து எம் கவனத்தை ஈர்க்கும் முறையிலே தமிழ்த்தொண்டு செய்தவர் கீழைக் கரையைச் சேர்ந்த அப்துல் மஜீத் என்ப

வராவார். இவர் பாடிய நூல்களில் ஒன்றுதான் ஆசாரக் கோவை. இவ்வாசாரக்கோவை கற்பிட்டிய முஹம் மதுத்தம்பி மாமரைக்காரின் வேண்டுகோளுக் கிணங்கப் பாடப்பட்டது. இதனால்தான் போலும் புலவர் ஒவ்வொரு பாட்டின் கடைசியிலும் "தம்பி மாமரைக்காரும் சகாயனே..." என்று முடித்திருக்கின்றார்.

ஆசாரக்கோவை மக்களுக்குப் புத்திபுகட்டும் பாணியிலேயே அமைந்திருக்கிறது என்பதற்குப் பின்வரும் பாடல்கள் எடுத்துக்காட்டாக அமைகிறது.

திடமுறும் பெரியோர் சபைக்கேகினால்,
செப்பியே நாவினைப் பேணுதல் வேண்டுமே,
மீடவியர் வசிக்கும் குகைதனுக் கேகினால்
மாற்றியே பார்வையைப் பார்த்திடல் வேண்டுமே

என்று பாடிக்கொண்டு வந்து, கடைசியில் "தம்பிமாமரைக்காரும் சகாயனே..." என்று முடிக்கின்றார். இவ்வாறு ஆசாரக்கோவையின் பாடல்கள் அழகாக அமைந்திருக்கின்றன. இந்நூல் தமிழ் உலகிற்கு ஒரு தனிப்பெருஞ்சிறப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

இதே போன்று ஈழத்திலும் பல இஸ்லாமியப் புலவர்கள் தோன்றி, தமிழ்த் தொண்டு செய்துள்ளார்கள். ஆனால் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியேனும், கருத்தாழம் நிறைந்த கவிதையையேனும் இன்று நம்மால் சிறப்பாக அறிய முடியாதிருப்பது எமது துர்ப்பாக்கியமென்றே கூறவேண்டும்.

இன்று நாம் தமிழ்த் தொண்டு செய்த இஸ்லாமியப் புலவர்களின் ஆராய்ச்சியில் ஈடுபடும் பொழுது ஒரு சில புலவர்களின் வரலாறுதான் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. அதே போன்று அவர்களின் எழில்மிகு கற்பனையிலிருந்து உதித்த வளம் மிக்க கவிதைகளில் ஒரு சிலவற்றின் உதவிதான் இங்கு உறுதுணைபுரிகின்றது. எனவே கிடைத்தவற்றைக் கொண்டு திருப்தியடையும் பெருந்தன்மையிலே ஒருசில ஈழத்துக் கவிஞர்களைப்பற்றி நுணுகி ஆராய்வோம்.

இலங்கையிலே இசைத்தமிழின் பண்புப்பெயர் கொண்டு வழங்கும் யாழ்நகரிலே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே செந்தமிழ்க் கவிபாடும் அசனார் லெவ்வை என்ற ஒரு பெரும்புலவர் வாழ்ந்தார். அவர் தமிழ், ஆங்கிலம், அரபு மொழிகளிலும் பாண்டித்தியம் படைத்தவராகக் காணப்பட்டார். இவர் தென்னகத்தின் தீந்தமிழ்க் கவிஞர் குலாம் காதிர் நாவலர் இயற்றிய "திருமக்கா திருப்பந்தாதி" என்னும் கவிநாவலுக்குச் சாற்றுக் கவிபாடித் தென்னகத்திலும் ஈழத்திருநாட்டிலும் பெரும் புகழடைந்தார்.

அசனார் லெவ்வையவர்கள் இஸ்லாமியப்

பெரியோர்களைப் பற்றிப் பல கவிநூல்களைப் பாடியுள்ளார். என்றாலும் இவருக்குப் பெரும்புகழ் தேடித் தந்ததுதான் "நவரெனத்தினத்திருப்புகள்" என்னும் நூல். இந்நூலிலே திருத்தூதர் முகம்மது (ஸல்) அவர்களுடைய பண்புகள் இயற்கையே மாறுபட்டாலும் மாறுபடாத உவமைகளால் உதாரணங்காட்டி வர்ணித்து, ஓசைநயம் பொருந்திய சந்தப் பாக்களினாலே நிறம்படப் பாடியிருக்கிறார். இவர் தமிழ்த் தாய்க்கு ஆற்றிய தொண்டை தமிழ்த்தாய் என்றென்றும் மறக்காதென்றே நம்புகின்றோம்.

இப்புலவர் வாழ்ந்த காலத்திலேயே சுலைமான் புலவரென்ற இன்னுமொரு கவிஞர் யாழ்நகரிலே வாழ்ந்திருக்கிறார். இவர் நினைத்தபோது எந்த நேரத்திலும் கவிபாடும் திறமையுடையவர். இப்புலவர் தனிப்பாடல்களையே அதிகமாகப் பாடியுள்ளார்.

மேலும் இற்றைக்கு ஏறத்தாள ஒரு நூற்றாண்டுக்கு முன் அகமதுலெவ்வை மரைக்கார் உபாத்தியாயர் என்ற ஒரு புலவர் வேருவிலையில் வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்துள்ளார். இவர் புலவர் பரம்பரையிலேயே பிறந்த கவிஞராவார். இப்புலவர் பல நூல்களைச் செய்யுள் மூலமாகவே இயற்றியுள்ளார். அவைகளில் வேருவிலைக் கந்தூரியை ஆரம்பித்து வைத்த பெரியார் செய்யது முஸ்தபா ஒலியுல்லாஹ் அவர்களின் பேரில் பாடப்பட்டிருக்கும் "காரண அலங்காரக் கும்மி" என்னும் நூல் தனிச்சிறப்பு வாய்ந்தது. இந்நூலில் செய்யது ஒலியுல்லாஹ் அவர்கள் தன்னை நடுக்காட்டிலே வைத்துக் கொள்ளையிட வந்த கொள்ளைக் கூட்டத்தினருக்கு செய்த நல்லுபதேசங்களைப் புலவர் கூறுமிடத்து..

கொள்ளைத் தொழிலை மறந்துவிடுமிந்த
கொலைகளவைத் துலைத்துவிடும்
எல்லாம் படைத்தாளும் பெரியோனை
எண்ணி மனதில் தொழுது கொள்வோம்.

என்று பாடியிருக்கின்றார். இக்கவிதைகளில் அமைந்திருக்கும் நன் மொழிகளின் நயத்தால் பாடல்கள் மேம்பட்டதாகக் காணப்படுகின்றன. இதைவிட சோலை அதாவது காலியில் இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் காதர் சம்சுதீன் என்னும் பெயரையுடைய ஒரு புலவர் வாழ்ந்திருக்கிறார். இவருக்குத் தமிழ், அரபு ஆகிய இரு மொழிகளிலும் நல்ல தேர்ச்சி இருந்திருக்கிறது என்பதை இவரால் இரு மொழிகளாலும் இயற்றப்பட்ட கவிதைகளில் இருந்து அறியமுடிகிறது. மேலும் இவர் தமிழை அரபு மொழி எழுத்துக்களிலே எழுதிப் பல புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

இப்புலவர் சாமர்த்தியமாலை, முஸ்தபா மாலை, தன்பீகுமாலை ஆகிய கவிதை நூல்களையும் இயற்றியுள்ளார். இவருடைய சாமர்த்தியமாலை என்னும் நூல் மனித சமுதாயத்திற்கு மிக முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. மேலும் புத்தளத்திற்குப் பக்கத்திலேயுள்ள கரைத்தீவு என்னுமிடத்தில், செய்கு அலாவுத்தீன் என்னும் ஒரு புலவர் வாழ்ந்திருக்கிறார். இவர் இளம் பருவத்திலேயே கண்ணோய் ஏற்பட்டு கண்களை இழந்துவிட்டார். ஆனால் கவிபாடும் திறமையை இழக்கவில்லை. இவர் வசைக்கவி பாடுவதில் வல்லுனர்●

மிகுதி அடுத்த இதழில்...

sex க்கு பின் ஆண்கள் செய்யும் தவறுகள்..

ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி திருமணமான பின் உங்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என கேட்டால் சில ஆண்கள் கன்னம் சிவக்கிற அளவிற்கு அடி தருவாங்க. சிலர் இருக்கிறாங்கப்பா காது கிழியிற அளவுக்கு கூடாத வசனங்களால திட்டுவாங்க.

பெண்கள் தங்களது பிரச்சினைகளை வெளிக்காட்டுவது கிடையாது. துரதிஸ்டமாக எல்லா திருமணமான தம்பதிகளும் இறுதி வரை சந்தோசமாக இருப்பது கிடையாது. இவற்றிலே பல காரணிகள் செல்வாக்கு செலுத்தினாலும் மிகவும் முக்கியமாக உடலுறவு தான் தான் வில்லனாகவோ, வில்லியாகவோ மாறிவிடுகிறது. பொதுவாக ஆண்கள் உடல் உறவின் போதோ அல்லது பின்னரோ சில தவறுகளைச் செய்கிறார்கள்.

உடலுறவின் பின்னர் உடையாக நித்திரை கொள்ளுதல்.:பெண்கள் உடலுறவிற்கு பின்னர் ஆண்களின் அரவணைப்பையே விரும்புகிறார்கள். ஆனால் தங்களுடைய செயற்பாட்டை முடித்த பின்னர் நித்திரை அடிப்பதால்,

சிலர் குறட்டை வேறு. பெண்கள் தனிமை ஆக்கப்பட்டது போல உணர்கிறார்கள் உங்களால் நித்திரையை அடக்க முடியாத சந்தர்ப்பத்தில் நீங்கள் படுக்கையில் செய்கின்றவற்றை விரைவாக செய்து முடிக்காது slow ஆக செய்யுங்கள்.

ஆற்றல்கவி: சில ஆண்களிற்கு பெண்களை எவ்வாறு கட்டியணைத்து முத்தம் கொடுப்பது என்றுகூட தெரியாது. ஆங்கில படங்களையும் வேறுபல படங்களையும் பார்த்துவிட்டு அதில் உள்ளவாறு செய்ய வெளிக்கிட்டு ஏடா கூடமாகிய ஏராளமான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. பெண்கள் சில இடங்களில் முத்தம் இடுவதை விரும்புவது கிடையாது.

பெண்களின் மன நிலையை உணர்ந்து அவர்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து செயற்பட்டால் திருமண வாழ்க்கையில் செழிப்பு ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை.

ஆதிதீரம்:பெரும்பாலான ஆண்கள் தங்களுடைய அழுத்தங்களையும் கோபங்களையும் குறைப்பதற்காக உடலுறவில் ஈடுபடுகிறார்கள். பெண்கள் இப்படியான சந்தர்ப்பங்களை விரும்புவது கிடையாது.

இது பெண்களின் மன அழுத்தத்தை அதிகரிக்க செய்து பெண்களிற்கு கணவனின் மேல் வெறுப்பை உண்டாக்கி விடுகிறது. இப்படியான சந்தர்ப்பங்களின் போது விடயங்களை படுக்கை அறையின் வெளியே வைத்து கதைப்பது தான் உகந்தது.

தேவை ஏற்படும் போது மீளும் அணைத்தல்:இது பொதுவாக ஏற்படுகின்ற ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகிறது. மற்றைய நேரங்களிலும்பகலிலும் மனைவியை அழைத்து உதைத்து விட்டு இரவு நேரங்களில் மட்டும் தங்களுடைய காரியம் முடிவதற்காக அன்பாகவும் மனைவிக்கு உதவி செய்கிறோம் என்ற போர்வையில் சில வேலைகளை சமையல் அறையில் செய்ய போய் ஏடா கூடமாகிவிடுகிறது.

அனேகமான பெண்களிற்கு உடலுறவிற்கு முன்னதாக 5 நிமிடங்கள் தேவைப்படுகிறது. பெரும்பாலான படங்களில் வருகின்ற பெண்களை போல இருக்க வேண்டுமென நினைத்தால் இது நிஜ வாழ்கையில் நடக்க முற்றாக சாத்தியம் இல்லை. திருமணமான பெண்கள் தங்களுடைய விருப்பங்களை சொல்லுவதற்கு ஆண்கள் நேரம் கொடுப்பதில்லை.

■ முகிலன்-

இன்னொரு போருக்குத் தமிழரை தூண்டி விடுகிறதா சிங்கள அரசு?

சுமார் 17 மாதங்களுக்கு முன்னர் மேற்கு நாடொன்றில் புலம்பெயர்ந்து வாழும் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது "புலிகள் இயக்கம், போராட்டம் எல்லாம் அழிந்து விட்டது. போராட்டம் என்று சொல்லிச் சொல்லி தமிழர்கள் நிறைய இழந்து விட்டார்கள். இனி அபிவிருத்தி வசதி வாய்ப்புகள் என்று கிடைப்பதை மக்கள் அனுபவிக்க விட வேண்டும்" என்று ஒரு திருப்தியோடு கூறினார். அவர் இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் புலம்பெயர்ந்தவர். போர் முடிந்துவிட்டது என்பதால் அடுத்து நடக்கப் போவது அபிவிருத்தி என்றளவில்தான் அவரது கருத்து இருந்தது.

"இப்போதைக்கு அப்படித்தான் இருக்கும். காலப்போக்கில்தான் தெரியும் இதன் விளைவுகள் எப்படியென்று..." என்று கூறிவிட்டு இருந்து கொண்டேன் நான்.

இப்போது நடக்கின்ற சம்பவங்களைப் பார்க்கும் போது அந்தக் காலம் வந்துவிட்டது போலத் தெரிகிறது. புலிகள் இயக்கத்தின் இராணுவ வல்லாண்மை இல்லாமல் போன இந்த 17 மாத காலத்திலும் என்ன நடந்திருக்கிறது? என்ன நடந்து கொண்டிருக்கிறது? என்று பார்ப்பவர்களால் இது சாதகமான மாற்றமா, அல்லது பாதகமான மாற்றமா என்பதை ஓரளவுக்கேனும் புரிந்து கொள்ள முடியும். தமிழ்மக்களின் நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு யாருக்குமே திராணியில்லை.

யாழ்ப்பாணத்துக்குப் போயுள்ள 200 சிங்களக் குடும்பங்கள் தாங்கள் அங்கு வாழ்ந்ததாகவும் தமக்கு அங்கு காணி தர வேண்டும் என்றும் முரண்டு பிடித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு காணி வழங்க முடியாது என்று ஒரே குரலில் கூறித் திருப்பி அனுப்புவதற்கு அங்குள்ள தமிழ் அமைச்சராலோ அதிகாரிகளாலோ முடியவில்லை. கடந்த மூன்று தசாப்தங்களாக தெற்கில் வசதிகளோடு வாழ்ந்து வந்தவர்கள் இவர்கள். போர் முடிந்து 17 மாதங்கள் வரை அங்கு வாழ்ந்த இவர்கள் இப்போது திடீரென யாழ்ப்பாணத்தில் இடம் கேட்கிறார்கள். வடக்கில் இந்தியா வீடமைப்பு உதவிகள் கொடுக்கப் போகிறது. அதை இவர்களுக்கும் கொடுத்து இலவசமாகவே குடியேற்றங்களை அமைக்கலாம் என்ற நோக்கில் தான் இந்த அவசரம். வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதாக கூறிய

அரசாங்கம் எந்த அடிப்படை வசதியையுமே செய்து கொடுக்கவில்லை.

ஆனால் வன்னியின் ஒரு பகுதியான ஓமந்தைக்குக் கிழக்கே உள்ள கொக்குவெளி என்ற தமிழ்க் கிராமத்தில் (இப்போது அது கொக்கெலிய ஆகிவிட்டது.) குடியேற்றப்பட்ட சிங்களவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. அவர்களுக்கு கல்லால் ஆன நிரந்தர வீடுகள். ஆனால் தமிழர்களுக்கு வன்னியில் ஓலைக்குடிசைகள் கூடக் கிடையாது. இந்தளவுக்கும் வன்னியில் வாழ்ந்த தமிழர்கள் அதைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். ஆனால் சிங்களவர்களோ அத்துமீறிக் குடியேறியவர்கள். இந்தியாவின் வீடமைப்பு உதவியைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களைக் குடியேற்ற முனைகிறது சிங்கள அரசாங்கம்.

யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க முடியாத நிலையில் வன்னியிலும் கிழக்கிலும் இடம்பெற்று வரும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கின்ற திராணி இப்போது யாருக்குமே இல்லை. சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளில் வெற்றி பெற முடிந்தது புலிகளால் மட்டுமே. அவர்களின் காலத்துக்குப் பிறகு சிங்களக் குடியேற்றங்களை தமிழர்களால் மிரட்சியுடன்தான் பார்க்க முடிகிறதே தவிர அதற்கு அப்பால் எதையும் செய்ய முடியவில்லை.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு என்று வடக்கில் இடம்பெற்று வந்த சிங்களக் குடியேற்றங்கள் இப்போது யாழ்ப்பாணம் வரை வந்துவிட்டது. அரசாங்க அதிகாரிகள் இடமில்லை என்றனர். அரசியல் வாதிகள் இது அத்துமீறல் என்றனர். ஆனால் அவர்கள் யாருமே அதைப் பற்றி அலட்டிக் கொள்ளவேயில்லை. அவர்கள் தமது இலக்கை இப்போது மெல்ல மெல்ல அடைந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் மூன்று மாத நிவாரண உதவிகளை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. அதற்குப் பிறகு காணிகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படப் போகிறது. இவையெல்லாம் யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றங்களுக்கு அரச தரப்பில் காட்டப்பட்டுள்ள பச்சைக்கொடிதான். போர் முடிவுக்கு வந்து 17 மாதங்களாகின்ற நிலையில் வடக்கில் அபிவிருத்தி என்பதே நடக்கவில்லை. சிங்களக் குடி யேற்றங்கள்தான் நடந்து கொண்டிருக்கின்றன. புலிகள் என்ற பாதுகாப்பு வளையம் உடைந்து போனதன் விளைவு இது. இது போன்று பல முனைகளில் இதன் தாக்கம் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

போர் எம்மை அழித்ததும் உண்மை. அதேவேளை எம்மைக் காத்து நின்றதும் உண்மை. இதெல்லாம் அந்த புலம்பெயர் நண்பருக்குத் தெரியாதிருக்கலாம். சிங்களக் குடியேற்றங்கள் விடயத்தில் இனிமேல் தமிழர்களால் எதையும் சாதிக்க முடியாது என்ற கட்டம் வந்துவிட்டது என்பதே உண்மை.

மட்டக்களப்பு கெவுளியாமடுவில் கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் சிங்களவர்களால் விவசாயத்துக்காக அபகரிக்கப்படுகின்றன. இதன் காரணமாக கால்நடைகளை நம்பி வாழும், அவற்றின் மூலம் வருமானம் பெறும் ஆயிரக்கணக்கான தமிழ் முஸ்லிம்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது. இதையெல்லாம் கேட்கப் போனால் பிரிவினைவாதி என்று சிங்கள அரசாங்கம் கூறும். ஒரே நாடு, ஒரே மக்கள் என்று கூறும் அரசாங்கம்தான் பெரும்பான்மைச் சிங்கள இனத்தைக் கொண்டு சிறுபான்மை இனங்களை நசுக்குகின்றது. இதுதான் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஆயுதப் போராட்டம் முளைவிடக் காரணமாக இருந்தது. அதே சூழலை இன்னும் சில ஆண்டுகளில் சிங்கள அரசே ஏற்படுத்தி விடும்போல இருக்கிறது.

குடியேற்றப்பட்ட சிங்களவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. அவர்களுக்கு கல்லால் ஆன நிரந்தர வீடுகள். ஆனால் தமிழர்களுக்கு வன்னியில் ஓலைக்குடிசைகள் கூடக் கிடையாது. இந்தளவுக்கும் வன்னியில் வாழ்ந்த தமிழர்கள் அதைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். ஆனால் சிங்களவர்களோ அத்துமீறிக் குடியேறியவர்கள்.



தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தானாக உருவெடுத்ததில்லை. அதை உருவாக்கியது சிங்களப் பேரினவாதம்தான். இதை நாம் சொல்லவில்லை. சிங்கள இராஜதந்திரிகளே அண்மையில் ஒப்புக் கொண்டுள்ளனர். இப்போதும் சிங்களப் பேரினவாதம் செய்கின்ற காரியங்கள் எல்லாமே தமிழரைக் கோபமூட்டி மீளவும் ஆயுதமேந்த வைப்பதற்காகக் கூட இருக்கலாம். ஏனென்றால் அது தமிழரின் மக்கள் தொகையை குறைப்பதற்கு அவர்களுக்கு இன்னமும் வசதியானதாகி விடுமல்லவா?

ஆசிரியர் : உன் பக்கத்திலே தூங்கிறவனை எழுப்பு
நண்பன் : நீங்கதானே தூங்க வெச்சீங்க. நீங்களே எழுப்புங்க.

செவே.விவேகானந்தன்
சட்டத்தரணி

சட்டம் பேசுகிறது

பிரபுதேவா + நயன்தாரா திருமணம் நிலைக்குமா?

பிரபு தேவா புகழ் பூத்த நடிகர். நயன் தாராவும் புகழ் வீசும் நடிகை. இருவரும் காதல் வசப்பட்டுள்ளனர். என்ற கிசு கிசு செய்திகள் பரப்பப்பட்டன. உண்மையில்லை உண்மையில்லை என இருவரும் அடித்துக் கூறினர். இன்று நிலமை வேறு. நயன்தாரா எனக்காகவே பிறந்தார் என பிரபு தேவா பிதற்றுகின்றார். அவரை இன்றி வேறு யாரையும் மணம் முடியேன் என்று நயன்தாரா சபதம் எடுத்துள்ளார்.

நயன்தாரா இன்னும் திருமணம் ஆகாதவர். அவர்கள் திருமணத்திற்கு என்ன தடை? தடை போடுவதே பிரபுதேவாதான். பிரபு தேவா திருமணமானவர். அவரது மனைவி தீர்க்க சுமங்கலியாக இருக்கின்றார். அவர்களது திருமணம் சட்டப்படி முடிவுறவில்லை. அவர்களது திருமணத்தின் சாட்சிகளாக அழகிய குழந்தைகள் இருக்கின்றார்கள். இவ்வாறு பிரபுதேவாவின் திருமணவாழ்வு சட்ட பூர்வமானதாக இருக்கும் போது மறுமணத்துக்கு அது ஒரு தடையாக இருக்கிறது. நயன்தாராவை மணம் முடிப்பதற்கு பிரபுதேவா பெரிய பல முயற்சிகளை செய்கின்றார்.

பிரபு தேவா ரம்லத் என்ற பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார். காதலுக்காக ரம்லத் இந்துவாக மாறினார். புதிய பெயர் 'லதா' எனச் சூட்டிக் கொண்டார். அவர்களது இருகுழந்தைகளும் இன்று என்ன செய்வது என்று தெரியாது முழிக்கின்றனர்.

பிரபுதேவா சினிமாவில் கூறுவது போல ரம்லத்தை தான் திருமணம் செய்யவில்லை எனக் கூறிப் பார்த்தார். ஆனால் பத்திரிகை உலகம் அவரை சும்மா விடவில்லை. அவரது குட்டைய போட்டுடைத்து விட்டது.

ரம்லத்தை விவாகரத்து செய்துவிட்டு நயன் தாராவை திரமணம் செய்யலாமா? எனப் பிரபு தேவா யோசிக்கத் தொடங்கியுள்ளார். ரம்லத்தை விவாகரத்து செய்வது இலேசான காரணம் அல்ல. தவறு இழைத்தவர் பிரபுதேவா. ரம்லத்தை விவாகரத்து செய்வதற்கு பல தடைகளைத் தாண்ட வேண்டும். பிரபுதேவா தடைகளைத் தாண்டுவாரா? அல்லது விவாகரத்து செய்யாமலே நயன்தாராவை திருமணம் செய்துகொள்வாரா? சட்டம் என்ன பேசுகிறது?

ரம்லத்தின் பகக்கம் பலஅமைப்புக்கள் குரல் கொடுக்கின்றன. வீதியில் இறங்கி போராடவும் தயாராகுகின்றன. குறிப்பாக மகளிர் அமைப்புக்கள் மிக ஆவேசமாக செயல்படுகின்றன.

பிரபுதேவா ரம்லத்தை சட்டப்படி பதிவுத் திருமணம் செய்யவில்லை என்று கூறப்படுகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் திருமணம் ஏற்படுத்தவதற்கான வழிமுறைகள் ஒன்றானவைதான். பதிவுத் திருமணத்தை மட்டும் தான் சட்டம் திருமணம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. இந்துமத ஆசாரப்படி தாலி கட்டுவது தொன்று தொட்டுப் பேணிவரும் ஒரு இனத்தின் வழக்காற்றுப்படியும் திருமணம் செய்து கொள்ளலாம். அல்லது ஆணும் பெண்ணும் ஒன்று கூடி சமுதாயத்திற்கு ஏற்புடையதாக கணவன் மனைவியாக வாழலாம். சட்டம் அவ்வாறான திருமணங்களை ஏற்கின்றது. இலங்கையில் எவ்வாறு திருமணம் செய்

வதற்கு சட்டம் வழி செய்கின்றதோ அவ்வாறே இந்தியாவிலும் சட்டம் செயல்படுகின்றது. இங்கொன்றும் அங்கொன்றும் சிறு மாற்றங்கள் காணப்படலாம்.

பிரபுதேவா ரம்லத் தம்பதிகளின் பெற்றோர்கள் ,உற்றார் ,உறவினர் ,நண்பர்கள் மற்றும் எல்லோரும் இவர்களையும் தம்பதிகளாக ஏற்று வரவேற்றிருக்கின்றார்கள். அவர்களது திருமணவாழ்வு பல படக் காட்சிகளாக விரிந்துகொண்டு போகின்றது. சமுதாயம் அவர்களது திருமணத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.

பல ஆவணங்களில் பிரபுதேவா ரம்லத் தம்பதிகளை கணவன் மனைவி என பதியப்பட்டுள்ளது. இரு குழந்தைகளின் பிறப்புப் பத்திரம், கடவுச்சீட்டு, இன்னுமின்னோரன்ன ஆவணங்கள் பிரபுதேவா ரம்லத் இருவரையும் சட்டபூர்வமான கணவன் மனைவியென பறைசாற்றி நிற்கின்றன.

பிரபுதேவா ரம்லத்தின் திருமணம் போன்ற வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் அவ்வாறான திருமணத்தைக் கட்டிக் காப்பதற்காகன தீர்ப்பை வழங்கியுள்ளது.

இருதார குற்றத்திற்காக (bigamy) போடப்பட்ட வழக்கு. குற்றவியல் (Penal code) 494 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு

இந்தியாவின் குற்றவியல் பிரிவு 494 பிரிவு பின்வருமாறு கூறுகின்றது. (ஓர் ஆண், பெண்) கணவன் மனைவியாக வாழும் காலத்தில், கணவனோ மனைவியோ மீண்டும் திருமணம் செய்து கொண்டால், அத்திருமணம் வெற்றும் விருதுமாவதோடு, அவ்வாறு திருமணம் செய்து கொண்டவர் 7 வருடகால சிறைத் தண்டனை பெறக் கூடும். அத்தோடு தண்டப்பணமும் கட்ட வேண்டிய நிலை ஏற்படும் என்று அப்பிரிவு கூறுகின்றது.

சல்லா மடகல் என்பவர் இந்து சமய முறைப்படி திருமணம் செய்து கொண்டார். இந்துவான அவர் இஸ்லாமிய மதத்தைத் தழுவினார். முஸ்லீம் என்ற ரீதியில் ஒரு முஸ்லீம் பெண்ணை இரண்டாம் தாரமாக திருமணம் செய்து கொண்டார். அவரது முதல் மனைவி கல்யாணி குறித்த 494 ஆம் பிரிவின் கீழ் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். மனைவியின் முறைப்பாட்டின் பேரில் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கா கும். இவ்வழக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்றது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பை நீதியரசர் குல்டிப் சிங் எழுதினார். "திருமணம் என்பது நாகரீகமடைந்த சமுதாயத்தின் அடித்தளமாகும். திருமணம் என்ற அடித்தளத்தை உருவாக்கியவுடன் சட்டம் செயல்படத் தொடங்குகின்றது. அவர்களுக்கென சில கடமைகள் கட்டுப்பாடுகளை சட்டம் அவர்கள் மீது சுமத்துகின்றது. அத் திருமணத்தினால் ஏற்பட்ட கடமைகளை நிறைவேற்றத் தவறமுடியாது. கட்டுப்பாடுகளை சட்டத்திற்கு முரணாக விலத்த முடியாது. திருமணம் தான் ஒரு குடும்பத்தின் ஆணி வேர். அந்த ஆணி வேர் இல்லாமல் சமுதாயம் உருவாக முடியாது. திருமணம் ஒரு முடிவுக்கு வந்த பின்பு தான் அத்திருமணத்திற்கான கட்டுப்பாடுகள் முடிவுறும்." என்ற தோரணையில் நீதியரசர் குல்டிப் சிங் தீர்ப்பு வழங்கினார்.

முதல் இந்து சமயப்படி நடைபெற்ற திருமணம் இருக்கின்ற பொழுது இந்து முஸ்லீமாக மாறி முஸ்லீம் முறைப்படித் திருமணம் செய்தாலும் அத் திருமணம் சட்டத்தின் முன் செல்லுபடியாகாது. அவ்வாறு திருமணம் செய்த கணவர் இருதாரக் குற்றத்தைப் புரிந்துள்ளார் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. முதல் மனைவியை விவாகரத்து செய்யாமல், முஸ்லீமாக மாறி முஸ்லீம் சட்டத்தின் கீழும் இரண்டாம் திருமணம் செய்ய முடியாது.

பிரபுதேவா ரம்லத்தை விவாகரத்து செய்த பின்பு தான் நயன்தாராவை திருமணம் செய்ய முடியும். சட்டபூர்வமான தம்பதிகள் ஆகலாம். அவ்வாறு விவாகரத்துச் செய்யாமல், திருமணபந்தத்தில் பிரபுதேவாவும் நயன்தாராவும் ஈடுபட்டால், ரம்லத் சும்மா இருக்கமாட்டார். பொலிஸில் முறைப்பாடு செய்தால், பொலிஸார் தங்களது கடமைகளை செய்ய நேரிடும். அப்பொழுது பிரபுதேவாவிற்கு எதிராக சட்டம் தானாக பேசத் தொடங்கும்●

வாசகர்களே! இது போன்ற சட்டப் பிரச்சினைகளில் சிக்கி அவதியுறுகின்றீர்களா? அவற்றிற்கு தீர்வுகாண முடியவில்லையா? கவலையை விடுங்கள். சட்டம் பேசுகிறது! எனும் இப்பகுதிக்கு உங்கள் சட்டப் பிரச்சினைகளை எழுதி அனுப்புங்கள். அனுபவமிக்க சட்டத்தரணிகள் பதிலளிப் பார்கள்.

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.

அறுபது பெயர்த்துப் அல்ஸிமர் நோயா?

ஆரம்பத்தில் கண்டறியுங்கள்.

உங்கள் வீட்டில் ஒரு வயதானவர் இருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அப்பா அம்மா தாத்தா? பாட்டி பூட்டா பூட்டி என யாராவது ஒருவர்.

அண்மைக் காலங்களாக அவர் மாறாட்டமாகக் கதைக்கிறார். குழப்பமாக இருக்கிறார். அதிகமாக மறதி ஏற்படுகிறது நினைவுத் தடுமாற்றம் என ஏதாவது. இப்படியாக அவரது வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றதை அவதானிக்கிறீர்கள். பார்க்க வந்த மற்றொரு பாட்டி "இவருக்கு அறளை பெயர்ந்து விட்டது" என்கிறார். இவற்றைத் தவிர முகம் கழுவுதல் சேவ எடுத்தல் போன்ற வழமையான பணிகளையும் செய்வதில் சிரமம் ஏற்படுவதும் தெரிகிறது. முன்னரைப் போல பலவற்றில் ஈடுபாடின்றி ஒதுங்கிப் போவதையும் அவதானிக்க முடிகிறதா?

"ஆம்! ஆம்! இவருக்கு அறளை பெயர்ந்து விட்டது. வயசானால் இப்படித்தான்." என நீங்களும் அலட்சிப்படுத்தாதீர்கள். ஏனெனில் அது ஒரு நோயாக இருக்கலாம். உதாரணம் வேண்டுமென்றால் Black என்ற ஹிந்தித் திரைப்படத்தில் அமிதாப் பச்சான் நடித்த பாத்திரத்தை நினைத்துப் பாருங்கள்.

அல்ஸீமர் நோய் என்பதை வயதான காலத்தில் ஏற்படும் நினைவிழப்பு மற்றும் சிந்தனைத் திறன் இழத்தல் எனச் சொல்லாம். இது பொதுவாக 65க்கு மேற்பட்டவர்களுக்கே வரும்.



Cells within the brain (*neurones*) transport electrical messages to other parts of the body using chemical transmitters (*neurotransmitters*).



In *Alzheimer's Disease*, areas of the brain tissue are damaged and some messages do not transmit, causing the symptoms of the disease.

ஆயினும் இது மூளையில் ஏற்படுகின்ற ஒரு நோயே அன்றி வழமையாக வயது முதிர்வதால் எல்லோருக்கும் ஏற்படும் நிலையில்லை. அல்ஸீமர் நோயில்லாத வேறு காரணங்களால் நினைவு மங்கும் நோய்களும் உள்ளன. படிப்படியாக ஆரம்பித்து மூளையை நலிவடையச் செய்து மீளமுடியாத நிலைக்குச் செல்கின்ற அல்ஸீமரை முதுமை மறதிப் பைத்தியம் எனலாம். பைத்தியம் போலத் தோன்றினாலும் பைத்தியமும் அல்ல.

இந்த நோயைக் கண்டுபிடிப்பதற்கு இரசாயன கூடப் பரிசோதனைகள் அவசியமல்ல. வெளிப்படும் அறிகுறிகளை வைத்தே கண்டறிய முடியும்.

இவ்வாறான அறிகுறிகள் அவருக்கு இருக்கிறதா என்பதை அவதானித்துப் பாருங்கள்.

நாளாந்த வாழ்க்கை முறையைக் குலைக்கும் நினைவுத் தடுமாற்றம். அண்மைக் காலத்தில் நடந்த சம்பவங்களையும் தான் அறிந்து கொண்ட அனுபவித்த விடயங்களையும் மறந்து விடுவதுதான் அல்ஸீமர் நோயின் ஆரம்ப அறிகுறிகளில் மிக முக்கியமானது எனலாம். மிக நெருக்கமானவர்களின் திருமண நாள் பிறந்தநாள் போன்ற முக்கிய தினங்களை மறந்து விடுவதும் மிக முக்கிய சம்பவங்களை நினைவில் காப்பாற்ற முடியாததும் இந்நோயின் ஏனைய அறிகுறிகளாகும். மறந்து விடாதிருக்க கலண்டரில் அல்லது டயறியில் குறித்து வைப்பதும் குறித்து வைத்ததையே மறந்துவிடும் உண்டு. காலத்தோடு சேர்ந்து ஓடும் சில வயதானவர்கள் மறதியைத் தாண்ட கணனியை அல்லது வேறு இலத்திரனியல் கருவிகளை நினைவுறுத்துவதற்கு பயன்படுத்துவதுண்டு.

பெயர்களை மறப்பதும் செய்ய வேண்டிய முக்கிய வேலைகளையும் பங்கு கொள்ள வேண்டிய நிகழ்வுகளையும் மறப்பதும் அல்ஸீமர் நோயின் அறிகுறிகளாக இருக்கலாம்.

திட்டமிடுவதிலும், பிரச்சினைகளை தீர்ப்பதிலும் சவால்களை எதிர்கொள்ளல்

ஒரு பணியைத் திட்டமிடுவதிலும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் இந்நோயின் ஆரம்ப கட்டத்தில் நோயாளி சிரமங்களை



எதிர்கொள்வார். கடைக்குச் செல்வாராயின் சில்லறைக் கணக்குகள் பார்ப்பதில் சிரமப்படலாம். வழமையான மாதாந்த கொடுப்பனவு களை செய்வதில் பிரச்சினைகள் தோன்றலாம்.

இது போன்ற செயற்பாடுகளை செய்வதற்கு இப்பொழுது முன்பை விட கூடியளவு நேரம் தேவைப்படலாம். வீட்டிலோ வேலைத்தளத்திலோ அல்லது ஓய்வின் போதோ நன்கு பரிச்சய மான வழமையான பணியைச் செய்வதில் சிரமங்களை எதிர் கொள்ளல்.

தங்களது நாளாந்தக் கடமைகளை செய்து முடிப்பது பல அல்ஸீமர் நோயாளிகளுக்கு கடினமாயிருக்கும். உதாரணத்திற்கு வழமையாகச் சென்று வரும் இடங்களான வங்கி, கோயில், நண்பர் வீடு போன்றவற்றின் வழியை மறந்து விடுவார். வழமையாக செஸ், சீட்டாட்டம் போன்ற ஏதாவது விளையாடுபவராக இருந்தால் அந்த விளையாட்டின் விதிகளை மறந்துவிடக் கூடும்.

காலம், நேரம், இடம் பற்றிய தடுமாற்றம்

பல அல்ஸீமர் நோயாளிகளுக்கு அன்றைய திகதி என்ன? காலையா மாலையா என்பதில் குழப்பங்கள் தோன்றும். மாரி கோடை, காலநிலை போன்ற வற்றை நினைவுக்கு கொண்டு வருவதில் குழப்பம் ஏற்பட லாம். சில தருணங்களில் தாங்கள் எங்கே இருக்கிறோம் அல்லது தான் எவ்வாறு அவ் விடத்திற்கு வந் தேன் என்பதையே மறந்து தடு மாறுவர்.

உதாரணத்திற்கு இன்று ஞாயிறா திங்களா எனக் குழம்புவார். ஆயினும் பின் னர் நினைவுக்கு கொண்டு வந்துவிடுவார்.

உருவங்களை சூழ வுடன் பொருத்திப் பார்ப் பதில் ஏற்படும் சிக்கல்கள்.

ஒரு சிலருக்கு பார்வைக் கோளாறு மட்டுமே அல்ஸீமர் நோயின் முதல் அறிகுறி யாக இருக்கலாம். வாசிப்பதி லும் அதனைப் புரிந்து கொள்வ தி லும் சிலருக்கு சிரமம் தோன் றும். சிலருக்கு கண்ணில் படும் உருவங் களுக்கு இடையேயான தூரம், நிறவேறுபாடு ஆகிய வற்றை பிரித்தறிந்து உணர் வது கஷ்டமாயிருக்கும். உதாரணத்திற்கு முகம் பார்க்கும் கண்ணாடியைத் தாண்டிச் செல்லும் போது அதில் உள்ள விம்பத்தைப் தான்தான் என்பதைப் பிரித்தறிய முடியாது வேறு யாரோ அறையில் இருப்பதாக உணரக் கூடும்.

உரையாடுகையிலும் எழுதுவதிலும் புதிய சிக்கல்களை எதிர்கொள்ளல்.

பலர் பேசிக்கொண்டிருக்கையில் அருகில் இருக்கும் இவரால் அதனை புரிந்து கொள்வது சிரமமாயிருக்கும். அவர்கள் உரை யாடலில் இணைந்து கொள்வதும் முடியாதிருக்கும். சில தருணங் களில் தான் பேசிக்கொண்டிருக்கும் போது அதனை எவ்வாறு தொடர்வது எனப் புரியாமல் திணறிப் பேச்சை நிறுத்துவார். அல்லது சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பார். சரியான சொற்கள் தேவையான நேரத்தில் வராமல் திணறுவார். உதாரணத்திற்கு டோரச் லைட் - என்பதை விளக்கு என்றோ புத்தகம் - என்பதைப் பேப்பர் என்பதாகவோ சொல்லக் கூடும்.

பொருட்களை அதற்கான இடத்தில் வைக்காமல் வேறு இடங்களில் வைப்பதும் அவற்றை பின்பு கண்டு பிடிக்கத் திணறுவதும்.

ஒரு பொருளை அதற்கான இடத்தில் வைக்காது பொருத்தமற்ற இடத்தில் வைப்பது அல்ஸீமர் நோயின் மற்றொரு ஆரம்ப அறிகுறி யாகும். உதாரணமாக புத்தக அலுமாரியில் வைக்க வேண்டிய புத்தகத்தை வழிபாட்டு மேடையில் வைப்பார் அல்லது பர்சில் வைக்க வேண்டிய பணத்தை சூக்கு கண்ணாடி உறையில் வைப்பார். பிறகு அதனைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாது திணறுவார். யாராவது அதனைத் திருடிவிட்டதாக குற்றம் சாட்டக் கூடும். காலம் செல்லச் செல்ல இது அதிகரிக்கலாம்.

தீர்மானம் எடுப்பதில் சிரமம்

அல்ஸீமர் நோயாளிகள் சரியான தீர்மானம் எடுப்பதில் சிரமப்படுவார்கள். தவறான முடிவு எடுக்கவும் கூடும். உதாரணமாக பெருந்தொகை பணத்தை தவறான நபருக்கு கொடுக்க திடீரென முடிவு எடுக்கக் கூடும். குளிப்பது, முகம் கழுவுவது, சுத்தமான ஆடைகள் போன்றவற்றில் கவனம் செலுத்தாமல் இருப்பார். தனது சுத்தத்திலும் வீடு படுக்கை போன்றவற்றின் சுத்தத்திலும் அக் கறையற்று இருப்பார்.



தொழில் மற்றும் சமூகக் கடமை களில் இருந்து ஒதுங்கக் கூடும்

ரீவீ பார்ப்பது, பத்திரிகை, புத்தகம் படிப்பது, விழாக்களுக்கு செல்வது, நண்பர்களுடன் பொழுது போக்கு வது, போன்ற தனது வழமையான நட வடிக்கைகளிலிருந்து ஒதுங்கக் கூடும். தனக்கு விருப்ப மான செயற்பாடு களைக் கூட செய்து முடிக்க முடியாது மறப் பதும் இவர் களுக்கு இயல் பாக இருக்கும். கட்டாயம் செல்ல வேண்டிய திரு மணம் மரண வீடு ஆகியவற் றி க் கு செல்வதிலும் அக்கறை அற்று இருப்பது சகஜம்.

அவரது வழமையான மனநிலை குண இயல்பு மாற்றம்.

முன்னரைப் போன்ற மனிதராக இருக்கமாட்டார். மனக்குழப்பம், சந்தேகம், மனச்சோர்வு,பீதி, மனப்பதற்றம் போன்றவை மேலோங்கக் கூடும். மிக அற்பமான விடயங் களுக்கும் நிலை தடுமாறுபவராக மாறுவார். இதனால் உறவினர்கள் நண்பர்கள் மற்றும் தொழிலகத் தோழர்கள் இடையே ஆன உறவுகள் விரிசலடையலாம்.

இத்தகைய அறிகுறிகளில் ஒரு சிலவாவது உங்கள் உறவினருக்கு இருந்தால் அது அல்ஸிமர் நோயின் ஆரம்பமாக இருக்கலாம். எதற்கும் நீங்களாக முடிவெடுக்காது நல்ல மருத்துவரை அணுகுங்கள். இது முற்று முழுதாகக் குணப்படுத்த முடியாத நோய் என்ற போதும் அது மேலும் தீவிரமாகி வாழ்வை நாசமாக்காது தடுக்க முடியும்

■ கு.நிரோஜன்

"யாழ்ப்பாணம் போகிற போக்கைப் பாரு..."

"கலாசாரமும், கற்பும் காற்றோடு போக கையில் குழந்தையும், காதில் செல்போனும் நாகரிகமாகிவிட்டது"

கலாசாரம் பண்பாடு, ஒருவனுக்கு ஒருத்தி உறவுமுறை என்பன யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக எழுதப்படாத விதியாகப் பேணப்பட்டு வருகிறது. ஒருவகையில் பல சமூகச் சீரழிவுகள் இல்லாமல் போவதற்கும் எயிட்ஸ் முதலான பாலியல்சார் நோய்களின் தாக்கம் மிகக் குறைந்தளவில் இருப்பதற்கும் இத்தகைய பண்பே காரணமாக உள்ளது யாவரும் அறிந்ததே. யாழ்ப்பாணத்தவர்களின் குறிப்பாக பெண்களின் நன்னடத்தை பற்றி அனைவருமே சிலாகித்துச் சொல்வதுமுண்டு.

"தமிழ்ப் பண்பாடுள்ள பெண் தேவையென்றால் யாழ்ப்பாணத்துக்குத்தான் செல்ல வேண்டும் என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட விடயம். அந்தளவு தூரம் தமிழ்ப் பெண்கள் என்றாலே அது யாழ்ப்பாணத்துப் பெண்கள்தான் என்று அடையாளப்படுத்தப்படும் அளவுக்கு பண்பாட்டோடு ஊறித்திளைத்தவர்கள் அவர்கள். (ஒருசிலர்- மிக மோசமான ஆணாதிக்கத்துக்குள் யாழ்ப்பாணத்துப் பெண்கள் சிக்குண்டிருப்பதாகவும், இத்தகைய ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை விமர்சிக்கவும் செய்கிறார்கள்)

இதுதவிர இன்னும் யாழ்ப்பாணத்து மக்களிடம் பல பாரம்பரியங்கள், நம்பிக்கைகள் பேணப்பட்டு வருகின்றன. இல்லை இல்லை பேணப்பட்டு வந்தன. என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் அந்த அம்சங்கள் எல்லாம் இன்று கப்பலேறத் தொடங்கியுள்ளன என்பதே உண்மை.

இன்று யாழ்.பஸ் நிலையப் பகுதி தவறான நடத்தைகளுக்கான மையப்புள்ளியாக மாறிவருவதாக சமூக அக்கறையுள்ளவர்கள் பலரும் சுட்டிக்காட்டிவருகின்றார்கள். தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்வதாகவோ அல்லது வேறேதோ முக்கியமான அலுவலுக்காக செல்வதாகவோ கூறி வீட்டிலிருந்து "சிங்கிளாகப்" புறப்படும் இளசுகள் பஸ்நிலையத்தில் சோடிகளாக மாறி எங்கெங்கோ வெல்லாம் செல்வதை கண்கூடாகக் கண்டு வருகின்றோம். இவர்கள் அணியும் ஆடைகளைப் பார்த்தால் இவர்கள் உண்மையிலேயே தமிழர்கள்தானா அல்லது ஏனைய இனத்தவர்களா என்று அடையாளம் காணமுடியாமல் இருக்கின்றது. ஏனைய இடங்களுக்குச் செல்லும் யாழ்ப்பாணத்தவர்கள் தவிர்க்கமுடியாத கால, இடச்சூழ்நிலைகளால் தம்மை ஏனைய இனத்தவர்களைப்போன்று மாற்றிக் கொண்டனர். அது அந்தநேரத்தில் அவர்களின் பாதுகாப்புக்குப் பெரிதும் உதவியது. ஆனால் இந்தமாற்றம்கூட இன்று தேவையற்றதொன்றாக இருக்கிறது. அதற்காக எமது கலை பண்பாடுகளைத் தூக்கியெறிய வேண்டிய அவசியமில்லை.

போர், அது சார்ந்து உருவான புறச்சூழல் என்பனவெல்லாம் கலாசாரச் சீரழிவுகளை ஓரளவுக்கு கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. ஆனால் அவையெல்லாம் விலகியவுடன் மிக மோசமான சூழலுக்குள் எமது இளையவர்கள் பிரவேசிக்கத் தொடங்கிவிட்டார்கள். எம்மைப் பின்பற்ற இளைய சந்ததியினர் வளர்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு நாம் முன்னுதாரணமாக இருத்தல் வேண்டுமென்பதனை யாரும் மறந்துவிடக் கூடாது.

இன்று யாழ்ப்பாணத்தில் சமூகசீர்கேடுகள் தாராளமாக இடம்பெற்றுக் கொண்டிருப்பதை யாராலும் மறுக்க முடியாது. பெற்ற குழந்தையை மறுகணமே உயிருடன் பொதி செய்து வீதியில் விட்டுச் செல்வதும், மறுகணமே கொலைசெய்து குப்பைபோன்று குழந்தையை வீதியில் விசுவதும், பாழ

டைந்த கிணற்றினுள் போடும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இப்படியெல்லாம் செய்வதற்கு பெற்றமனம் கல்லாகத்தானே மாறுகிறது!!! அண்மையில் நடந்த சம்பவம்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

கொக்குவில் பகுதியில் சாக்கினுள் வைத்துச் சுற்றப்பட்ட நிலையில் வீதியில் கைவிடப்பட்ட சிசு ஒன்றைப் பெண்ஒருவர் கண்டிருக்கிறார். உதிரமும் கண்ணீரும் மழைநீரும் சேர்ந்து சாக்கு முழுவதையும் ஈரமாக்கியிருந்தன. ஆனாலும் துளிகூட நெஞ்சில் ஈரமில்லாமல் ஒரு சிசுவை சாக்கில் சுற்றி யாரோ வீசி விட்டுப் போயிருக்கிறார்கள். தொப்புள் கொடிகூட அறுக்கப்படாமல் ஒரு அவசரத்தனத்தோடு அந்தச் சிசு எறியப்பட்டிருந்தது. பிரசவித்த மறுநொடியே பெற்ற வளால் தூக்கி வீசப்பட்ட அவலம் புரியாமல் அந்தச் சிசு தாயின் அரவணைப்பைத் தேடி அழுது கொண்டிருந்தது.

இந்தக் குழந்தை வீசப்பட்டுக் கிடந்த சாக்கினுள் ஒரு "பெற்சீற்"றும் தாயின் "கவுண்" ஒன்றும் இருந்தன. கிராமசேவகர் ஊடாக பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டது. இப்போது அந்தக் குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டு நலமாக உள்ளது. ஆனாலும் அந்தக் குழந்தை இன்னமும் தாயின் அரவணைப்புக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது.

மாசியப்பிட்டியில் நடந்த மற்றொரு சம்பவம். பிறிதொரு இடத்திலிருந்து வந்து மாசியப்பிட்டியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்து குழந்தையைப் பிரசவித்துவிட்டு குழந்தை இறந்தபின்னர் பாழடைந்த கிணற்றினுள் போட்டுவிட்டு மறுகாரியம் பார்க்கச் சென்றுவிட்டார் அந்த இளம்தாய். ஆனால் அவருக்கு அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டதனால் அதனைத் தாங்கமுடியாது சிகிச்சைக்கென வைத்தியரை நாடியுள்ளார். அவரைச் சோதித்துப்பார்த்த போதுதான் அவர் குழந்தை பெற்றவரென்பது கண்டறியப்பட்டது. இது பற்றி விசாரணைக்குட்படுத்திய போதே அவர் உண்மையை வெளியிட்டார். பின்னர் அக்குழந்தையின் சடலம் குறித்த கிணற்றினுள் இருந்து மீட்கப்பட்டது.

இதனைவிட இன்னொரு கவலைக்குரிய ஆனால் சிரிப்பை ஏற்படுத்தக்கூடியதான சம்பவமும் நடந்தேறியுள்ளது. யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலை யொன்றில் கல்வி கற்கும் மாணவியொருவர் கர்ப்பம் தரித்து சிலமாதங்களின் பின்னர் வயிறு அதிகமாக வளர்ச்சியடையவே வைத்தியரிடம் சென்றுள்ளார். சோதித்துப் பார்த்தபோது அவர் கர்ப்பமாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டது. என்ன நடந்தது என்று வைத்தியர் விசாரிக்கவே "தினமும் உடற்பயிற்சி (jim) செய்வதால் வயிறு இப்படி யிருக்கின்றதென்று" அந்த மாணவி கூறினாராம்.

இவ்வாறெல்லாம் சம்பவங்கள் நிகழுமளவுக்கு குடாநாட்டு இளம்சந்ததி சீர்கெட்டுப் போயிருக்கிறது. இதன் பின்விளைவுகள் பற்றித் தெரிந்தும் விரும்பிச் செயற்பட்டாரா? அல்லது பின்விளைவுகள் பற்றிச் சிந்திக்காது, இவரது நண்பர் குழுவின் நெறிப்படுத்தலினால் நடந்துகொண்டதால் இந்த நிலைமைக்கு உள்ளானாரா? உரியவர்களுக்கே இது வெளிச்சம். கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிக்கும் பூனையின் கதை போலவே இவர்களின் கதையும் இருக்கிறது.

இந்த விடயத்தில் மாணவர்கள் மட்டுமின்றி ஆசிரியர்களும் அதையும்விட பெற்றோர்கள் கூடிய கவனம் எடுத்துச் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதை ஒவ்வொரு பெற்றோர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதனையும்விட அநேகமான பெண்கள் இராணுவ சிப்பாய்களுடன் தொடர்பு வைத்திருந்து பிள்ளை பெற்றுக் கொள்வது மட்டுமல்லாமல் திருமணம் முடிக்கும் சம்பவங்கள் இப்பொழுது வெகு சாதாரணமாக குடாநாட்டில் நிகழ்ந்து வருகின்றன. அதுவும் சில இடங்களில் பெற்றோரின் சம்மதத்துடன்.

ஆரம்பத்தில் சாதாரணமாகக் கதைக்கத் தொடங்கும் இவர்கள் பிறகு பிறகு தவறான நிலைக்கு தங்களை அறியாமலேயே மாறிவிடுகின்றனர்.

இதனை எதிர் பார்த்திருக்கும் இராணுவத்தினரும் தமிழ்ப் பெண்களைத் திருமணம் முடிப்பதில் குறியாக இருக்கின்றனர். ஆனால் இவர்கள் ஏற்கனவே திருமணமானவர்களா? ஏனையோருடன் தொடர்புள்ளவரா? என எதுவும் அறியாது பின்விளைவுகளைச் சிந்திக்காது எமது பெண்கள் செயற்படுகின்றனர். இதற்குச் சில பெற்றோர்களும் உடந்தையாக இருப்பதே ஆகக் கவலைதரும் விடயமாகும். இது பெரும் சிக்கலில் முடியும் என்பதனை முன்னர் இவ்வாறு ஏமாற்றப் பட்டவர்களிடமிருந்து எம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று குடாநாட்டில் வாழும் மக்களின் தொகையைவிட அவர்கள் பாவிக்கும் செல்போன்களின் தொகை அதிகமாயிருக்கும்போலத் தெரிகிறது. வீதியில் பயணிப்பவர்களில் அதிகமானோர் காதுகளில் செல்போன்களை பொருத்தியபடி தம்பாட்டுக்குச் சிரித்துக் கதைத்தபடி சென்று கொண்டிருப்பார்கள். இவர்களில் அனேகமானோர் இளைஞர்களே. இத்தகைய ரேடிமெட் காதல்களின் பெறுபேறுகளே கடைசியில் கைவிடப்பட்ட குழந்தைகளாக மாறுகின்றன. வெறுமனே பாலினக் கவர்ச்சியில் மயங்கித் தவறான பாதையில் பயணிக்கும் இளையவர்கள் தமக்குப் பின்னே நீண்டு கிடக்கும் பெரும் பாதையைக் கவனிக்க மறந்துவிடுகிறார்கள். இதுவே அவர்களது காதலுக்கு முற்றுப்புள்ளியை வைத்துவிடுகிறது. அனேகமாக ரெடிமேட்காதல் தந்த பரிசுகளைப் பெண்களே சுமக்க வேண்டியதாகி விடுகின்றது. அவர்களும் ஏதோ ஒரு வழியில் ஊருக்குத் தெரியாமல் உண்மைகளை மறைத்து இறுதியில் சந்தி சிரிக்கிற அளவுக்கு பரிதாபமான நிலைக்குச் சென்று விடுகிறார்கள்.

குடாநாடெங்கும் மலிந்து போய்விட்ட உல்லாச விடுதிகளின் பெருக்கம், ஆபாசப் படங்களின் அதிகரிப்பு தவறான பாதைக்கு வழிகாட்டும் இணையத்தளங்களின் உள்நுழைவு போதைப் பொருள் பாவனை போன்றவையெல்லாம் இத்தகைய மோசமான நிலைக்கு நமது இளையவர்களைக் கைபிடித்து அழைத்துச் செல்கின்றன. இதனை எல்லோருமே கண்ணுற்றாலும் எவருமே தடைசெய்யவோ கட்டுப்படுத்தவோ முன்வரவில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள சில திரையரங்குகளில் காதலர்களுக்கான தனிப்பட்ட அறைகளும் சாதாரணமாக வழங்கப்படுகின்றனவாம். கணநேரத் தவறுகள் காரணமாக ஒரு குழந்தைக்கு தாயாகி பின்னர் பிரசவமானவுடனேயே அவற்றைக் கைகழுவிவிடுவதற்கு சில நியாயப்பாடுகளை அவர்கள் தமக்குத்தாமே சொல்லக்கூடும். குடும்ப கௌரவம், சகோதரர்களின் சமூக அந்தஸ்து நிலை, எதிர்காலம் பற்றிய தொலை நோக்கு இவற்றை தக்கவைத்துக் கொள்ளவே தவறின் அடையாளமான சிசுக்களை உதறிவிடுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனாலும் உண்மையில் தமது தவறுகளை மறைப்பதற்காக தமது எதிர்காலத்தின் இருப்புக்காக எதுவுமே அறியாத மனித உயிர் ஒன்றோடு விளையாடுவது உலகிலேயே மிகப்பெரிய பாவகாரியம் என்பதை இவர்கள் அறியாதவர்களா?

இவ்வாறு கைவிடப்பட்டு தப்புகின்ற குழந்தைகள்கூட மனக் குறைகளுடன் வளரவேண்டியுள்ளது. இத்தகைய மனக்குறைகள் எதிர்காலத்தில் இந்த சமூகத்தின் மீது கோபம்கொள்ளக்கூடிய மனிதனை உருவாக்கிவிடும். அது சமூக சீரழிவுகள் பெருக புதிய வழியைத் திறந்துவிடுவதாகவே இருக்கும்.

இன்று இளையவர்கள் மீது எமது சமூகத்தின் இருப்புக்கான பாரிய பொறுப்பு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. இதை உணர்ந்து சமூகத்தின் இருப்பினைக் கறையான்கள் போல் அரித்துச் செல்லும் எதிர்மறையான பண்புகளை இனங்கண்டு அவற்றைத் தடுப்பதற்கான திராணியை ஒவ்வொருவருமே வரவழைத்துக் கொள்ளவேண்டும். பருவநிலையை அடைந்து விட்ட தத்தம் பிள்ளைகள் மீது பெற்றோர் அக்கறையோடு ஒருகண் வைத்திருக்க வேண்டும். அவர்கள் தவறு விடும்போதாவது மாத்திரம் தட்டிக்கேட்டு சரியான வழிக்கு திசைதிருப்ப வேண்டும். ஒவ்வொரு பெற்றோருமே அவ்வாறு செய்தால் எந்தவொரு இளையதலைமுறையும் எப்படி தவறுசெய்ய முடியும்???

இளையவர்கள் சிந்திப்பார்களா??

இயற்கையின் கொடையான பழங்களில் சிலவற்றை நேரடியாக அப்படியே சாப்பிடலாம். சிலவற்றைக் காயவைத்து பதப்படுத்தி சாப்பிடலாம். பழங்கள் அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டவை. அதில் பாலைவனப் பகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாக உள்ள பழங்களில் பேரீச்சம்பழம் முதலிடம் வகிக்கிறது. இது மிகவும் சத்துள்ள பழமாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் பழம். இது ஆப்பிரிக்கா, அரபு நாடுகளில் மட்டுமே அதிகம் விளைகின்றது. வெப்பம் அதிகமுள்ள பாலைவனப் பகுதிகள் இதன் வளர்ச்சிக்கு ஏற்றதாகும். இதற்கேற்ற தட்ப வெப்ப நிலை நம் நாட்டில் இல்லாததால் இங்கு விளைவதில்லை. இப்பழங்கள் அரபு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட இந்த பழங்கள் எவ்வளவு ஆண்டுகள் ஆனாலும் கெட்டுப் போகாமல் இருக்கும். அரபு மக்களின் உணவுப் பொருட்களில் இதுவே முக்கிய இடம் பெறுகின்றது.

ஆயுர்வேத, யுனானி, சித்த மருத்துவத்தில் பேரீச்சம்பழம் முக்கிய இடம் வகிக்கிறது. சூரிய சக்திகள் அனைத்தையும் தன்னுள்ளே கொண்ட பழம்தான் பேரீச்சம்பழம். இந்தப் பழத்தில் இரும்புச் சத்து, கல்சியச் சத்து, விட்டமின் ஏ, பி, பி2, பி5 மற்றும் விட்டமின் இ சத்துக்கள் நிறைந்துள்ளன.

பட்டாம் பூச்சிகளும் பதின்ம வயதினரும்

அன்பழகன்

வண்ணாத்திப் பூச்சிகளில் பல ரகங்கள் உண்டு. ஒவ்வொன்றும் தனித்துவமான வடிவமைப்புடன் கண்ணைக் கவரும் வகையில் அசைவாடிக் கொண்டிருக்கும். பூக்கள் நிறைந்த சோலைகளில் பூக்களோடு பூக்களாக யாருடைய வடிவம் அழகானது என்று பார்ப்பவரை மயக்கும் வகையில் அவை பறந்து திரிவது கண்கொள்ளாக் காட்சி.

அவற்றைக் கைகளால் பிடிக்கவேண்டும் என்ற ஆவல் தோன்றினாலும் அப்படிப் பிடிக்கும் போது அவற்றின் சிறகுகள் ஒடிந்து விடுமோ என்ற பரிதாப உணர்வு சிறுவர்களுக்குக்கூட ஏற்படுவதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இத்தகைய ஒரு இடத்தில் திடீரென ஒருவர் வந்து "ஐயோ இந்தப் பூச்சியைத் தொடாதீர்கள். இது பயங்கரமான ஒரு ஜந்து. இதை நீங்கள் தொட்டாலோ அல்லது அது உங்கள்மேல் விழுந்தாலோ நீங்கள் நீங்களாக இருக்கமுடியாது. சொறி பிடித்தவர் போல அலைய வேண்டி வரும்" என்று கத்திக்கொண்டு அந்தப் பூச்சிகளை அடித்துக் கொல்ல முற்பட்டால் நாம் என்ன செய்வோம்? அவருக்குப் பைத்தியம் என்று தீர்மானித்து அவரைத் தடுத்து நிறுத்துவோம்.

ஆனால் அவர் கூறிய விடயத்தில் உண்மை இல்லாமலில்லை. ஏனென்றால் அவருடைய அனுபவம் அப்படி. சில வாரங்களுக்கு முன்னர் அந்த வண்ணாத்திப் பூச்சி அப்படியான ஒரு ஜந்துவாகத் தான் இருந்தது. அந்தக் காலத்தில் அந்தப் பூச்சியின் பெயர் மயிர்கொட்டி. அருவருப்பான புழு வடிவம். தரையிலும் மரங்களிலும் ஊர்ந்தே திரியும். இலைகளை அதன் அழுக்குகளுடன் சாப்பிடும். அது கொட்டிய மயிர் பட்டால் உடலில் தடிப்புகள் ஏற்படுவதோடு மிகுந்த அசௌகரியம் ஏற்படும். இந்தப் புழுவைக் கண்டவுனேயே பார்த்தவருக்குக் கையும் ஓடாது காலும் ஓடாது. உடனேயே அதை எப்படியும் அழித்து விட்டுத் தான் மறுவேலை பார்ப்பர்.

வண்ணாத்திப் பூச்சியை வெறுத்து, அதை வதை செய்து, கோபமூட்டி வேடிக்கை பார்ப்பவர்களை நாம் பைத்தியக்காரர் என்கிறோம். ஆனால் மயிர்கொட்டியைக் கொல்பவர்களைப் புத்திசாலிகள் என்கிறோம். மனிதருடைய வெறித்தனத்துக்குத் தப்பிப் பிழைத்த மயிர் கொட்டிப் புழுக்கள்தான் அழகான வண்ணாத்திப் பூச்சிகளாகப் பறந்து திரிகின்றன. ஒவ்வொரு மயிர்கொட்டியும் கொல்லப்படும்போது ஒரு வண்ணாத்திப்பூச்சி அழிக்கப்படுகின்றது.

இதே நிலையில்தான் பிள்ளைகளும் பதின்ம வயதினரும் இருக்கின்றனர். வாலிபப் பருவத்திற்குள் இருக்கும் பதின்ம வயதினர் பெரியவர்களின் பார்வையில் அருவருப்புடையவராகக் காணப்படுகின்றனர். அவர்கள் செய்யும் காரியங்கள் அனைத்துமே பெரியவர்களைக் கோபப்படுத்துவதாக அமைகின்றன. ஏனென்றால் பிள்ளைகளுடைய பருவம் வளரும் பருவமே தவிர வளர்ந்த பருவம் அல்ல. ஆராய்ந்து அனுபவித்து அறியும் காலம். ஆனால் பெற்றோரும் ஆசிரியரும் பதின்ம வயதினரை நல்வழிப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு அவர்களின் செயல்களைக் கண்டித்துத் திருத்த முனைகின்றனர். கண்டிப்பும் அவசியம், திருத்தமும் அவசியம். ஆனால் அது பிள்ளைகளின் அனுபவ அறிவுக்குத் தடை போடக் கூடாது. தமது அனுபவத்தின் மூலம் தாம் கற்றுக் கொண்டவற்றை பிள்ளைகள் மேல், வளர்ந்தவர்கள் திணிக்கின்றனர். இப்படியான பல அறிவுறுத்தல்கள் காலாவதியானவை. தற்காலத்துக்குப் பொருந்தாதவை. இந்த அறிவு பெற்றோரின் காலத்தில் அரிதாயிருந்திருக்கலாம். ஆனால் பிள்ளைகளின் காலத்திற்கு முற்றிலும் பொருந்தாததாகவும் அமையலாம். தோல்விகள் வரவே கூடாது என்ற அச்ச உணர்வினால் பிள்ளைகளைப் பாதுகாக்க முனைபவர்கள், அவர்களிடமிருந்து பட்டறிவைப் பறித்துவிடுகின்றனர். மயிர்கொட்டிப் புழுவிற்குள் ஒரு வண்ணாத்திப் பூச்சி இருக்கின்றது.

மயிர்கொட்டிப் புழுவுக்கு 'உண்ணும் இயந்திரம் என்ற ஒரு அடைமொழியும் உண்டு. அது மறுரூப மடையும் கூட்டுப் புழுப் பருவத்தில் அந்த உணவு தான் சிறகுகளாக உருவெடுக்கின்றது. ஒவ்வொரு பதின்ம வயதினருக்குள்ளும் அபரிமித திறமை பொதிந்துள்ளது என்ற உணர்வு, அவர்கள் மேல் பரிவையும் மதிப்பையும் உயர்த்தும். அனுபவங்கள் சிலாகிக்கப் படும்போது அவை கலையாகவும், கற்பனையாகவும், வாழ்வின் நோக்கங்களாகவும் சிறகடிக்கின்றன●





பா. ஜூட்

புத்தளம் மாவட்டத்தின் இறால் உற்பத்தியும் அதிகரித்துவரும் கூடிலயற் பிரச்சினையும்.

கடல் உணவுகள் என்றால் யாராலும் விரும்பி உண்ணக்கூடியவையும் போசணை நிறைந்ததுமென்றால் மறுபேச்சுக்கு இடமில்லை. அதுவும் இறாலைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? சுவையானதும் எல்லோராலும் விரும்பி உண்ணக்கூடியதுமாகும். அதிலும் பொரித்த இறால்கறி என்றால் சொல்லத் தேவையில்லை. ம்... சொல்லும் போதே வாய் ஊறுகிறது.

அண்மையில் புத்தளம் மாவட்டத்தின் உடப்புப் பகுதிக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிட்டியது. அங்குள்ள இறால் உற்பத்தி செய்யும் வாடிக்கு போய் பண்ணையாளர்களைச் சந்தித்து பல விடயங்களைச் சேகரித்தோம்.

வடமேல் மாகாணத்தில் இறால் வளர்ப்பானது 120 km நீளமும் 10km அகலமும் கொண்ட நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படுகிறது. சிலாபம் கடல்நீரேரி, முந்தல் கடல்நீரேரி, புத்தளம் கடல்நீரேரி என்பன இதற்குள் உள்ளடங்குகின்றன. நிலமானது களப்பு, கடல் நீரேரியைக் கொண்ட பிரதேசமாகவும் உவர் நீரைக் கொண்ட பிரதேசமாகவும் இருத்தல் வேண்டும். இறால் வளர்ப்புக்கு 75 சதவீத நிலப்பசளை இருத்தல் வேண்டும். இந்த அம்சங்களைக் கொண்டதாகக் விளங்குகிறது உடப்பு பிரதேசம். இங்கு சட்டபூர்வ இறால் பண்ணைகளும் பாரிய நிலப்பரப்பில் காணப்படுகின்றன. இங்குள்ளவர்களில் 70 சதவீதமானோர் இறால்பண்ணைத் தொழிலில் ஈடுபடுபவர்களாக இருக்கின்றனர்.

இறால் வளர்ப்புப் பற்றி செ. சிவலோகநாதன் என்பவர் கூறுகையில், "இந்த இறால் வளர்ப்பை 8 வருடங்களாகச் செய்துகொண்டிருக்கின்றேன். இந்த இறால் பண்ட் (Bund) செய்யும் முறையானது, முதலில் டோசர் போட்டு (Douser) கழுவி பின்னர் 3,4 அடிக்குத் தண்ணீர் விட்டு நிரப்பி அதனுள் இறால் குஞ்சுகளை விடுவோம். இதனை சுமார் நான்கரை மாதங்கள்வரை வளர்ப்போம். நாம் உற்பத்தி செய்யும் இறாலுக்கு நிரந்தரமான வலை இருக்குமெனின் நல்லது. பண்டுகளின் (Bund) அளவுக்கு ஏற்ப வளர்க்கப்படும் இறால்களின் எண்ணிக்கையும் வேறுபடும். சரியாகக் கூறவதெனின் ஒரு இலட்சத்திலிருந்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வரையான குஞ்சுகள் விடப்படுகின்றன. "ஒரு நாளைக்கு 5 வேளைகள் உணவு போடப்படுகின்றன. சில நாட்களுக்கு ஒரு தடவை விற்றமின்களும் நோய்த் தடுப்பு மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன. ஒரு இறால் 30 கிராமிலிருந்து 50 கிராம் வரை வளர்ச்சியடையக்கூடியது. 25 கிராம் நிறையை அடைந்ததும் விற்பனைக்கான நிலையை அடைகின்றன. இவற்றைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் நேரடியாக களத்துக்குச் சென்றே கொள்வனவு செய்கின்றன" என்றார்.



19 வயதான சு. கமலேஸ்வரன் என்பவரைச் சந்தித்தோம். வயதில் சிறியவராக இருந்தாலும் அவர் கூறிய விடயங்கள் காத்திரமானதாக இருந்தன.

"மூன்று வருடங்களாக இறால் வளர்ப்பை மேற் கொண்டு வருகின்றேன். எனது அப்பா வெளிநாடு சென்றபின்னர் நான்தான் இதனைச் செய்து வருகிறேன். நாம் உற்பத்தி செய்யும் 25 கிராம் இறாலுக்கு 700 ரூபாவும், 30 கிராம் இறாலுக்கு 800 ரூபாவும் விலை கிடைக்கிறது. வருடத்துக்கு இரண்டு போகம் இறால் வளர்ப்பை மேற்கொள்கிறோம். சிலவேளைகளில்

இறால்களுக்கு ஒருவகைத் தொற்று நோய் ஏற்படும். இதனால் அவை இறப்பதோடு எமக்குப் பாரிய நட்டமும் ஏற்படும். மழைநீரும் பண்ணை வளர்ப்புக்கு அவசியமானது. காரணம் இந்நிலநீரின் உப்புத் தன்மையைச் சமநிலையாக வைத்திருப்பதற்கு. மழை அதிகம் பெய்தாலும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே குறைந்தளவான மழை போதுமானது. இங்கு உற்பத்தி செய்யப்படும் இறால்களை Celon food, Prown Ceylon, Snimac போன்ற கம்பனிகள் கொள்வனவு செய்கின்றன" என்றார்.

இங்குள்ள பண்ணையாளர்களின் முக்கிய எதிர் பார்ப்பு தமது உற்பத்திக்கு நிலையான விலை கிடைக்க வேண்டும் என்பதுதான். ஆனால் தமது நிலைப்பாட்டைக் கூறி பண்ணைகளை நடத்திவரும் இவர்களுக்கு இவர்களது சமூகத்தினரால் பலத்த எதிர்ப்புநிலை இருந்துகொண்டிருப்பதனையும் நாம் கவனிக்கத் தவறவில்லை. நன்னீர் இறால் வளர்ப்பு, உவர் நீர் இறால் வளர்ப்பு என்ற இந்த இரு செயற்பாடுகள்தான் இன்றைய சூழலின் நிலை பேணுகைக்கு சவால் விடும் காரணிகளாக இருந்து வருகின்றன.

மனித உணவுக்காகவும், மீன்களின் இரைகளுக் காகவும், அலங்கார வளர்ப்புகளுக்காகவும் என பல இன இறால்கள் வளர்க்கப்படுகின்றன. இவற்றில் அரிய வகை இறால்களான எஸ்.பி, எப்.எல் மற்றும் வெள்ளை இறால் முதலானவை அதிகமாக பண்ணையாளர்களால் வளர்க்கப்படுகின்றன. காரணம் இவை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொடுக்கின்றன. இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில் சூழலுக்கும் மனிதனுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி எதுவித கவனமும் செலுத்தப்படாமல் இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றமையே. மேற்குலக நாடுகளில் இறால் வளர்ப்பு சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப் படுகிறது. ஆனால் இங்கு நிலைமை தலைகீழாக உள்ளது.

30 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையான சங்கர் "இங்கு இறால் வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவும் பூரண பயற்சி அற்றவர்களாகவும் இருக்கின்றனர். முறையற்ற வளர்ப்பு முறையில் ஈடுபடுகின்றனர். இதனால்தான் ஒருவகைத் தோல்நோய்க்கு நாம் ஆளாகின்றோம். வாந்திபேதி ஏற்படுகிறது. கடந்த மூன்று மாதத்தில் மட்டும் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இறால் நிலைகளிலிருந்து கழிவுநீரை நேரடியாக நீர் நிலைகளில் விடுதலே இதற்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது" என்றார்.

28 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான லலிதா என்பவர் இதுபற்றிக் கூறுகையில், நாங்கள் விவசாயத்தில் ஈடுபடுகிறோம். ஆனால் மழைக்காலங் களில் வெள்ளப்பெருக்கினால் இறால் பண்ணைகளி லிருந்து வெளிப்படும் கழிவுநீர் எங்கள் பயிர் நிலங் களுக்குள் செல்வதால் அவை நாசமாகின்றன. நிலம் நச்சுத் தன்மையாக மாறுகிறது" என்றார்.

"நான் 12 வருடங்களாக கால்நடைகளை வளர்த்து சீவிக்கிறேன். இங்கு மேய்ச்சல் நிலங்கள் குறைவு. இருக்கிற மேய்ச்சல் நிலங்களையும் பண்ணை யாளர்கள் இறால் வளர்ப்புக்கென அபகரிக்கிறார்கள். இதனால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிறது" என்றார் சிவகுமார்.

இங்கு 70 வீதமானோர் இறால் வளர்ப்பில் ஈடுபடும் அதேவேளை 75 வீதமானோர் பண்ணைச் செய்கையால் தோற்றுவிக்கப்படும் துன்பங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருதரப்பினர் களுக்கிடையேயும் சமூகவியலோடு தொடர்புடைய பிரச்சினைகள் நிலவுவதோடு திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறுகின்றதாம். அதாவது உடப்புப் பிரதேசத் தில் ஒருவிச்சு வலையின் மூலம் 2500 ரூபாய் பெறுமதிக்கு இறால்களைப் பிடிக்கமுடிகிறது. இதே வேளை ஒரு மீனவர் நாள்முழுதும் மீன்பிடித்தாலும் இவ்வாறான பணத்தொகையைச் சம்பாதிக்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்தப் பண்ணைகளால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இறால் பண்ணைச் செய்கையாளர்கள் இறால் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்னர் சுற்றாடற் பரிசீலனை செய்யவேண்டும். அது பண்ணைகளினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு பரிசீலனை செய்யப்படும் அறிக்கைகளின் பிரதிகள் இறால் பண்ணை செய்ய அனுமதிக்கும் தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு அனுப்பப்பட வேண்டும். இதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய சாதக, பாதகங்கள் பற்றியும் மக்களுக்கு அறிவிக்கப்படும் என கடற்றொழில் அமைச்சால் அறிவிக்கப்பட்டது. எப்படி யிருந்தாலும் இவற்றினை முற்றாக அமுல்படுத்தி னால்தான் சமூகப் பிரச்சினை பூதாகரமாக வெடிக் காமல் பார்த்துக்கொள்ளலாம். எனவே இது விடயத் தில் அனைவரும் சிந்தித்து நடப்பது கட்டாய தேவை யாகும்●

ஆஸ்துமா நோய் உள்ளவர்கள், சளிபிடித்தவர்கள் ஆகியோர், தக்காளி, பூசணிக்காய், ஐஸ்கிரீம், முள்ளங்கி, நூல்கோல் ஆகியவற்றை உண்ணக் கூடாது. தலைக்கு அரப்பு, சீயக்காய் போட்டு குளிக்கக் கூடாது. மழையில் நனைவதைத் தவிர்க்க வேண்டும். குடிநீரைக் காய்ச்சி வடிகட்டிக் குடிக்க வேண்டும். நாள்தோறும் ஒரு துண்டு பப்பாவி சாப்பிட்டு வர சொரிக்கும் திறன் அதிகரிக்கும். தினசரி வாழைப்பழம் சாப்பிட, குடல்புண் மற்றும் சருமநோயைத் தடுக்கலாம். அருகம்புல் சாற்றை காலை வெறும் வயிற்றில் குடித்து வர, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இஞ்சிச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டு வர, இரத்தம் சுத்தமாகும்.



யாதவன்

காதல் என்னும் உணர்வு எப்படி எழுகிறது? அது நமது மனதில் எழுகையில் நம்மால் அனைத்து சமூக நிலைகளையும் உடைத்தெறிந்துவிட்டு வெளியே வர இயலுமா? காதல், திருமணமாகாத மனிதர்களுக்கு இடையேதான் எழ வேண்டுமா? அது எவ்வாறு நம்மைப் பாதிக்கிறது? காதலைப் பற்றி எந்த வகையிலும் அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. அதற்கு எல்லைகள் இல்லை. இரண்டு நபர்களைக் காதல் எவ்வாறு அலைக்கழிக்கிறது என்பதை மிக அருமையாக நமக்குக் காட்டும் படமே இன் த மூட் போர் லவ். (In the mood for Love)

"சௌ மோ வான்" என்பவன், 1962 இன் ஒரு வசந்த காலத்தில் ஹொங்கொங்கின் மிக நெரிசலான சிறியதொரு அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு அறையை வாடகைக்கு எடுக்க வருகிறான். அந்தக் குடியிருப்பின் உரிமையாளரான சூயன் என்ற பெண்மணி, அவன் கேட்கும் அறை ஏற்கெனவே இன்னொருவருக்குத் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், அவன் அதற்குப் பக்கத்து அறையை வாடகைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றும் சொல்கிறாள். அந்த அறையும் சௌ மோ வானுக்குப் பிடித்துவிடுகிறது.

அவன் தனது உடைமைகளை எடுத்துவரும்போது அவனுக்குப் பக்கத்து அறையிலும் உடைமைகள் வைக்கப்படுகின்றன. இதன் காரணமாக இரண்டு அறைகளின் பொருட்களும் மாறிமாறி வைக்கப்பட்டு விடுகின்றன. அப்பொழுதுதான் தனது பக்கத்து அறையில் ஸோ லாய் ஸென் என்ற ஒரு பெண் குடிவந்திருப்பதைப் பார்க்கிறான் சௌ மோ வான். இவனது அறையில் வைக்கப்பட்டிருக்கும் அவளது சில பொருட்களை வந்து வாங்கிச்செல்கிறாள் ஸோ லாய் ஸென். அவள் ஒரு அலுவலகத்தில் காரியதரிசியாக இருப்பதை அவன் அறிந்து கொள்கிறான். அவனுக்குப் பத்திரிக்கைத் தொழில்.

சௌ மோ வானின் மனைவி மிகவும் பிஸியான வேலையில் இருக்கிறாள். அவள் வீடு வருவதற்கே தினமும் இரவு வெகுநேரம் ஆகிவிடுகிறது. மட்டுமல்லாமல் அவள் அடிக்கடி வெளியூர் வேறு சென்றுகொண்டே இருக்கிறாள். அதனால் எப்பொழுதுமே தனிமையிலேயே இருக்கிறான் சௌ மோ வான். அதேபோல் ஸோ லாய் ஸென்னின் கணவனும் மிகமிகப் பிஸியாக அடிக்கடி வெளிநாடு செல்பவனாக இருக்கிறான். இதனால் அவளும் தனிமையில் விடப்படுகிறாள்.

தான் உணவு உண்ண பக்கத்து உணவுவிடுதிக்குச் செல்கையில் அடிக்கடி ஸோ லாய் ஸென்னைப் பார்க்கிறான் சௌ மோ வான். அவளும் அதே விடுதிக்கு வந்து உணவு வாங்கிச் செல்கிறாள். ஏதும் பேசாமல் மிக மௌனமாக சிறிய தலையசைப்பில் ஒருவரின் இருப்பை மற்றொருவர் புரிந்து கொண்டு இருவரும் கடந்து சென்றுவிடுகிறார்கள்.

ஸோ லாய் ஸென்னின் கணவன் அடிக்கடி வெளிநாடு செல்வதால் அவளிடம் சொல்லி அடுத்தமுறை அவன் செல்லும்போது தனது மனைவிக்கு அழகிய கைப்பை ஒன்றை வாங்கிவரச் சொல்கிறான் சௌ மோ வான். அவளும் தனது கணவனிடம் சொல்வதாகச் சொல்கிறாள். அதேபோல் அவன் அணிந்திருக்கும் டை அவளுக்கு பிடித்து விடுகிறது. தனது மனைவி வெளிநாடு செல்கையில் அதனை வாங்கி வந்ததாகச் சொல்கிறான் அவன். தனது மனைவியிடம் சொல்லி ஸோ லாய் ஸென்னின் கணவனுக்குப் புதிய டை ஒன்றை வாங்கி வர்ச் சொல்வதாகக் கூறுகிறான்.

நாட்கள் செல்கின்றன. ஒருநாள் இருவரும் வெளியே ஓரிடத்தில் எதேச்சையாக சந்தித்துக் கொள்கின்றனர். அப்போது தனது கணவனிடம் சௌ மோ வானின் டையைப் போலவே ஒரு டையைப் பார்த்ததாக ஸோ லாய் ஸென் சொல்கிறாள். அப்போதுதான் இந்த இருவரின் துணைவர்களும் ஒரு ரகசிய உறவில் இருப்பதை இருவருமே தெரிந்துகொள்கிறார்கள்.

அந்த உறவு எப்படி நிகழ்ந்தது என்று இருவரும் பேசிக் கொள்ளத் தொடங்குகிறார்கள். இதில் தொடங்குகிறது இருவருக்குமான நட்பு. மெல்ல மெல்ல இருவரும் வெளியே சந்தித்துக் கொள்ளத் தொடங்க இருவருக்குமே உள்ளுக்குள் சந்தோஷம். ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொள்கின்றனர்.

தான் வேலை பார்க்கும் பத்திரிகையில் ஒரு தொடர் எழுத முழுவு செய்திருப்பதாகவும் அதற்கு ஸோ லாய் ஸென்னின் உதவி வேண்டுமென்றும் சௌ மோ வான் சொல்கிறான். அவளும் சம்மதிக்கிறாள். ஆனால் தங்களது வீடுகள் இருக்கும் நிலையில் அவர்களால் அங்கே சந்தித்துக்கொள்ள முடிவ தில்லை. கதை நடக்கும் அறுபதுகளின் சமூகச் சூழ்நிலை அப்படி. எனவே அக்கம்பக்கத்தினர் தங்களது நட்பைச் சந்தேகப்படாமல் இருக்க வெளியே ஒரு அறை எடுக்கிறான் அவன்.

அங்கு அவ்வப்போது வந்து தொடருக்கான கதையை

உலக
திரைப்
பார்வை

விவாதிக்கிறாள் ஸோ லாய் ஸென். அவளுக்கும் அது பிடித்திருக்கிறது. அப்படிப் பேசுகையில் இருவருமே தங்களது மனதுக்குள் காதல் வளர்வதை உணர்கிறார்கள். ஆனால் தங்களது வாழ்க்கைத் துணைகளை நினைத்து அது தவறு என்றும் நினைக்கிறார்கள்.

இப்படி இருக்கையில் சௌ மோ வானுக்கு சிங்கப்பூரில் ஒரு வேலை கிடைக்கிறது. அதற்குச் செல்ல முடிவு செய்யும் அவன் தன்னுடன் வந்துவிடுமாறு ஸோ லாய் ஸென்னிடம் இறைஞ்சுகிறான். அவளால் முடிவெடுக்க முடிவதில்லை. அவனது அறையில் வெகுநேரம் காத்திருக்கும் சௌ மோ வான் வேறு வழியின்றிக் கிளம்புகிறான். சற்று நேரம் கழித்து தனது வீட்டிலிருந்து ஓடி வரும் ஸோ லாய் ஸென்னை நாம் பார்க்கிறோம். ஆனால் அவள் வருவதற்குள் அவன் கிளம்பிவிட்டிருக்கிறான்.

சிங்கப்பூரில் சௌ மோ வானின் வீடு. ஒருநாள் அலுவலகத்திலிருந்து வீடு வருகையில் யாரோ அங்கு வந்துவிட்டுப் போன அடையாளங்களைக் காண்கிறான் அவன். அங்குள்ள ஒரு சிகரெட்டில் ஒட்டியிருக்கும் லிப்ஸ்டிக் வந்தது யாரென்று அவனுக்குச் சொல்கிறது. அவனுக்கு அதன்பின் ஒரு தொலைபேசியும் வருகிறது. ஆனால் மறுமுனையில் அழுத்தமான மௌனம். அது ஸோ லாய் ஸென்.

ஒருநாள் சௌ மோ வான் தனது அலுவலக நண்பனிடம் பேசிக்கொண்டிருக்கையில் மனதினுள் தாளாத ரகசியம் எதாவது இருந்தால் ஒரு காட்டுக்குள் சென்று ஒரு மரத்தின் பொந்துக்குள் அதனைச் சொல்லிவிட்டால் அந்த அழுத்தம் மனதை விட்டு அகன்றுவிடும் என்றும், அந்த பொந்தினை அதன்பின் அடைத்துவிடவேண்டும் என்றும், அப்படிச்செய்தால் அந்த ரகசியம் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்றும் அந்த நண்பன் சொல்கிறான்.

ஆண்டுகள் கழிகின்றன. ஒருநாள் தனது பழைய வீட்டிற்கு ஸோ லாய் ஸென் தனது குழந்தையுடன் வருகிறாள். தனது புதிய வீடு அவளுக்குப் பிடிக்கவில்லையென்றும் தான் முன்பு இருந்த இந்த வீடுதான் வேண்டுமென்றும் வீட்டு உரிமையாளரான பெண்மணியிடம் சொல்கிறாள். ஆனால் அந்தப் பெண்மணி அமெரிக்கா செல்ல இருப்பதால் அந்த அடுக்குமாடிக் குடியிருப்பை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டுச் சென்றுவிடுகிறாள். தனது பழைய வீட்டிற்கே குடி வருகிறாள் ஸோ லாய் ஸென்.

சிறிது காலம் சென்று அதே குடியிருப்புக்கு சௌ மோ வானும் வருகிறான். தனது பழைய உரிமையாளரைப் பார்க்க வந்ததாகச் சொல்லும் அவன் தான் முன்பு வாழ்ந்த வீட்டைப் பார்க்க விரும்புவதாகச் சொல்கிறான். அந்த வீட்டைப் பார்க்கவும் செய்கிறான் (ஹே ராம் நினைவு வருகிறதா?) அப்போது புதிய உரிமையாளரிடம் பக்கத்து வீட்டில் யாராவது இருக்கிறார்களா என்று அவன் கேட்க அங்கு யாரோ ஒரு பெண்மணி தனது குழந்தையுடன் இருப்பதாகப் பதில் வருகிறது. அங்கிருந்து கனத்த இதயத்துடன் திரும்புகிறான் சௌ மோ வான். பக்கத்து வீட்டில் இருப்பது அவனது காதலி என்று அறியாமலே. சில வருடங்கள் செல்கின்றன. கம்போடியாவிலுள்ள அங்கார் வாட் சிதைந்த கோவில் (டூம்ப் ரைடர் படத்தில் வருமே). அங்கே சௌ மோ வான் நின்றுகொண்டிருக்கிறான். அவனுக்கு முன்னே ஒரு இடிந்த தூண். அதில் ஒரு பொந்து. அந்த பொந்தினுள் தனது மனதில் உள்ள ரகசியத்தை அவன் முணுமுணுக்கிறான். அதன்பின் அந்த பொந்தை அடைக்கவும் செய்கிறான். அவனது செய்கைகளை அந்தப் பழைய கோவில் பார்த்துக்கொண்டிருக்கிறது. நாமும் மனதை அழுத்தும் உணர்வோடு படம் முடிகிறது.

சிதைந்த காதலைப் பற்றி எத்தனையோ படங்கள் உண்டு. அவற்றில் சிறந்த படங்களில் இதுவும் ஒன்று என்று தயங்காமல் சொல்லிவிடலாம். அவ்வளவு அருமையான படம் இது. படம் நெடுக மௌனம் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. ஆரம்பம் முதல் இருவரும் சந்தித்துக்கொள்ளும் ஒவ்வொரு காட்சியும் கவிதை எனலாம். அந்தக் காட்சிகளில் பெருகும் பின்னணி இசை நமது மனதைப் பிழிகிறது.

மௌனத்தைப் போலவே தனிமையும் ஒரு முக்கியமான இடத்தை இப்படத்தில் வகிக்கிறது. இருவரின் தனிமையும் பிரம்மாண்டமாக மாறி அவர்களை அழுத்துவது மிக நல்ல முறையில் இப்படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தனிமையின் காரணமாகவே ஒருவர் மேல் ஒருவருக்கு அன்பு சுரந்து அது காதலாக மாறுகிறது.

அதேபோல் வசனங்களும் இப்படத்தில் மிகக்குறைவு. திரைக்கதை உத்திகளில் ஒரு காட்சியில் நுழைவதும் அதில் இருந்து வெளியேறுவதும் மிக முக்கியம். அதை சரியாக நிர்ணயிப்பதில்தான் அந்த இயக்குநரின் முழுத்திறமையும் உள்ளது. இந்த உத்திக்கு இந்தப் படம் ஒரு மிகச்சிறந்த உதாரணம். ஒரு காட்சியில் மிகமிகத் தாமதமாக நுழைந்து மிக விரைவில் வெளியேற வேண்டும் என்பதே அந்த உத்தி. சொல்ல வந்ததை சரியாகச் சொல்ல வேண்டும்.

ஆனால் இப்படத்தில் எந்தக் காட்சியுமே நீளமாக இல்லை. சட் சட்டென்று வெட்டப்படும் காட்சிகள் அந்தக் குறிப்பிட்ட காட்சியின் சாரம்சத்தை நமக்கு மிகச் சரியாக உணர்த்தி விடுகின்றன. இப்படத்தின் இயக்குநர் வோங் கார் வாய். சமகாலத்திய இயக்குநர்களில் மிக முக்கியமானவராகக் கருதப்படுகிறார்.

In the mood for Love உங்களது உள்ளங்களை மெதுவாக மென்சோகத்தில் ஆழ்த்தும். ஆனால் அந்த சோகத்திலும் ஒரு இனிமை இருப்பதை உணர்வீர்கள்

In the mood for Love

- கண்ணன் -

புள்ளிவிபரங்களின் பின்னால் மறைந்திருக்கும் சோகங்கள்

போரினால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் எண்ணிக்கை 19000 ஆகக் குறைந்து விட்டதாக ஒக்டோபர் மூன்றாவது வாரத்தில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறியிருக்கிறது. 'அகதிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது - அவர்கள் மீளக்குடியேற்றப்பட்டு வருகின்றனர்' என்பதைக் காண்பிக்கவே அரசாங்கம் இப்படியான புள்ளிவிபரங்களை அடிக்கடி வெளியிட்டு வருகிறது. இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீளக் குடியமர்த்துவதற்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை இந்தியாவிடம் காலஅவகாசம் கேட்டிருந்தது இலங்கை அரசாங்கம். அதுபோலவே எப்படியாவது டிசம்பர் மாத இறுதிக்குள் முகாம்களில் உள்ள அகதிகள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்பட்டு விடுவர் போலவே தெரிகிறது. இப்போது மீள்குடியமர்வு முழுமையடைந்தால் போதும் என்ற நிலையிலேயே அரசாங்கம் இருக்கிறது.

ஏனென்றால் முகாம்களில் உள்ள அகதிகள் விவகாரத்தை வைத்துக் கொண்டு இந்தியாவோ அல்லது வேறெந்த நாடோ அதற்குப் பிறகு இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. ஆனால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதுடன் அரசின் பணி முடிந்து போய் விடாது என்பது தான் முக்கியமான விடயம். மீள்குடியேற்றப்படும் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது. ஆனால் அந்த விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்கிறதா என்பது சந்தேகம் தான்.

இன்று மீளக்குடியேற்றப்பட்ட மக்களின் முதன்மையான பிரச்சினை கண்ணிவெடிகள் தான். போரின்போது எழுந்தமானமாக விதைக்கப்பட்ட பெருந்தொகையான கண்ணிவெடிகள் வன்னியெங்கும் பரவிக்கிடக்கின்றன. இதுவரை இராணுவம் மூன்று இலட்சம் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதாகக் கூறியுள்ளது. ஆனாலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள பிரதேசத்தை விட-அகற்றப்படாதுள்ள பிரதேசங்களே அதிகம். 1,887சதுர கி.மீ பரப்பளவு நிலப்பகுதியில் இதுவரை கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெடவெல அண்மையில் தெரிவித்திருந்தார். ஆனால் இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ள நிலப்பரப்பு 2,000 சதுர கி.மீற்றர் என்பது அவர் கொடுத்த புள்ளிவிபரம் தான்.

ஆக மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்குமுதலில் அவர்களை கண்ணிவெடி ஆபத்தில் இருந்து முற்றாக விடுவிக்க வேண்டும். வன்னி மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயம் சார்ந்து வாழ்ந்து பழகியவர்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு முதலில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் நிறைவடைய வேண்டும். அதற்குக் குறுகிய காலஅவகாசம் போதாது போலுள்ளது. அவ்வப்போது கண்ணிவெடிகளை அகற்றும் பணி இறுதிக் கட்டத்தை எட்டுவதாகக் கூறப்படும். ஆனாலும் இப்போதைய நிலவரப்படி பாதிக் கிணறு தான் தாண்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 127 கிராம அலுவலர் பிரிவுகளில் 86 இல் மட்டுமே கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக ஒரு அறிக்கை வெளியாகியுள்ளது. ஏனையவற்றில் மீள்குடியமர்வுக்கான அனுமதி வழங்கப்படவில்லை. இதேபோன்று வடக்கில் எல்லா மாவட்டங்களிலும் கண்ணிவெடிகள் அகற்றப்படாத மீள்குடியமர்வு அனுமதிக்கப்படாத கிராமங்கள்

நிறையவே உள்ளன. போரும் முடிவுக்கு வந்து விட்டது- மீள்குடியமர்வும் முடிந்து விட்டது என்று அரசாங்கம் வாளா இருந்து விடும் போன்ற நிலையையே தற்போது காணமுடிகிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் போரின் வடுக்கள் அனைத்தையும் மூடிமறைத்து - இலங்கையை ஒரு பொருளாதாரக் கேந்திரமாக மாற்றி விட்டதான தோற்றத்தை ஏற்படுத்துவதிலேயே குறியாக இருக்கிறது. அதன்மூலமே நிறையக் காரியங்களைச் சாதிக்கக் கூடிய நிலை அரசுக்கு இருக்கிறது. இந்தியாவின் அழுத்தங்களால் மீள்குடியமர்வை டிசம்பருக்குள் பூரத்தி செய்ய அரசு தயாராகிறது.

ஆனால் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெயர்ந்தவர் களின் மீள்குடியமர்வே இப்போதைக்கு முடிவுறப் போகிறது. மூன்று தசாப்தகால ஆயுதப் போரில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடிய மர்வு இந்தக் காலகட்டத்துக்குள் சாத்தியமாகப் போவதில்லை. அதற்கான எந்த முயற்சிகளிலும் அரசு இறங்கியதாகவும் தெரிய வில்லை. உயர்பாதுகாப்பு வலயங்கள் விழுங்கியுள்ள நிலங்களில் வாழ்ந்தவர்கள், கண்ணிவெடி அபாயம் நீங்காத பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் இன்னமும் மீளக்குடியமர முடியாத நிலையிலேயே உள்ளனர். வன்னியில் கூட மீள்குடியமர்வுக்கு என்று கூட்டிச் செல்லப்பட்ட பெருமளவானோர் சொந்தக் காணிகள் வீடுகளுக்குத் திரும்பவில்லை. அங்குள்ள பெரும்பாலான வீடுகள் அழிக்கப்பட்டுக் கிடக்கின்றன. சொந்தக் காணிகளுக்குள் கூடக் கால் வைக்க முடியாத நிலையிலேயே அங்குள்ள மக்கள் பலர் இருக்கின்றனர். காரணம் படைத்தரப்பினரது அனுமதி இன்னமும் கிடைக்க வில்லை. ஒரு கூடாரத் துணியையோ ஒரு டசின் தகரங்களையோ சில சீமெந்துப் பைகளையோ கொடுத்து விட்டு இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி விட்டோம் என்று மார் தட்டுகிறது அரசாங்கம். இதில் கூட அரசாங்கத்தின் பங்கு என்று சொல்வதற்கு எதுவுமேயில்லை. எல்லாமே வெளிநாடுகளினதும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களினதும் உதவி தான்.

இந்தக் கட்டத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் "இழந்ததையெல்லாம் மீளக் கிடைக்க வேண்டும் என்று மக்கள் ஆசைப்படக் கூடாது" என்று கூறியிருக்கிறார். போரின்போது இழந்த எல்லாவற்றையும் மக்கள் அரசிடம் எதிரபார்க்கக் கூடாது- இது அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாடு என்ற தொனியில் அவரது கருத்து அமைந்துள்ளது. இது இவரது கருத்து மட்டுமல்ல. ஏற்கனவே பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸவும் இதையே தான் கூறியிருந்தார். பெரும்போக அறுவடைக்குப் பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் தமக்கான வீடுகளை அமைத்துக் கொள்ள வேண்டியது அவர்களின் பொறுப்பு என்று கூறியிருந்தார். அரசாங்கம் மீளக்குடியேறிய மக்களின் விடயத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ள முடிகிறது.

இதற்கு தமிழ் அரசியல்வாதிகள், அதிகாரிகள் கூடத் துணை போகின்றனர். எல்லாவற்றையும் போரில் பறிகொடுத்து விட்டு நிற்கின்ற மக்களிடம்- உங்கள் வாழ்விடங்களை நீங்களே அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும்- இழந்ததையெல்லாம் அரசிடம் இருந்து எதிர்பார்க்கக் கூடாது என்றும் கூறுவதில் எந்த நியாயமும் இல்லை. மக்கள் இழந்து போனதையெல்லாம் எந்த அரசினாலும் மீளக் கொடுக்க முடியாது என்பது உண்மை தான். ஆனால் அவர்களுக்கான அடிப்படை வசதிகளையாவது பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசினதும் அரசாங்க அதிகாரிகளினதும் கடமை. ஏனென்றால் போரில் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்கு புலிகள் மட்டும் காரணம் அல்ல- அரசாங்கமும் அதன் படைகளும் கூடக் காரணம் தான். அரசபடைகளின் வான்குண்டுத் தாக்குதல்களாலும், பீரங்கிச் சூடுகளாலும், எறிகணை வீச்சுகளா லும். சிதைத்த வீடுகள் தான் ஏராளம் என்பது பொய்யான கருத் தல்ல.

எனவே மீள்குடியேற்றத்துடன் தமது பொறுப்பு முடிந்தது என்று மக்களை கைகழுவி விடுவது முறையற்ற செயல். அரசாங்கம் அடுத்த வருடத்தில் மீள்குடியேற்ற அமைச்சுக்கு குறைந்தளவு நிதியையே ஒதுக்கப் போகிறது. இதிலிருந்து அது மீள்குடியமர்வில் எந்தளவுக்கு அக்கறை காண்பிக்கப் போகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. வடக்கு மாகாணசபைக்குக் கூட ஒப்பீட்டளவில் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்படவுள்ளது. வடக்கில் போரினால் ஏற்பட்ட அழிவுகளை சீர் செய்வது அபிவிருத்தி செய்வது போன்றவற்றை வெளிநாடுகள் தான் செய்ய வேண்டும் என்றே அரசாங்கம் கருதுகிறது தனது சொந்தக் காசில் அதைச் செய்து கொடுக்க அது தயாரில்லை. அதனால்தான் வன்னியில் மீளக்குடியேறிய மக்களைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் அம்போ வென்று விட்டிருக்கிறது.

மீளக்குடியேறிய மக்களுக்கு ஏதோ உலர் உணவு நிவா ரணம் வழங்கப்படுகிறது. அது கூட அவர்களின் தேவைக்குப் போது மானதல்ல என்ற கருத்து உள்ளது. ஆனால் அவர்கள் தொழில் மற்றும் அடிப்படை வசதிகள் ரீதியாக நிறையவே நெருக்கடிகளைச் சந்திக்கிறார்கள் என்பதைப் பற்றி அரசாங்கம் கவலை கொள்ள வில்லை. மீளக்குடியேற்றப்பட்ட பகுதிகளுக்கு அரசாங்க அதிகாரிகள் செல்வதே இல்லை என்ற குற்றச்சாட்டு எதிரொலித்துக் கொண்டி ருக்கிறது. அவர்களின் பிரச்சினைகளை காது கொடுத்துக் கேட்கவே யாருமில்லை என்றுசோகத்தை வெளிப்படுத்துகிறார்கள். முகாம் களில் இருந்து ஏற்றிக் கொண்டு போய் சொந்த ஊரில் இறக்கி விட் டால் சரி என்றே அரசாங்கம் நடந்து கொள்கிறது. வன்னியில் தமிழ் மக்களுக்குத் தான் இந்தநிலை.

ஆனால் இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் விடயத்தில் அரசின் பார்வை வேறுவிதமானது. அவர்களுக்கான வசதிகள் சலுகைகள் அதிகமானது. இன ரீதியான பாகுபாடு இலங்கையில இல்லாமல் போய் விட்டதாக அரசாங்கம் கூறிக் கொண்டாலும் அதை அனுபவிக்கின்ற மக்களுக்கு அதன் தாக்கம் நன்றாகவே தெரிகிறது. மீளக்குடியேறியவர்கள் அங்கு தொடர்ந்தும் வாழ்வதற் கான வழிகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசினுடையது. அந்தப் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. அதனால் தான் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகள் குவிகின்றன. டிசம்பரு டன் மீள்குடியமர்வு முடிந்து விட்டதாக அரசாங்கம் அறிவிக்கப் போகிறது. அத்தோடு உலகிலேயே மூன்று இலட்சம் இடம்பெயர்ந்த மக்களை குறுகிய காலத்துக்குள் மீளக்குடியமர்த்திய ஒரே நாடு இலங்கை தான் என்று- அரசாங்கம் மார்தட்டப் போகிறது. இது மீளக்குடியேறியவர்களின் பிரச்சினைகள் வெளியே தெரியமுடியாத ஒரு நிலையை ஏற்படுத்தப் போகிறது. மீள்குடியமர்வுக்குப் பின்னால் எதிர்கொள்ளப் போகும் சவால்கள் இடப்பெயர்வுக் காலத்துக்கு ஈடானவை.

இது இவ்வாறிருக்க இந்த மழைக்காலத்தை மீளக் குடியேறிய மக்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள் என்பது கேள்வியாக உள்ளது. இதெல்லாம் குளிரூட்டிய அறைகளில் இருந்து புள்ளிவிபரங்களோடு அறிக்கைகளைக் கொடுக்கின்ற எவருக்கும் தெரியப் போவதில்லை. மழையில் நனைந்து குளிரில் நடுங்கி வெள்ளத்தில் விறைத்து வாழ்க்கை நடத்தப் போகும் மக்களின் துயரங்களை அவர்களால் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. புரிந்து கொள்ளவும் மாட்டார்கள்●

சிறுகதை

ஒரு குடிமகனின் சரித்திரம்

■ தமிழ்நதி

நமக்குத் தெரிந்தவர்களின் உறவினர்களின் பெயர் களைச் சொல்லி எங்கே...? எங்கே...?என்று தேடிக் கொண்டிருக்கும் இந்தக் கொடுங்காலத்தில் 'அவர் கனடா விலை' 'அவ கவியாணம் கட்டி கொழும்பிலை' என்பதை யொத்த பதில்கள் ஆசுவாசம் அளிப்பனவாக இருக்கின்றன. ஷெல்லடியில் சிதைந்துபோன. காணாமல் போன. அங்க வீனர்களாகிய. சிறைப்படுத்தப்பட்ட. சுட்டுக் கொல்லப்பட்ட முகாமில் இருக்கிற வகையிலான பதில்கள் வரக்கூடாதென்பதே எங்களது பிரார்த்தனையாக இருக்கிறது.

அண்மையில் குருட்டு யோசனையோடு அஸ்பெஸ்டாஸ் கூரையில் பல்லி பார்த்துக்கொண்டு சோபாவில் படுத்திருந்தபோது மணியம் மாமா என்னவாகியிருப்பார்? என்ற கேள்வி திடுதிப் பென்று எழுந்தது.

மணியம் மாமா எங்களூர் விதானையார் இல்லை. தபார்காரர் இல்லை. விரல்களில் மிளுங்கும் மோதிரங்களைக் காட்டவென்றே கைகளை வீசிக் கதையளக்கிற பணக்காரரும் இல்லை. என்றாலும் குழந்தைகளுக்குக்கூட அவரைத் தெரிந் திருந்தது. சாப்பாடு தீத்தும்போது நிலவுக்கும் பிள்ளைபிடி காரனுக்கும் மசியாத குழந்தைகள்கூட மணியம் மாமாவின் பெயரைக் கேட்டால் பெரிய வட்டக் கண்களை இன்னும் பெரிதாக்கி முழுசியபடித்துக்கொண்டு அம்மாமார் உருட்டித் தீத்தும் உருண்டை களை வேண்டாவெறுப்பாக விழுங்கித் தீர்க்கத் தலைப்படும் அளவுக்கு மணியம் மாமாவின் பெயர் அவர்களுக்கு அதிபயங்கர மூட்டுவது.

அவர் ஓர் அருமையான குடிகாரர். அப்படித்தான் அவரைச் சொல்லமுடியும். நான் அவரைக் கவனிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து ஊரை விட்டுப் பின்னங்கால் பிடரியில்பட ஓடிவரும்வரை அவர் ஒரேமாதிரியான தோற்றத்தோடும் நடத்தைகளோடும்தானிருந்தார். சுகாதாரத் திணைக்களத்தில் வேலைபார்த்து கட்டாயஓய்வு பெற்றிருந்த அவர் பகல் முழுவதும் தோட்டத்தில் எதையாவது கொத்திக்கொண்டும் கிளறிக்கொண்டும் குந்தியிருப்பார். இல்லையென்றால் அன்னபாக்கியம் மாமிக்குப் பக்கத்தில் அமர்ந்து "எணேய்" "எணேய்" என்று கூப்பிட்டு ஏதாவது கதைசொல்லிக்கொண்டோ கீரை ஆய்ந்து கொடுத்துக் கொண்டோ இருப்பார். அப்படியொரு புருசனை அயலுக்குள் காணமுடியாது. அவர் வைக்கும் பிலாக்காய்க்கறி அக்கம்பக்கத் தில் பிரசித்தம். குசினிக்குள் சர்வசதாகாலமும் எதையாவது அடுப் பில் வைத்துக் கீண்டிக்கொட்டிக்கொண்டிருக்கிற பெண்களது கைக்குக்கூட அந்த ருசியைக் கொணரத் தெரியாது. அவ்வளவு கைப்பக்குவம். மணியம் மாமா சமைக்கும் நாட்களில் ஏலமும் கராம்பும் வறுபடும் மணம் அயலெல்லாம் பரவும்.

பின்னேரம் ஐந்து மணியானதும் அவர் வேறொரு ஆளாகி விடுவார். கண்கள் பரக்குப்பரக்கென்று விழிக்கவாரம்பித்துவிடும். மேளச்சத்தத்திற்கு உருவேறி ஆடுபவரின் முகபாவம் தொற்றிவிடும். அள்ளிக் குளித்துவிட்டு மொட்டைத் தலையுட்பட உடல் முழுவதும் பவுடரை அப்பிப் பூசியபடி சைக்கிளையும் எடுத்துக்கொண்டு கன சுதியாய் வெளிக்கிட்டாரென்றால் கவர்னரே வீட்டுக்கு வந்தாலும் கால்தரித்து நிற்கமாட்டார். அப்படியொரு வேகம். கேற்றுக்கு வெளி யில் நின்று சிநேகிதப்பேய் கூப்பிடுமாப்போல ஒரே பார்வையோடு ஒரே இலக்கை நோக்கிப் போவார். போகும்போது அவர்தான் சைக்கிளைக் கொண்டுபோவார். திரும்பி வரும்போது சைக்கிள் அவரைக் கொண்டுவரும். ஆகினும் கைவறண்டு போகிற நாட்களில் சைக்கிள் சாராயக்கடைக்காரரின் வீட்டில் சார்த்திவைக்கப்பட்டிருக் கும். சைக்கிள் அடைவில் இருக்கும் இரண்டு நாட்களும் அன்னபாக்கியம் மாமியின் முறைப்புக்குப் பயந்து தோட்டத்துக் குள்ளேயே நாள் முழுவதும் குந்திக்கொண்டிருப்பார். இரண்டொரு நாட்களில் மாமி கத்திக் குளறி சண்டை பிடித்து யாரிடமாவது காசு கொடுத்தனுப்பி சைக்கிளை மீட்டுவரச் செய்வா.

மணியம் மாமா குடிக்கப் போகும்போது அவரது வீட்டுப் பூனை கூட அவரைக் கவனியாது. குடித்துவிட்டுத் திரும்பிவரும்போது ஊரே அமர்க்களப்படும். தெரு நாய்களெல்லாம் சேர்ந்து கோரஸாகப் பாடும். இவர் அடிக் ...அடிக்....என்று அடிக்கொரு தடவை நாய்களை வெருட்டியபடி தெருவெல்லாம் காறித்துப்பிக்கொண்டே வருவார். பத்தாததற்குப் பாட்டு வேறு. பெரும்பாலும் பல்லாக்கு வாங்கப் போனேன் ஊர்வலம் போக நான் பாதியிலே திரும்பி வந்தேன் தனிமரமாக....." என்ற பாட்டு கதறிக் கதறி ஓடக் கூடிய அளவுக்கு அதைக் கதைத்துக் கதைத்து தேய்த்துவிட்டார். வேலிகளும் அவரும் கடுஞ் சிநேகிதம். எங்கள் ஊர் ஒழுங்கைகள் அகலம் குறைந்தவை. இந்த வேலியில் முட்டி அந்த வேலியில் கொஞ்சி கனகுதூகலத் தோடு வெகுநேரமாக வீடுதிரும்பிக்கொண்டிருப்பார். தெருநாய்களுக்கு அவரது பாட்டுப் பிடிப் பதில்லை. அதனால் அவை குரோதத் தோடு எதிர்ப்பாட்டுப் பாடுவது வழக்கம். சில்வேளை அவர் தேய்ந்துபோன ரெக்கோர்ட் போல ஒரே பாட்டைத் திருப்பித் திருப்பிப் பாடியது பிடிக்காம லிருந்திருக்கும்.

மணியம் மாமா மிதமாகக் குடித்திருக்கும்போது ஒருமாதிரியும் அதிகமாகக் கவிழ்த்து ஊற்றி யிருந்தால் வேறொரு மாதிரியும் நடந்துகொள்வார். அவரது உடலுக் குள் அன்றைக்கு எவ்வளவு சாராயம் ஊற்றப்பட்டிருக்கிற தென்பதைப் பொறுத்து அன்ன பாக்கியம் மாமியின் இரவுகள் அமையும். நீங்கள் கனக்க கற்பனை செய்யக்கூடாது. அளவாகக் குடித்திருந்தால் அன்னபாக்கியம் மாமி

நன்றி - ஓவியர் ரமணி



திருகோணமலையில் இருந்த தனது சொந்தக்காரர் ஒருவரைப் பார்க்கப் போன மாமா சில நாள் கழித்து அம்மன் கோயி லடிக் கிணற்றுக்குள்ளிருந்து வெளிப்பட்ட கதை ஊருக்குள் பிரசித் தம். இரவு நேரம் கிணற்றுக்குள் யாரோ விழுந்த சத்தம் கேட்டு வயலுக்குள் நின்ற சில பெடியள் ஓடிப்போய்ப் பார்த்தார்கள்.

தெய்வமாகிவிடுவா. நீ என்னை தெய்வம் என்பார். நீ இல்லாட்டி நான் எப்பவோ செத்துப்போயிருப்பன் என்று வாய்கோணி அழுவார். குடிவெறியில் அழும்போது மூக்கு இன்னும் பெரிதாக விடைத்துவிடும். கடைவாயால் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். "சரியப்பா சாப்பிட்டிட்டுப் படுங்கோ..... படுங்கோ....."என்று மாமி எழுபத்தேழாவது தடவையாகச் சொல்வது அந்த இரவில் எங்கள் வீடுவரைக்கும் கேட்கும்.

மணியம் மாமாவைச் சாராயம் குடித்திருக்கும் நாட்களில் அவர் கொம்பேறிமூக்கனாகிவிடுவார். வஞ்சகமில்லாமல் அன்ன பாக்கியம் மாமியையும் பிசாசாக்கிவிடுவார். "எழியேய்....." என்று அழைத்து தூஷணங்களை "இந்தா.... பிடி...." என்பதாய் அள்ளிச்சொரிவார்.

"நீ... அண்டைக்கு என்ன சொன்னனீ....." திடீரென்று ஞாபகம் வந்தாற்போல கேட்பார்.

"என்ன சொன்னனான்.....?"-இது மாமி

"என்ன சொன்னனி எண்டது கூட மறந்துபோச்சோ..... அவ்வளவு கொழுப்பாடி உனக்கு....."

கடைசிவரையில் மாமி என்ன சொன்னவா என்பதை அவருஞ் சொல்லமாட்டார். மாமியும் கேட்கமாட்டா.

"இண்டைக்கு என்ன கிழமை.....?"என்று பதினைந்து தடவையாகிலும் கேட்பார். அப்படிக் கேட்பதைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு இவர் நாளைக்கு விடிய வேலைக்கு எழும்ப வேண்டிய ஆள்என்று நிச்சயம் நினைக்கத்தோன்றும். மாமி மூன்று தடவைக்கு மேல் பதில் சொல்ல மாட்டா. அவரது கேள்வி இடுப்பிலிருக்கும் சறத்தைப் போல அனாதையாகக் கிடக்கும். பொக்கற்றுக்குள்ள அறுபத்தாறு ரூபா முப்பத்தைஞ்சு சதம் இருக்குஎன்பார் கவனமாக. எண்ணிப்பார்த்தால் சரியாகத் தானிருக்கும். அதிலெல்லாம் ஆள் வலுநீதானம்.

மாமா ஊருக்கு வெளியில் தீர்த்தமாடப் போகும் நாட்களில் பெரும்பாலும் அவர் குழந்தையாகிவிடுவார். யாராவது போய்த் தூக்கிக் கொண்டுதான் வரவேண்டும். தூக்கிக்கொண்டு வந்து விறாந்தையில் கிடத்தும்வரை கண்ணை மூடிக்கொண்டிருப்பார். தனது விறாந்தைச் சூடு தனியாக அவருக்குத் தெரியும் போலும். கிடத்தியவுடன் கண்ணைத் திறந்து மாமியைப் பார்த்து குழந்தை களுக்கேயுரிய தெய்வீகப் புன்னகை ஒன்றை வழியவிடுவார். மாமி தனது தலையெழுத்தை நொந்து தலையிலடித்துக்கொள்வா.

அவருக்கு எப்போதோ செத்துப்போன தனது தாயின் ஞாபகம் திடீரென வந்துவிடும். விம்மி விம்மி அழுவார். தங்கச்சிமார் ஞாபகம் பொங்கிப் பொங்கி வரும். "உன்னைப் போய்க் கட்டினன்.... நாயே....நாயே...." என்று வீட்டுக்குள்ளேயே காறித் துப்புவார். வாசலில் படுத்திருக்கும் சீசர் நாய்க்குத் தெரியும் அவர் தன்னைச் சொல்லவில்லையென்று. அதனால் அது மாமியை ஒரு கண்ணை உயர்த்திப் பார்த்துவிட்டுப் பேசாமல் (குரைக்காமல்) படுத்திருக்கும். முப்பது கிலோவுக்கு மேலிருக்கும் சீசரைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு கொஞ்சுவார். என்னை யாராவது விடுவிக்கமாட்டீர்களா?என்பதான பரிதாபப் பார்வையோடு சீசர் அவரது மடியில் பொதுக்கென்று அமர்ந்திருக்கும். மாமிக்குத் தன்னை அவர் நாய் என்று விளிப்பது பிடிக்காது. வாயை வைத்துக்கொண்டிராமல் பதிலுக்கு ஏதாவது சொல்லிவிடுவா. பிறகென்ன மணியம் மாமா கெம்பிக் கிளம்பிவிடுவார். தும்புத் தடியை எடுத்துக்கொண்டு அடிக்க ஓடுவார். பிள்ளைகள் இப்போது அரங்கத்திற்கு வந்தாகவேண்டும். அவர் அடிக்கத் தூக்கிக்கொண்டு போகும் பொருட்களை அவர்கள் வாங்கி வாங்கி ஓரிடத்தில் வைப் பார்கள். இவரும் கொடுத்துக்கொண்டேயிருப்பார். செருப்பு, தும்புத் தடி, கதிரை, கோப்பை, ஈசிச்செயார், தடி இப்படிச் சில ஆயுதங்கள் விறாந்தையில் ஓரிடத்தில் குவிந்து கிடக்கும். பாசுபதாஸ்திரத்தை ஒருமுறைக்குமேல் பிரயோகிக்க மாட்டேன் என்று யாருக்கோ யாரோ சத்தியம் செய்துகொடுத்ததுபோல இரண்டாந் தடவை அவர் அந்தப் பொருட்களை அடிப்பதற்காகப் பிரயோகிக்கமாட்டார். மணியம் மாமா வீட்டு அமளிகளை றேடியோவில் இரவின் முடிவு பாடல்களைக் கேட்பதுபோல நாங்கள் கேட்டுக்கொண்டு படுத்திருப் போம். அவர் சன்னதம் முற்றி அந்த இரவில் வீட்டை விட்டு வெளிக்கிட்டு வீதிக்கு ஓடமுயலும் தருணங்களில் மட்டும் எங்களது வீட்டிலிருந்து யாராவது ஒரு ஆம்பிளை மணியம் மாமாவைப் பிடித்துவரப் போகும். "பிள்ளைகளுக்குத் துணையாக இந்தாளுக்கு வேறை வேலையில்லை....." என்று புறுபுறுத்துக்கொண்டு வெளியே போவார்.

விடிந்ததும் இந்த மனிதரா இரவு இப்படிச் சன்னத மாடியது?என்று வியக்கும்படியாக முன் விறாந்தையில் அமர்ந்து ஆங்கிலப் புத்தகங்களிலொன்றை ஏந்திப் படித்துக்கொண்டிருப்பார். உண்மையிலேயே அவருக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். ஊரிலுள்ளவர்களுக்கு காசு வாங்காத மொழிபெயர்ப்பாளராகவும் அவரே இருந்துவந்தார். அப்படியான நாட்களில் நாங்கள் பச்சை மிளகாய் வெங்காயம் கேட்டு வேண்டுமென்றே மணியம் மாமா வீட்டுக்குப் போவோம். போர்க்களம் முடிந்த அடுத்தநாள் மாமாவின் முகத்தைப் பார்க்காமல் தேத்தண்ணிக் கோப்பையைக் கொண்டு வந்து டங்கென்று ஓசையெழ வைத்துவிட்டு மாமி விறுக்கென்று போவா. மணியம் மாமா கன்சிமிட்டிக்கொண்டே எங்களிடம் கேட் பார்:

"தேத்தண்ணி ஏன் பிள்ளை இப்பிடிக் கொதிக்குது....."

நாங்கள் மாமியைப் பார்த்துச் சிரிப்போம். அவவுக்கும் கொடுப்புக்குள் சிரிப்பு பொத்துக்கொண்டு வருவது தெரியும். எங்களுக்கு மட்டும் தெரியும்படியாக இரகசியமாக ஒரு புன்ன கையை வீசுவா. மாமாவின் பக்கம் திரும்பும்போது மட்டும் கெரு டன் பார்வையை எறிந்துவிட்டுப் போவா. மணியம் மாமா மிகுந்த நகைச்சுவை உணர்ச்சி உடையவர். அது அவ்வப்போது வெளிப் படும். அதிலும் மாமி கோபமாக இருக்கும்போது கிண்டுவதென்றால் அவருக்கு தொதல் சாப்பிடுவதுமாதிரி.

"இந்த மணிக்கூடு இண்டைக்கு ஒரே சத்தமாக் கிடக்கு. பற்றியைக் கழட்டி வைக்கவேணும்"

திருகோணமலையில் இருந்த தனது சொந்தக்காரர் ஒருவரைப் பார்க்கப் போன மாமா சில நாள் கழித்து அம்மன் கோயி லடிக் கிணற்றுக்குள்ளிருந்து வெளிப்பட்ட கதை ஊருக்குள் பிரசித்

தம். இரவு நேரம் கிணற்றுக்குள் யாரோ விழுந்த சத்தம் கேட்டு வயலுக்குள் நின்ற சில பெடியள் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். யாரோ தண்ணீருக்குள் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருந்தது தெரிய, குதித்து மீட்டிருக்கிறார்கள். மேலே கொண்டு வந்து பார்த்தால். அது மணியம் மாமா.

"மணியத்தார் நீங்கள் திருகோணமலைக்கெல்லோ போனனீங்கள் திடீரெண்டு கிணத்துக்குள்ளாலை இருந்து வாறியள்.....?" என்று தூக்கிய பெடியங்களில் ஒருவன் கேட்டிருக்கிறன்.

"திருகோணமலையிலை தொடங்கிற குறுக்கு வழி இஞ்சைதான் வந்து முடியுது....." என்று அவர் ஈரம் சொட்டச் சொட்ட நின்ற நிலையில் சொல்லியிருக்கிறார். தூக்கிவிட்ட பெடியங்கள் கோபித்துக்கொண்டு போய்விட்டார்களாம்.

"என்ன நடந்தது மாமா?" நாங்கள் கேட்டோம்.

"லேற்றாத்தான் பஸ் கிடைச்சுது.... வழியிலை இறங்கித் தேத்தண்ணிகுடிச்சனான். சந்தியிலை இறங்கி குறுக்குவழியாலை வீட்டை போவமெண்டு வந்தால்..... இருந்தாப்போலை பாக்.....தோளிலை கொழுவினபடி இருக்க தண்ணிக்குள்ளை போய்க்கொண்டிருக்கிறன்... இருட்டு.. வழியிலை கொஞ்சம் மாட்டி வேற போட்டன், அறுவார் கிணத்துக்கு கட்டும் கட்டேல்லைப் பிள்ளை....."

"மாமியைக் காதலிச்சா கலியாணம் கட்டினீங்கள்.....?" ஒருநாள் கேட்டுவைத்தோம்.

"அதையேன் கேக்கிறாய் பிள்ளை....." என்று ஆரம்பித்து கதைகதையாகச் சொன்னார்.

"நான் ஒருநாள் இரவு இவையின்ரை வீட்டு ஓட்டைப் பிரிச்சு இவ படுத்திருந்த அறைக்குள்ளை இறங்கீட்டனெல்லோ....." சாகசம் செய்துவிட்ட பெருமிதம் விழிகளில் மிளிரச் சொன்னார்.

மாமி பயந்துபோய்க் கத்தேல்லையா?

"அவவேன் கத்திறா? சத்தம் போடப் போன தங்கச்சியாரையும் அது கொத்தான்டி எண்டு சொல்லி அடக்கின ஆளெல்லோ....."

மாமியின் சுருக்கம் விழுந்த முகத்தில் அப்படியொரு வெட்கம் வந்துவிடும். முகம் கனிந்த பழம் போலாகிவிடும். அத்தகைய பொன் பொழுதுகளில் மாமியைப் பார்க்கும் மாமாவின் கண்களில் காதலானது பென்சன் நாளன்றைய சாராயம்போல பெருக்கெடுத் தோடும். அந்த வயதான காலத்திலும் அவர்கள் ஒருவர் மீதொருவர் அவ்வளவு காதலோடிருந்தார்கள். மாமா அளவுக்கதிகமாகக் குடித்துவிட்டுச் சாப்பிடாமல் படுக்கும் நாட்களில் மாமி அவருக்கு அருகில் அமர்ந்திருந்து பச்சை முட்டையை உடைத்து உடைத்து மாமாவின் வாயில் ஊற்றிக்கொண்டிருப்பாவாம் கடைவாயால் முட்டை வழிய அவர் அடுத்த நாளுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பாராம் என்று அவர்களது பிள்ளைகள் சிரித்தபடி சொல் வார்கள்.

இழந்துபோனோம். எல்லாவற்றையும் எல்லோரையும் ஞாபகங்கள் மட்டுந்தான் மிச்சம்.

பெயர்ந்து பெயர்ந்து பெயர்ந்து இடைத்தங்கிய ஊரொன்றின் வீட்டில் கண்ணிக்குத் தப்பி விதை பொறுக்கும் பறவையென இரகசியமாகப் போய் நிற்கும் நாட்களில் இரவுகளில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்கும். இராணுவம் ரோந்து போவது மனக் கண்ணில் தெரியும். மணியம் மாமா நினைவில் வருவார். இருளடர்ந்த வீதிகளில் அவரது சைக்கிள் அந்த வேலிக்கும் இந்த வேலிக்குமாக உலாஞ்சுகிற காட்சி விரியும். கதைப்பதுபோல கர கரத்த குரலில் அவர் பாடுவது கேட்கும்.

"பல்லாக்கு வாங்கப் போனேன் ஊர்வலம் போக

பாதியிலே திரும்பி வந்தேன் தனிமரமாக.."

பல்லாக்குகளெல்லாம் பாடையில் போகுமென்று யார் கண்டது?

அழகைப் பார்க்கும் ஆண்கள்.. பேர்ஸைப் பார்க்கும் பெண்கள்..

திருமணத் தகவல் தொடர்பு இணையதளம் ஒன்று மேற்கொண்ட ஆய்வில் அழகான பெண்ணே மனைவியாக வரவேண்டும் என ஆண்களும் நல்ல வேலையில் உள்ள ஆண்தான் கணவனாக வரவேண்டும் என பெண்களும் விரும்புகின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

டில்லியைச் சேர்ந்த திருமணத் தகவல் தொடர்பு இணையத்தளம் ஒன்று தன் இணையத்தளத்தில் திருமணத்துக்காகப் பதிவு செய்திருந்த ஆண் பெண் உட்பட ஐயாயிரம் பேரிடம் ஆய்வு ஒன்றை நடத்தியது. தன் வருங்கால கணவன் அல்லது மனைவி எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து ஆய்வில் கலந்து கொண்டவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. அந்த ஆய்வில் பெண் குடும்பத்தாரின் பின்னணிக்கு 49 சதவீத ஆண்கள் முன்னுரிமை அளித்துள்ளனர். பெண்ணின் அழகான தோற்றத்துக்கு 48 சதவீதம் பேர் முக்கியத்துவம் அளித்துள்ளனர். 39 சதவீதம் பேர் தனக்கு வரும் மனைவியின் கல்வி குறித்து கவலை தெரிவித்துள்ளனர். 47 சதவீதம் பேர் வருங்கால மனைவியின் வேலைவாய்ப்பு குறித்து கருத்துத் தெரிவித்துள்ளனர். 45 சதவீதம் பேர் பெண்ணின் ஜாதி மற்றும் இனம் குறித்து அக்கறை தெரிவித்துள்ளனர். மாறாக 54 சதவீதம் பெண்கள் தங்களுக்கு கணவனாக அமையப் போகிறவரின் வேலை குறித்து அக்கறை தெரிவித்துள்ளனர்.

53 சதவீதம் பேர் கல்வி குறித்தும் 52 சதவீதம் பேர் கணவரின் குடும்பப் பின்னணி குறித்தும் கருத்து தெரிவித்துள்ளனர். 46 சதவீதம் பேர் ஜாதிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். 65 சதவீதம் பெண்கள் ஆண்களின் தோற்றத்தை முக்கியமானதாகக் கருதவில்லை. இதுகுறித்து அந்த இணையதளத்தின் தலைவர் கூறுகையில் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களின் போக்கு இக்காலத்தில் மாறிவருகிறது. அப்படிப்பட்ட நிலையில் கூட ஜாதி மற்றும் குடும்பப் பின்னணி முக்கிய காரணிகளாகவே கருதப்படுகின்றன. இதற்கு மணமகன் தன் பெற்றோரின் கருத்துக்கு இணங்கிச் செல்வதே முக்கிய காரணம். பெண்கள் தங்களின் பாதுகாப்பான வாழ்க்கை குறித்து கவலைப்படுவதால் கணவனின் கல்வி மற்றும் வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்று தெரிவித்தார். இருப்பினும் அழகான பெண்ணே தனக்கு மனைவியாக வரவேண்டும் என்ற ஆண்களின் எதிர்பார்ப்பே ஒருவகையில் சட்டவிரோதமான கள்ளத் தொடர்புகளுக்கும் வழிவகுத்து விடுகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அறிவியல் ரவுண்டப்

நாய்கள் வாலாட்டுவது நன்றிக்காக அல்ல மகிழ்ச்சிக்காக!

நாய் நன்றியுள்ள பிராணி. நாம் உணவிட்டால் நன்றியுடன் வாலாட்டும். வீட்டைப் பாதுகாக்கும் என்று கூறி வருகிறோம். நாய் வாலாட்டுவது குறித்து ஒரு ஆராய்ச்சி நடந்தது. ஆய்வாளர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா? நாய்கள் வாலாட்டுவது (நன்றிக்காக அல்ல) மகிழ்ச்சிக்காக. அதுவும் எந்த திசையில் வாலாட்டுகிறது என்பதில்தான் விஷயமே உள்ளது. நாய்கள் இடது பக்கமாக வாலாட்டினால் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று அர்த்தம். 56 சதவீத நாய்கள் இப்படித்தான் வாலாட்டுகிறதாம். 21 சதவீத நாய்கள் எப்போதும்போல் வாலாட்டாமல் இருக்கின்றன அல்லது எப்போதாவது வலதுபக்கமாக வாலாட்டுகின்றன. தன்னை வளர்ப்பவர்களைப் பார்த்தும் 41 சதவீத நாய்கள் இடதுபக்கமாக வாலாட்டுகின்றன. நாய்கள் வாலாட்டுவது வேதித்தன்மையின் வெளிப்பாடாக இருக்கவும் வாய்ப்புள்ளது. நாம் அதற்கு தேவையானதை வழங்கிவிடுவதால் அவை நம்முடன் மிக நெருக்கமாகிவிடுகின்றன. நாய்களின் வாலை வெட்டிவிடுவதன் முலம் அவை மற்றவற்றுடன் தொடர்பு கொள்ளும் திறனை தகர்த்துவிடுகிறோம். அவுஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியா பல்கலைக்கழகம் இதுகுறித்து ஆய்வு செய்துவருகிறது.

குழந்தைகளின் மொழியறிவை வளர்க்கும் இசை!

இசையானது குழந்தைகளின் மூளை, ஒலி, நுண்ணுணர்வுத் திறனை அதிகரிக்கிறது. அதன் மூலம் அவர்களது மொழியைக் கற்கும் திறனை மேம்படுத்துகிறது என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மொழியறிவு என்கிறபோது அதில் பேச்சும் அடக்கம். இது தொடர்பான ஆய்வை அமெரிக்காவின் சிகாகோ நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அண்மையில் மேற்கொண்டனர். அதில் மூளையின் அறிவு வளர்ச்சி நிலையில் இசையானது அதிகப் பலனளிப்பதாகக் கண்டறிந்தனர். அதிலும் குழந்தைகளுக்கு இசை அதிக நன்மை அளிக்கிறது. குறிப்பாக கற்றல் குறைபாடு மற்றும் ஆட்டிச பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு. இசைத் திறனுக்கும் இசை முறைமைகளைக் கிரகிக்கும் நரம்பு மண்டலத்துக்கும் இடையே உள்ள தொடர்பை விஞ்ஞானிகள் வெளிப்படுத்தியுள்ளனர். இசைக் கருவியை வாசிப்பது மொழியைக் கற்கும் குழந்தையின் திறனில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதும் தெரியவந்திருக்கிறது. இசைக் கருவியை வாசிப்பது மூளைத் தண்டின் தானியக்கச் செயல்முறையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஆய்வுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

மூளையின் கீழ்ப் பகுதியான இது சுவாசித்தல் இதயத் துடிப்பு ஒலிகளுக்கான ஹரியாக்ஷன் ஆகியவற்றுக்குப் பொறுப்பு வகிப்பதாகும். அவர் மேலும் கூறுகையில் இசை வாசிப்பது ஒலி சம்பந்தப்பட்ட திறனைத் தூண்டி வளர்க்கிறது. அதாவது ஒருவரது சொந்த இசைக் கருவியின் ஒலி அதன் இனிமை ஹரிதம் ஆகியவற்றை ஈரக்கும் திறனை. இது சத்தமான வகுப்பறைகளில் பேச்சை வளர்த்துக் கொள்வதற்கு குழந்தைகளுக்கு உதவும். குரலில் சிறுசிறு மாற்றங்களை ஏற்ற இறக்கங்களை செய்வதன் மூலம் குறிப்பிட்ட உணர்வை வெளிப்படுத்துவது என்ற பேச்சு நுணுக்கத்தைத் துல்லியமாக அறிய குழந்தைகளுக்குக் கை கொடுக்கும் என்று விளக்கமாகத் தெரிவிக்கிறார். ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இசைக்கு நன்றாக பதில் செயல்பாட்டைக் காட்டுகிறார்கள் அவர்கள் இசையை விரும்புவது நன்றாகத் தெரிகிறது என்று அமெரிக்க ஆட்டிச கழகத்தின் பேச்சாளர் பெண்மணி தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறும்போது குழந்தைகள் தொடர்புகொள்ளவும் தங்களைச் சுற்றியுள்ளவர்களுடன் கலந்துரையாடவும் ரிலாக்ஸ் ஆகவும் உணர்வுகளையும் வெளிப்படுத்தவும் இசை உதவுகிறது என்பது தெரிகிறது என்றார். இசைக்கு பல இனிய நன்மை தரும் தன்மைகள் உண்டு நோயாளிகளுக்கு நலமளிக்கும் என்று நாம் அறிந்திருக்கிறோம். அது குழந்தைகளின் மொழியறிவை மொழித்திறனை வளர்க்கவும் உதவுகிறது என்பது ஆச்சரியமான விஷயம்தான்.

சூரியனைப் போல இருமடங்கு பெரிய நட்சத்திரம் கண்டுபிடிப்பு

சூரியனை போன்று இரு மடங்கு பெரிய நியூட்ரோன் (மின் இயக்கமற்ற) நட்சத்திரம் வான் வெளி கோளப்பாதையில் கண்டறியப்பட்டுள்ளது. இது குறித்து இங்கிலாந்து நாட்டின் தேசிய கதிரியக்க வான் கோள்கள் கண் காணிப்புத் துறையின் விஞ்ஞானி போல் டெமோரெஸ்ட் இவ் வாறு தெரிவிக்கிறார். சூரியனை போன்று இருமடங்கு பெரிய நியூட்ரான் நட்சத்திரம் கண்டறியப்பட்டுள்ளது. இது ஆச்சரியமாக உள்ளது. உயர் அடர்த்தி மற்றும் அணு இயற்பியல் தொடர்பான எங்களுடைய பல்வேறு விதிகளுக்கு பல்வேறு அர்த்தங்களை இந்த நட்சத்திர கண்டுபிடிப்பு அளித்துள்ளது. அணுக் கருவை விட நியூட்ரான் நட்சத்திரம் பல மடங்கு அடர்த்தியானது. இத்தநட்சத்திரத்தின் மூலப்பொருள் மட்டும் 5000 தொன்னுக்கும் அதிகமான எடை கொண்டதாக இருக்கும். இது விண்வெளிக் கோளத்தில் சுற்றி வரும்போது இதிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்கள் விண் வெளியில் படும். இந்த கண்டுபிடிப்பு நியூட்ரோன் நட்சத்திரங்கள் தொடர்பான ஆராய்ச்சியாளர்களின், விண்வெளி ஆராய்ச்சிக்கு புதிய வடிவத்தை கொடுத்துள்ளது என்றார்.

5 இலட்சம் ஆண்டு பழைய எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

மனித வர்க்கத்தில் உலகில் மிகவும் முதன்மையானவர் என்று கருதப்படும் மாற்றுத் திறன் ஆணின் மனித எலும்புக்கூடு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது 5 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தியதாக இருக்கும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ஸ்பெயினின் "மாட்ரிட் பல்கலைக்கழகம்", "கார்லஸ் ரூ 3" ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து மேற்கொண்ட ஆராய்ச்சியில் இதை கண்டு பிடித்துள்ளனர். ஸ்பெயினில் "சிமா டி லாஸ் ஹ்யுசாஸ்" என்ற இடத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இந்த எலும்புக் கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. எலும்புகளின் தன்மை பரிசோதிக்கப் பட்டதில் அந்த எலும்புகள் சுமார் 5 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கும் என்பது தெரியவந்துள்ளது. எல்விஸ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த படிமம் இருந்த இடத்தில் மேலும் பல எலும்புகள் உள்ளதாக தெரிவித்துள்ளனர். கிடைத்திருக்கும் எலும்புக்கூட்டுக்கு சொந்தக்காரர் மாற்றுத் திறனாளி நடுத்தர வயதுக்காரர் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

பொறுப்பற்ற பெற்றோர்களால் சீரழியும் மலையக சிறுவர்கள்

சந்திரசேகரன்

ஒரு சமூகம் எதிர்காலத்தில் சிறந்த விழிப்புணர்வினை பெற்றுக்கொள்வதற்கும், ஒரு நாடு எதிர்காலத்தில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கக்கூடிய சீரான வழிநடத்தல்களின் துணையோடு செல்வதற்கும் இன்றைய சிறுவர்களின் கல்வி வளர்ச்சி வீதமே உறுதுணையாக இருக்கின்றது. அவ்வாறு பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து நிற்கும் அநேகமான நாடுகளை நாம் சற்று உற்று நோக்கினால், சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள கல்விமான்களின் எண்ணிக்கையும் அந்நாட்டில் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகக் கொடுக்கப்படும் முன்னுரிமையும் மேலோங்கி நிற்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளமுடியும். ஜூன் 12 ஆம் திகதியை சிறுவர் உழைப்பிற்கெதிரான தினமாகவும், ஒக்டோபர் முதலாம் திகதியை உலக சிறுவர் தினமாகவும், நவம்பர் 19 ஆம் திகதியை சிறுவர் துஷ்பிரயோக தடுப்பு தினமாகவும் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு, உலகளவில் சிறுவர்களின் முக்கியத்துவம் மக்களுக்கு உணர்த்தப்பட்டாலும் தொழிலுக்காக அமர்த்தப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையானது நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகிறது. சமீபத்திய ஆய்வொன்றின் அடிப்படையில் உலகெங்கிலும் 5-14 வயதுக்குட்பட்ட சுமார் நூறு கோடி ஆண், பெண் சிறுவர்கள் பண்ணைத் தொழில் மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இது சம்பந்தப்பட்ட நாடுகளின் எதிர்கால முன்னேற்றத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துபவையாகவே உள்ளன.

இந்த சிறுவர் உரிமை பற்றி நாம் சற்று ஆராய்ந்தோமானால் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயமானது 1989 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர் சிறுமியராகக் கணிக்கப்பட்டு அவர்களுக்குக் கட்டாயக் கல்வி, பாலிய ஊழியம், வாழ்க்கைத் தரம் போன்ற இன்னும் பல விடயங்கள் அடிப்படை உரிமைகளாக்கப்பட்டன. அத்தோடு 18 வயதுக்குட்பட்டோரை தொழிலுக்கு அமர்த்துதல், சிறுவர்கள் மீது பாலியல் வல்லுறவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடல், பெற்றோர் பிள்ளைகளைக் கல்வி பயிலச் செய்யாமை போன்ற நடவடிக்கைகளனைத்தும் தண்டனைக்குரிய குற்றங்களெனவும் பிரகடனப்படுத்தியது. உலகத்தில் பெரும்பாலான நாடுகள் தமது அரசியலமைப்பு சாசனத்தில் கல்வியை பிரஜைகளின் உரிமை என்பதை வலியுறுத்துகின்றன.

ஒரு பிள்ளை கல்வி கற்பதன் நோக்கம், அதன் ஆளுமை திறன்கள், உடல் மற்றும் உள ரீதியிலான ஆற்றல்கள் என்பன முற்றுமுழுதாக விருத்தியடையச் செய்வதாகும். இதனால் உலக ரீதியில் அனைத்து சிறுவர்களுக்கும் கல்வி கிடைக்கவேண்டும் என்ற நோக்கோடு, உழைக்கும் சர்வதேச நிறுவனங்கள் கடந்த 2000 ஆம் ஆண்டில் செனகல் நகரின், டாக்கார் நகரில் கூட்டிய மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரச பிரதிநிதிகளும், அரசு சாரா நிறுவனங்களும் ஒன்றுகூடி சில சிறுவர்களின் கல்வி நிலையினை விருத்தி செய்வதற்கு பல்வேறு தீர்மானங்களை எடுத்திருந்தனர்.

சிறுவர் உரிமை பற்றி நாம் இலங்கையை சற்று உற்று நோக்குவோமானால் இலங்கையின் அரசியலமைப்பு சாசனத்தின் 6 ஆம் அதிகாரம் பிரிவு 27(2)(அ) சரத்தானது எழுத்தறிவின்மையை போக்கி நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் சகல மட்டங்களிலும் கல்வியை பெறுவதற்கான வாய்ப்பினை பெற வேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் இன்றைய நிலையில் இலங்கையை எடுத்துக்கொண்டால் பாடசாலை செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கையைவிட தொழிலுக்காக அமர்த்தப்பட்டுள்ள மற்றும் குடும்பங்களால் கைவிடப்பட்டு சிறுவர் இல்லங்களில் வசிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. விகிதாசார அடிப்படையில் சமூக மட்டத்திலே அளவிட்டுப் பார்க்கும் போது மலையக சமூகத்தைச் சார்ந்த சிறுவர்களே அதிகமாக தொழிலுக்கு அமர்த்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் 3000க்கும் அதிகமான சிறுவர்கள் கொழும்பு போன்ற புற நகரங்களில் தொழிலுக்காக அமர்த்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பிள்ளையின் எதிர்கால குணாதிசய வளர்ச்சிகளென்பது அவர்கள் சார்ந்த பெற்றோர்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. பிள்ளைகளை நாட்டின் தலைவர்களாக இல்லாவிடினும் சிறந்த மனிதர்களாகவாவது உருவாக்கவேண்டும். மலையகத்திலுள்ள அநேகமான பெற்றோர்கள், கல்வி பற்றிய தெளிந்த விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதால் காலப்போக்கில் சிறுவர்கள் தொழிலுக்காக அமர்த்தப்படும் சூழ்நிலை தானாகவே உருவாகிவிடுகிறது. அத்தோடு மலையக மக்களில் அநேகர் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்வு நடத்துபவர்களாக உள்ளனர். இவ்வாறானவர்கள் தமது நாளாந்த குடும்ப செலவினங்களை சமாளிக்க வழியின்றித் தவிக்கும் வேளைகளில் அவர்களுக்குப் பிள்ளைகளின் உழைப்பும் அவசியமாகப்படுவதால் வேறு வழியின்றி அவர்களை தொழிலுக்கு அமர்த்திவிடுகின்றனர்.

அடுத்ததாக நகர்ப்புறங்களில் தொழில் புரியும் சிறுவர்கள் தற்காலிக நிகழ்வுகளுக்காக (உதாரணமாக பண்டிகை தினங்களில்) வீடு திரும்பும்போது அவர்களிடம் காணப்படு கின்ற ஆடம்பரங்களைக் காண்கின்ற மற்றைய சிறுவர்களுக்கும் அந்த ஆடம்பர மோகம் உந்தப்படுவதனால் அவர்களுக் கும் நகர்புறத் தொழில் மீது ஈர்க்கப்பட்டு, தானாகவே தொழிலுக்குச் செல்லும் சூழல் உருவாகின்றது. அடுத்ததாக பெற்றோர்களானவர்கள் தமது குடும்பத்தில் தாமாகவே வறுமைச் சூழலை உருவாக்கிக்

கொள்வது. அதாவது அநேகமான பெற்றோர்கள் குறிப்பாக ஆண்கள் தினந்தோறும் மது அருந்துகின்றனர். இதனால் அநேகமான பெண்களுக்கு தமது நாளாந்தக் குடும்பச் செலவுகளை சமாளித்துக்கொள்ள முடியாமல் குடும்பத்தில் தானாக வறுமை தொற்றிக் கொள்கின்றது.

இவ்வாறான நிலைமைகளில் தமது குடும்ப நிலையை சீர் செய்ய பிள்ளைகளைத் தொழிலுக்கு அமர்த்திவிடுகின்றனர். இவ்வாறு தொழிலுக்கு அமர்த்தப்படும் சிறுவர்கள் கல்வியறிவில் குன்றிய நிலையில் காணப்படுவதால் பின்நாட்களில் இவர்களில் அநேக மானோர் தேயிலைத் தோட்டத்தில் வேலைக்கு இணைந்து விடுகின்றனர்.

இங்கு இன்னும் ஏராளமான சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக திருமணமாகாத ஆண் பெண்ணிடையே ஏற்படும் முறையற்ற பாலுறவுகளின் மூலம் உரு வாகும் பிள்ளைகளை இவர்கள் சமூக மரியாதைக்கு அஞ்சி குப்பைத் தொட்டிகளில் போடுகின்றனர். அல்லது சிறுவர் இல்லங்களில் சேர்த்துவிடுகின்றனர். இவ்வாறான பிள்ளைகளுக்கு தமது தாய் தந்தையின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கப்பெறா மல் இருப்பதால் அநேகர் உடல், உள ரீதியாக பாதிப்படைகின்றனர். மற்றும் வறுமையான குடும்பத்துப் பெற்றோரைத் தேடி வலை விரிக்கும் தொழில் தரகர்கள் அவர்களுக்குப் பணத்தாசை காட்டி. அவர்களின் பெண் பிள்ளைகளுக்கு சிறந்த தொழில்வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக்கூறி அழைத்துச் சென்று, அவர்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி பணம் சம்பாதிக்கும் நிகழ்வும் தினந்தோறும் இடம்பெற்ற வண்ணம்தான் இருக்கின்றன.

இவ்வாறான நிலைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டியது பெற்றோர்களின் கடமையே. அதனால் பெற் றோர்கள்தான் பிள்ளைகளின் வாழ்வில் அக்கறை செலுத்த வேண்டும். பெற்றோர்களானவர்கள் தமது தரப்பு நிலைகளை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும். தொழிலுக்கு அனுப்பும்போது பிள்ளைகள் பற்றி சிந்திக்க வேண்டும். அங்கு பிள்ளைகளுக்கு தகுதிக்கு மீறிய வேலைகள், அடி, உதை, எஜமானர்களின் பாலியல் செய்கைகள் போன்ற கொடூரங்கள் இடம் பெறவே செய்கின்றன. இந்த நிலைமைகள் எல்லை மீறிப் போகும்போது அது இறுதியில் பிள்ளைகளின் உயிருக்கே உலைவைத்துவிடுவதாகவும் அமைந்துவிடுகிறது. இதற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாக அன்மையில் ஊடகங்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட கொழும்பு போன்ற புறநகரங்களில் பணிப்பெண்களாக அமர்த்தப்பட்ட மலையகத்துத் தோட்டப்புறங் களைச் சேர்ந்த சிறுமிகளான மஸ்கெலியா முள்ளுகாமம் தோட்டத்தைச் சேர்ந்த சுமதி, ஜீவராணி மற்றும் நெல்தோட்டை லூக்கந்து தோட்டப்பகுதியைச் சேர்ந்த குமுதினி போன்ற சிறுமி களின் மர்ம மரணத்தைக் குறிப்பிடலாம்.

ஆகவே பெற்றோர்களானவர்கள் தாம் எவ்வளவுதான் இடர் களைச் சந்தித்தாலும் அதைப் பிள்ளைகளின் தலையில் சுமத்தாமல் அவற்றை நாமே எதிர்கொண்டு பிள்ளைகளின் கல்வியில் அக் கறை செலுத்த வேண்டும். ஒரு பிள்ளையின் எதிர்கால முன்னேற்ற நிலையென்பது அதன் கல்விநிலையிலேயே தங்கியுள்ளது. இது மலையக சமூகத்துக்கு மிகப் பொருத்தமான ஒன்றாகவே உள்ளது. ஏனெனில் மலையக சமூகத்தின் முன்னேற்ற நிலையென்பது கல்வி என்ற ஒன்றின் அடித்தளத்திலேயே தங்கியுள்ளது. எனவே "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற பழமொழிக் கிணங்க பெற்றோர்கள் ஒவ்வொருவரும் இன்றைய காலத்தில் தமது பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்டு சிந்தித்து செயற்பட்டார்களேயானால் அதன் விளைவானது எதிர்காலத்தில் அவர் சார்ந்த குடும்பங்களுக்கும் சமூகத்திற்குமான முன்னேற்றத் தின் நுழைவாயிலாகவே அமையும். இவ்விடயமானது எந்த சமூகத்தைச் சேர்ந்த பெற்றோர்களுக்குப் பொருந்துகின்றதோ இல்லையோ மலையகத்தைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு இன்றியமையாததொன்றாகவே இருக்கின்றது. பெற்றோர்களே சிந்திப்பீர்களா?

பத்மா சோமகாந்தன்
எழுத்தாளர்

ஒரு மனிதனுடைய இப்பூவுலக வாழ்வு 60 ஆண்டுகளுடன் பூரணத் துவம் எய்துகிறது என்ற நோக்கில் சாத்திரங்கள் மானிட வாழ்வின் எண்ணிக்கைக்காக ஒவ் வொரு ஆண்டிற்கும் ஒவ்வொரு பெயரிட்டு 60 பெயர்கள் கொண்ட ஆண்டாக கணக் கீட்டு இருக்கின்றன. இதிலே இலக்கம் 60 இற்கு ஒரு மகத்துவம் உண்டு. அதே போல் 'இருக்கிறம்' சஞ்சிகையும் பற்பல விடயங் களை தன்னுள் உள்ளடக்குகின்றது. தரம் வாய்ந்த மலராக மாதம் இரு தடவை வாசிப்போர் கரங்களில் தவழ்ந்து 60 ஆவது மலரை நிறைவு செய்திருக்கும் பூரணத்துவத்தை எய்தியுள்ளமை மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. இந்த அரிய வேளையிலே 'இருக்கிறம்' சஞ்சிகை மென்மேலும் தரமான, கனதியான விடயங்களை வெளிக்கொணர்ந்து மக்களுக்கு அறிவூட்டுவதோடு மக்களை மகிழ் விக்கவும் பாடுபட வேண்டும் என வாழ்த்துகிறேன். என்றும் வளர்ச்சிப் படியால் வேகமாக செல்க.

மணிப்புலவர் மருதூர் ஏ.மஜித்
எழுத்தாளர், முன்னாள் வடகிழக்கு முஸ்லிம் கலாசார பணிப்பாளர்

"இமயம் தொட வாழ்த்துக்கள்"

"ஏதோ இறைவனின் கருணையால் இருக்கிறம்" என்று நாம் அடிக்கடி கூறுவது வழக்கம். "இருக்கிறம்" என்ற இந்தச் சொல் ஆழமான, அற்புதமான, அர்த்த புஷ்டியுள்ள ஒரு சொல்லாகும்.

"இருக்கிறம்" சஞ்சிகையின் வாசகன் என்று என்னைச் சொல்வதைவிட ஒரு நண்பன் என்று உரிமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

"இருக்கிறம்" அறுபதாவது சஞ்சிகை எனக் கேள்விப்பட்டதும் என்னால் நம்பவே முடியவில்லை.

"அறுபது என்பது ஓர் எல்லைக்கோடு"

"அறுபதிலும் ஆசை வரும்" என்று எம் முன்னோர் சும்மா சொல்லவில்லை, காரண காரியத்தோடுதான் சொல்லி இருக்கிறார்கள்.

எல்லைக்கு அப்பால் சென்றாலும் அனுபவிப்பதற்கு எண்ணம் இருக்கிறது என்பதுதான் இதன் பொருள்.

அறுபது இதழ்களை "இருக்கிறம்" சஞ்சிகை வெளித்துள்ளது என்பது பெரியதொரு சாதனை என்றே கூறவேண்டும்.

நூலோ சஞ்சிகையோ எதுவாக இருந்தாலும் இலங்கையைப் பொறுத்தவரை வெளியீடு என்பது இமையமலைப் பிரச்சினைதான். இந்த வகையில் இமையமலை உச்சியை ஏறிய திருப்தி "இருக்கிறம்" சஞ்சிகை வெளியீட்டாளர்களுக்கு ஏற்பட்டிருக்குமென எண்ணியவரை இந்நிலை மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

தவறுக்கு வருந்துகிறோம்.

சென்ற இதழில் 66 ஆவது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட 'வாழ்த்துக்கள்' பகுதியில் சிரேஷ்ட ஒலிபரப்பாளர் ராஜேஸ்வரி சண்முகம் அவர்களின் வாழ்த்து அவருடைய படத்துடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவருடைய பெயருக்கு பதிலாக சிரேஷ்ட ஒலிபரப்பாளர் செல்வி. சற்சொரூபவதிநாதனுடைய பெயர் (இவருடைய வாழ்த்து 93 ஆவது பக்கத்தில் இடம்பெற்றுள்ளது) தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

-இருக்கிறம் குழு-

■ கோபு



மீண்டும் தொடங்கும் 'சிங்கள - தமிழ்' நல்லுறவும் நட்புறவும் நல்லதாகுமா?

போர் முடிந்த பின்னர் அதாவது "பயங்கரவாத" விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தென் இலங்கையில் இருந்து வட இலங்கை யாழ்ப்பாணத்துக்கு நாளும் பொழுதும் சிங்களச் சகோதர மக்கள் பெரிய பஸ்வண்டிகளிலும் மோட்டார் வான்கள் என்று பல வாகனங்களிலும் சுற்றுலாப் பயணிகளாக வந்து போகின்றார்கள். இப்படி வருகின்றவர்கள் எல்லோருமே நாகதீப, யாழ்ப்பாண நாக விகாரை புத்த தலங்களையும், கந்தரோடை பூர்வபுத்த இருப்பையும், நல்லூர்க் கந்தனையும் பார்ப்பதற்காகத்தான் வருகின்றார்கள் என்று சொல்ல முடியாது! இப்பொழுதே சுற்றுலா வந்தவர்கள் சிலர் சுற்றுலா செல்வதற்கு புகைவண்டிகள் போதாததால் ரயில் நிலையத்திலேயே தங்கி தாங்கள் வாழ்ந்த பழைய இடங்களைத் தரும்படி கோரிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்! இனிகாணி உறுதிகள்கூடக் கொண்டு வரக் கூடும். கள்ள உறுதிகள் முடிப்பதில் நம்மவர் சிலரே வழிகாட்டவும் கூடும்! இதில் கைவந்தவர்கள் இல்லாமலா?

இந்தச் சிங்களச் சுற்றுலாப் படையெடுப்பைப் பார்க்கும்போது சிறுவயது நினைவுகள் தலையில் வட்டமிடுகின்றன.

எழுபத்தைந்து எழுபத்தாறு வருடங்களுக்கு முன் என்று நினைக்கின்றேன். சாரம் அணிந்து அதற்கு மேலே சட்டையும் அதன் மேலே கறுப்புக் கோட்டும் போட்டு நன்றாக வாரிவிட்ட தலையின் நடுவே வளைந்த சீப்பும் அணிந்து கறுப்பு மெழுகுசேலையால் பாதுகாப்பாக வரிந்து கட்டப்பட்ட நான்கு சிறு கால்களையுடைய கூடையைத் தலையில் சுமந்து "பாண்", "பனிஸ்" என்று குரல் கொடுத்து வருபவர்களை என்போன்ற சிறுவர்களுடன் தாய்மார்களும் காத்து நிற்பார்கள்.

"பாண்காரன் வந்திட்டான், ஓடிப்போய் வாங்கு" என்று சில வீடுகளில் தாய்மார்களின் குரல் கேட்பதுமுண்டு! பாண்காரர் கூடையை இறக்கியதும் சிறுசுகளுடன் பெரிசுகளும் சூழ்ந்து கொள்வார்கள். கூடையின் மூடியை எடுத்ததும் முதலில் உள்ள ஒரு தட்டில் கேக்குகள் விதவிதமாக இருக்கும். எள்ளுச் சுறுள்களும் அதனுடன் இருக்கும். அந்தக் கேக் தட்டை எடுத்ததும் கூடைக்குள் பாண் இருக்கும். இப்படிப் பாண்காரர்கள் பல வீடுகளுக்கு வாடிக்கையாகப் பாண் கொடுத்தார்கள்.

பின்னர் யாழ்ப்பாண நகரில் கஸ்தூரியார் வீதியில் (அப்போது கஸ்தூரியார் பெயர் வரவில்லை, 'செம்மா தெரு' என்றுதான் பெயர். வண்ணான் குளத்துக்கு (இப்பொது வண்ணான் குழத்தையே தேட வேண்டியிருக்கிறது) எதிரில் ஒரு பாண் பேக்கரி திறக்கப்பட்டது. கிறவுண் பேக்கரி என்பது இதன் பெயர். தடித்த, நீண்ட மீசை வைத்த சிங்களவர்தான் இதன் உரிமையாளர். பாணும் கேக்குகளும் இங்கே வாங்கலாம். அடுத்து நகரில் ஆஸ்பத்திரி வீதியில் மருந்துக் கடைகளுக்கு மத்தியில், மின்சாரக் கட்டடத்துக்கு முன்பாக சிற்றி பேக்கரி என்று ஒரு பேக்கரி வந்தது. பாண் தயாரிப்பதுடன் றொட்டி, சாப்பாடு என அது ஹொட்டலாகவும் விரிவடைந்தது. சிற்றி பேக்கரி ரீ (தேநீர்) வீச்சுரொட்டிக்கும் பெயர் பெற்றது. அவ்வளவு சுவை.

சுன்னாகத்திலும் ஒரு பேக்கரி இருந்தது. வேறு ஊர்களிலும் பேக்கரிகள் முளைத்தன.

அதிரியான் என்றொரு நகைத் தொழிலாளி இருந்தார். "அதிரியான் மாமா" என்றே யாழ் நகரிலுள்ளோர் அழைப்பார்கள். அவர் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்ணைக் காதலித்து மணமும் செய்து கொண்டார். அவருடைய மூத்தமகன் ஒரு டொக்டர். ஏதோ ஒரு துறையில் அவர்தான் ஸ்பெஷலிஸ்ட். அவருடைய ஒரு மகன் என்னுடன் படித்தவர். தங்கமான குணம். அவருடைய பெயரும் தங்கரத்தினம்தான். இப்போது அவர் உயிருடன் இல்லை. இப்போதும் அந்தப் பரம்பரை யாழ்ப்பாணத்திலிருக்கிறது. சிறந்த நகைத் தொழிலாளர்கள் சிலர் இங்கு தொழில் செய்து நற்பெயர் பெற்றதுமுண்டு. அவர்களுள் கரப்புத்துகல என்பவரும் ஒருவர்.

டபிள்யு. பத்திரன, கே.பி. இரத்திநாயகா என்ற முன்னாள் அமைச்சர்கள், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரிகளிலும் படித்தவர்கள். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்கள். இதேபோல் தென் இலங்கையில் தொழில் புரிந்த, வர்த்தகம் செய்த, உத்தியோகம் பார்த்த தமிழர்கள் சிலர் சிங்களப் பெண்களைத் திருமணம் செய்து அந்தப் பரம்பரைகளும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஏன் எனது உடன் பிறந்த அண்ணன் ஒரு சிங்களப்பெண்ணை காலியில் வேலை பார்க்கும்போது சந்தித்துக் காதலித்து இரண்டாம் தாரமாகக் கட்டிக் கொண்டார். பதினொரு பிள்ளைகளைப் பெற்று பெரும்பாண்மை சமூகத்திற்கு பங்களிப்புச் செய்திருக்கிறார். இப்பொழுது அவரது பிள்ளைகள் என்னையும் கவனிக்கத் தவறுவதில்லை. நான் பிறந்த மண் என்னைக் கைவிட்டுவிட்டது.

இந்தக் கலப்புத் திருமணங்களும், யாழ்ப்பாணத்தில் சிங்களவர்கள் தொழில் புரிவதும் யாழ்ப்பாணத்துக்கும் தென்னிலங்கைக்கும் நெருங்கிய உறவை ஏற்படுத்தியிருந்தன.

யாழ்ப்பாணத்தில் தமிழ்ப்பிள்ளைகள் தாங்களாகவே விரும்பி சிங்களம் படிக்க முன்வந்தனர். சிங்கள ஆசிரியர்கள், சில புத்தபிக்குகள் உட்பட யாழ்ப்பாணப் பாடசாலைகள், கல்லூரிகள் சிலவற்றில் சிங்களம் போதித்தனர். இரு சமூகத்தாருக்குமிடையே நல்லுறவும் நட்புறவும் தானாகவே ஏற்பட்டது. வளர்ந்தது. இவர்கள் வெளியேற நேர்ந்தபோது இருதரப்பும் கண்ணீர் சொரிந்தன.

சிங்கள அரசியல்வாதிகள் சிலர், அரச அலுவலகங்களிலும், அரச உயர் பதவிகளிலும் தமிழர்களே ஆக்கிரமித்திருக்கிறார்கள் எனக் கூச்சல்போடத் தொடங்கினார்கள். தமிழ்ப்பிள்ளைகளின் விடைத் தாள்களைத் திருத்தும் தமிழ் ஆசிரியர்கள் புள்ளிகளை அள்ளிப் போட்டு சித்திபெற வைக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டினர்.

இதற்கு முன் ஜீ.ஜீ யின் ஐம்பதுக்கு ஐம்பது என்ற சமபலப் பிரதிநிதித்துவக் கோரிக்கையையும் சிங்கள அரசியல்வாதிகள் வித்தியாசமாக விளக்கம் கொடுத்தார்கள். இவையெல்லாம் ஆட்சிக்கு வருவதற்கு சிங்கள மொழிதான் வழி என்பதை, எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்காவுக்கு சொல்லிக் கொடுத்தது.

சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகளாக இருக்கும் என்று உறுதியளித்துப் பிரதமரான டி.எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையிலிருந்து தனக்குப் பிரதமராகும் வாய்ப்புக் கிடைக்காது என்று கருதி வெளியேறிய "எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா", "சிங்கள மகாஜன சபை" என்றொரு புதிய அமைப்பைத் தொடங்கினார். பின்னர் தேர்தலில் நிற்பதற்காக "லாங்கா சுதந்திரக் கட்சி"யை ஆரம்பித்தார். சிங்களத்தை ஆட்சி மொழியாக்கும் குரல்கள் எழவே, இனவாதக் குழுக்களுடன் சேர்ந்து சுலபமாக ஆட்சிக்கு வருவற்கு "மகாஜன எக்ஸத் பெறமுன" என்ற மக்கள் ஐக்கிய முன்னணியை ஆரம்பித்தார். "நான் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரியணையிலேற்றுவேன்" என்று முழங்கினார்.

இந்தமுழக்கம் மிகப்பெரும்பான்மை பலத்துடன் 1956 இல் பண்டாரநாயக்காவை ஆட்சியிலமர்த்தியது. சிங்களம் அரியணையிலேறியது. சிங்களவர்கள் - தமிழர்கள் நல்லுறவு குலைந்தது. தமிழர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை எல்லாம் இழந்து அகதிகளாகப் பெருகிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு சிலரைத்தவிர. மீண்டும் நல்லுறவு ஏற்படவும், தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்கும், தமிழரின் அபிவிருத்திக்கும் மஹிந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது.

இந்த நல்லுறவு வரவேற்கத்தக்கதுதான். இருந்தாலும் நச்சு உறவாக இருந்துவிடக் கூடாது என்பதே இன்று எல்லோருடைய பேரவாவாக இருக்கின்றது. கிட்டத்தட்ட 30 வருட கால இடைவெளியில் இரு இனங்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த குரோதம், இனவாதம், விரிசல் என்பன உடனடியாக நீங்கிவிடவும் முடியாது. போகப்போகத்தான் அவர்களுடைய உறவு எப்படிப் பட்டதென்பதை அறிந்துகொள்ள முடியும். பொறுத்திருப்போம்!

60 வது வாழ்த்து

எம்.எல். கிருபா ,திகழ்ச்சிப் பொறுப்பதிகாரி, வசந்தம் எப்.எம்

இலங்கையில் எத்தனையோ சஞ்சிகைகள் 'மழைக்கு முளைக்கும் காளான் போல்' முளைத்து பிறகு யார் எழுதியது எனத் தெரியாமல் இல்லாமல் போய்விடும். இன்னும் சில சஞ்சிகைகள் ஆரம்பத்தில் சில தரமான செய்திகளைக் கொடுத்து பின்னர் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பாய்ப் போன கதைபோல' நலிவடைந்து இருந்த இடமே தெரியாமல் போய்விடும். ஆனால் ஒருவரை நம்பி இயங்கவுமில்லை, ஆரம்பிக்கவுமில்லை என்பதை 'இருக்கிறம்' நிலைநிறுத்தியுள்ளது.

பலபேர் சொல்லும் சுதந்திரமான கருத்துக்கள் அப்படியே மக்களைப் போய்ச் சேரவேண்டும். இதனால் மக்கள் பிரயோசனப்படவேண்டும். தனியாக சினிமா விடயங்களைமட்டும் மையப்படுத்தியோ, நாவல்களை எழுதியோ ரசிகர்களைத் திருப்திப்படுத்தவில்லை. நாட்டில் நடக்கும் பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டி, முதல்தர சஞ்சிகையாக இருக்கிறது. தற்காலத்தில் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகிறது. கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் ஒரு விடயத்தைக் கிரகிக்கவேண்டும். ஒருவருக்கு வாசிப்புப் பழக்கம் எவ்வளவு முக்கியம் என்பதை 'இருக்கிறம்' பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. எழுத்தில் இருக்கும் விடயங்களை எப்பொழுதும் வாசிக்க முடியும். அதற்கு 'இருக்கிறம்' ஓர் உதாரணம். 'இருக்கிறம்' 60 இதழ்களைக் கண்டுவிட்டபோதும் இன்றுவரை சலிப்புத் தட்டாமல் வாசிக்கக்கூடியதாக இருந்து வருகிறது. இலங்கையில் 10 சஞ்சிகைகளை வெளியிடுவதென்பதே கஷ்டமான விடயம். இருக்கிறத்தை நாட்டின் பல பாகங்களிலும் காணக்கூடியதாக இருக்கிறது. மேலும் பல விடயங்களை உள்ளடக்கப் போகிறீர்கள் என்பதனையும் அறியக்கூடியதாக உள்ளது.

இலங்கையிலும் மற்றும் பல நாடுகளிலும் 'இருக்கிறம்' புகழ்பூத்து விளங்கவேண்டும். 'இருக்கிறம்' உலகெங்கும் தமிழர்களின் குரலாக ஒலிக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கப்பலோட்டிய தமிழர்கள்

தொடரும் கப்பல் பயணங்களும் கரைகடக்கும் அவல வாழ்வும்!

மன்னாரிலிருந்து கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி சிறிய கப்பலொன்றில் புறப்பட்டது அந்தச் சிறிய குழு. இரண்டு நாள் பயணத்தின் பின்னர் இந்தியாவுக்கு அண்மையிலுள்ள கடலில் அந்தக் கப்பல் நங்கூரமிடப்பட்டது. சில மணித்தியாலத்தின் பின்னர் இந்தியாவிலிருந்து ஒரு குழுவினர் அந்தக் கப்பலை நோக்கி வந்தடைந்தனர். அவர்கள் ஏற்கனவே இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்கள். இருகுழுவினரும் ஒன்றாகி ஓகஸ்ட் 31 ஆம் திகதி இரவு பயணத்துக்கென ஏற்பாடுசெய்யப்பட்ட கப்பலில் தமது நெடும் பயணத்தை ஆரம்பித்தனர். அவர்களின் இலக்கு அவுஸ்திரேலியாவாக இருந்தது. ஆனால் தமது இலக்கு திசைமாறும் என்பதனை அவர்கள் அறிந்திருக்கச் சந்தர்ப்பம் இருந்திருக்கவில்லை.

பயணித்துக் கொண்டிருக்கும்போது கடந்த ஒக்டோபர் 14 ஆம் திகதியுடன் அவர்கள் கொண்டுசென்ற குடிதண்ணீர் முடிவடைந்துவிட்டது. 16 ஆம் திகதி உணவு. கப்பலுக்கான டீசல் எல்லாமே நிறைவடைந்துவிட்டன. கப்பல் தன்பாட்டில் தனது நகரும் சக்தியையும் இழந்தது. அதுவரை நாளும் கடல்நீரைக் கிழித்துச்சென்ற கப்பலை, பிறகு தனது கோபம் தீரும்வரை கடல்நீர் நன்றாகவே அங்கும் இங்கும் அலைக்கழித்தது. இவ்வாறு அலைக்கழிக்கப்பட்ட கப்பலில் 66 ஆண்களும், 14 பெண்களும், 15 குழந்தைகளும் பயணம் செய்தனர். ஒருநாள் இவர்களின் கப்பலை அண்மித்து ஒரு மீன்பிடிப் படகு சென்றுகொண்டிருந்தது. அவர்களிடமிருந்து ஏதாவது உதவி பெறலாம் என்ற நோக்கோடு ஒருவர் கடலில் குதித்து அந்தக் கப்பலை நோக்கி நீந்திச் சென்றபோது அவர் கடல் நீரோட்டத்துடன் இழுத்துச் செல்லப்பட்டு இறந்துபோனார். அவரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

தனது உயிரைப் பணயம் வைத்து தன்னை மட்டுமின்றி ஏனையவர்களையும் காப்பாற்றும் நோக்கில் ஆழ்கடலில் குதித்த அந்த இளைஞனின் இறப்பு அக்கப்பலில் இருந்தவர்களிடையே துயரத்தை ஏற்படுத்தியது. இளைஞன் இறந்தது தெரியாமல் பல எதிர்பார்ப்புகளுடன் தாயகத்தில் இருக்கும் உறவுகளுக்கு அது தெரியவரும் போது அந்த உறவுகளின் நிலைமை எப்படியிருக்கும்? யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜக்சன் (வயது- 24) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவ்வாறு தத்தளித்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் கையில் கிடைத்ததைக் கொண்டு சிறு கட்டுமரம் ஒன்றைத் தயாரித்து அதில் டிசான் (வயது- 26) என்பவரும் கப்பலோட்டியுமாகச் சேர்ந்து அருகே எங்காவது தீவு இருந்தால் உதவி கேட்போம் என்று கூறிப் புறப்பட்டனர். ஆனால் நெடுந்தூரம் கட்டுமரத்தில் செல்லமுடியாததால் திரும்பி கப்பலைநோக்கி வந்துகொண்டிருக்கும் போது கடல்நீரில் ஊறி கட்டுமரம் கடலில் அமிழ்ந்தது. கப்பலோட்டி மட்டும் தனியே கப்பலைச் சென்றடைந்தார். டிசான் கடலில் மூழ்கி இறந்துவிட்டார். இங்கு வாழமுடியாது எங்காவதுபோய் உயிர்பிழைப்போம் என்று புறப்பட்ட இந்த இளைஞன் கடைசி நேரத்தில் உயிரிழந்த துர்ப்பாக்கிய நிலையை எப்படிச் சகித்துக் கொள்வது?

மழை பெய்தால்தான் அவர்கள் குடிநீரைப்பெறலாம். அவர்கள் கரையிறங்கும்வரை குழந்தைகளெல்லோருக்கும் குடிநீர் மழைதான். குழந்தைகள் பிள்ளைகள் எல்லோரும் மயங்கிய நிலைக்கு வந்துவிடுவார்கள். மாலைநேரம் மழைபெய்தால்தான் அதனை எடுத்து அருந்த முடியும். சிலர் தூண்டில்கள் வைத்திருந்தார்கள். அதனை வைத்து இடையிடையே மீன்பிடிக்கக் கூடியதாக இருந்தது. மீன் கிடைத்தால் அவற்றை உப்புத் தண்ணீரில் அவித்து குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி இறுதிநாளன்று கப்பல் மெல்ல மெல்ல நகர்ந்து கரையை அண்மித்தது. அந்தத்தீவு இந்தோனேசியாவின் பனைடான் என்று சொல்லப்படுகின்ற ஒரு ஆளில்லாத்தீவு. அதன்கரை சுமார் 10 அடி நீர் ஆழத்தைக் கொண்டது. அவ்விடத்தில் இறங்கும்போது பெரிய அலை ஒன்று வந்து கப்பலை ஒருபக்கமாக புரட்டிவிட்டது. நீந்தத் தெரிந்த எல்லோரும் நீந்தி பிள்ளைகளைக் கரைசேர்த்தார்கள். பெண்களைக் கரைசேர்த்துக்கொண்டிருக்கும் போதுதான் இன்னொரு உயிரை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.



நீரில் தத்தளித்துக்கொண்டிருந்த பெண்களை கயிறு மூலமாக ஒவ்வொருவராக மீட்டுக்கொண்டிருக்கும் போதுதான் ரகுமார் செல்வரஞ்சனி என்பவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டார். இவர் கிளிநொச்சி உதயபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயார். கடல்மட்டத்தோடு உள்ள அந்தத் தீவுக்கு வேட்டை யாடவென சில இந்தோனேசியர்கள் செல்வது வழக்கம். ஒருமுறை அவர்கள் அங்கு வந்தபோது கப்பலோட்டியும் அவரது உதவியாளர் மூவருமாக சேர்ந்து இந்தோனேசிய நேவிக்கு அறிவிக்கிறோம் என்று கூறிப் புறப்பட்டுச் சென்றார்கள். ஏழு நாட்களாகியும் திரும்பிவரவில்லை. அதுவரை கரையோரத்திலிருந்த நத்தை களைப் பிடித்து அவித்துக் கொடுத்தும் அங்குகிடைத்த ஆற்று நீரையும் குழந்தைகளுக்கு கொடுத்து தம்மையும் தக்கவைத்துக் கொண்டனர் அந்த உயிர்கள். நாட்செல்லச் செல்ல குழந்தைகளும் பெண்களும் பலவீனமடைந்து படுத்த படுக்கையாகினர். நிலைமை மோசமடைவதனை உணர்ந்து அங்கு வரும் மீன்பிடிகாரர்களின் உதவியோடு மேலும் ஆறேழு பேர் தாம் போய்ப் பாரத்துவிட்டு வருகிறோம் என்று புறப்பட்டார்கள். அவர்களும் திரும்பி வரவில்லை. இவ்வாறு மூன்றுதடவைகள் சுமார் 30 பேர்வரை சென்றிருப்பார்கள். அவர்களும் திரும்பி வரவில்லை. இதன் பிறகுதான் இந்தோனேசிய நேவிக்காரர்களுக்கும் புரிந்திருக் கின்றது போலும். அடுத்தசில நாட்களில் ஒக்டோபர் 19 ஆம் திகதியன்று இரவு 2 மணியளவில் அவ்விடத்தைச் சென்றடைந்த இந்தோனேசிய நேவிக்காரர்கள் அங்கு எஞ்சியிருந்தவர்களை மீட்டு 20 ஆம் திகதி ஜகார்த்தாவுக்கு அழைத்துச் சென்றனர். மீட்கவரும்போது அன்றைய நாளுக்குரிய இரவு உணவை IOM நிறுவனம் கொடுத்துதவியது.

தற்பொழுது இவர்கள் அங்குள்ள சிறைச்சாலையொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதற்கு முன்னர் கப்பலில் இருந்து புறப்பட்டுச் சென்றவர்களும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதனால்தான் அவர்கள் திரும்பி வரவில்லை என்பதனை ஏனையவர்கள் அப்பொழுதுதான் புரிந்து கொண்டனர். சென்ற வர்களில் தனிநபர்கள் ஒருபிரிவாகவும் குடும்ப உறுப்பினர்கள் தனித்தனிப் பிரிவாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அங்கு கைதிகள் போன்றுதான் தம்மை நடத்துவதாகவும் உணவுகூட மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் வழங்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இதுவரை மாற்று உடைகள் வழங்கப்பட வில்லை. குழந்தைகளுக்கு என ஒருதொகைப் பாவித்த உடைகளை வழங்கியிருக்கிறார்கள். ஏனையவர்கள் இலங்கை யிலிருந்து புறப்படும்போது அணிந்த உடைகளையே இன்றும் அணிந்திருக்கிறார்கள். இன்னொருவருடைய டவலை வாங்கிக் கொண்டுதான் தமது ஆடைகளைத் தோய்த்துப் போடுகிறார்கள். குறித்த உத்தியோகத்தர்கள் நிற்கும் போதுதான் தண்ணீர் ஒழுங்காகக் கிடைக்கிறது. மற்றும்படி காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையே உள்ளது என்று அங்கிருக்கும் ஒருவர் தெரிவித்தார்.

குழந்தைகள் எல்லோரும் தாம் ஏன் ஜெயிலுக்குள் வந்திருக்கிறோம் என்று கேட்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். முதல் யன்னல் இருந்தது. பின்னர் அதனையும் இரும்பு நெற் வலைகளால் அடைத்துவிட்டார்கள். (8 X10) அடி அறைக்குள் ஒன்பது பேர் வரை அடைத்து வைத்திருக்கிறார்கள். IOM நிறுவனத்தினர் தம்மால் இயன்றளவு உதவிகளைச் செய்துவருகின் றனர். ஏனைய நிறுவனங்கள் வருவதற்கு அனுமதியில்லை. அந்தநாட்டின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் வந்து தமது கடமைக்கேற்ப கைரேகைகளைப் பதிவுசெய்துகொண்டு சென்றி ருக்கிறார்கள். தவிர வேறு அரச அதிகாரிகள் எவரும் இந்த மக்களைப் பார்க்கச் செல்லவில்லை. இவ்வாறு இலங்கையிலிருந்து கப்பல் மூலமாக இடம்பெயர்ந்து செல்பவர்களின் நிலை கொடூரமானதாகவும் பாரதாபத்துக்குரியதாகவும் காணப்படுகிறது.

இப்படி எத்தனையோ உண்மைச் சம்பவங்கள் கரைகளைத் தாண்டி வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழ் சமுதாயம் நாதியற்று சீரழிந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. இந்த நெடிய பயணத்தில் மூன்று உயிர்கள் எதிர்பாராதவிதமாக இழக்கப்பட்டு விட்டன. இதனைவிட இன்னும் எத்தனையோ கடற்பயணம் மேற்கொண்ட எமது உறவுகள் இதுவரை எங்காவது தப்பி இருக்கிறார்களா? என்பது வினாவாகவே உள்ளது.

நாடுகடந்த அரசென்றும் வட்டுக்கோட்டை என்றும் வாய்கிழியக் கத்துபவர்கள் ஏன்தான் இன்னும் இவ்விடயத்தில் அக்கறையில்லாமல் இருக்கிறார்களோ தெரியவில்லை. அந்நிய நாட்டில் அவர்களது சட்டதிட்டங்கள் எதுவும் தெரியாது மேலும் பல துன்பங்களை அனுபவிப்பதனைவிட எதுவாயினும் எமது தாய்நிலத்திலிருந்து கொண்டு அனுபவிப்பதே மேல் போலத் தெரிகிறது. இங்கு எப்படிப்பட்ட துன்பதுயரங்களை அனுபவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டாலும் எமது சொந்த நிலத்திலே கஞ்சியோ கூழோ குடித்துக் கொண்டு முட்கம்பி வேலிகளுக்குள் வாழ்வது இதைவிட மேலல்லவா?

பல மெயில் கணக்குகள் ஒரே ஜீமெயிலில்

இன்று அனேகமானோர் இரண்டிற்கு மேற்பட்ட மின்னஞ்சல் முகவரிகள் (Mail id) வைத்திருப்பார்கள். எத்தனை முகவரிகள் வைத்திருந்தாலும் அவற்றை இனி ஒரே ஜீமெயில் எக்கவுண்ட் மூலமாக இயக்கலாம். அவை கட்டாயம் மற்றொரு ஜீமெயில் எக்கவுண்டாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் POP access வசதிக் கொண்ட எந்தவொரு மின்னஞ்சல் சேவையாகவும் இருக்கலாம். உதாரணமாக yahoo live போன்றவற்றையும் ஜீமெயிலில் பயன்படுத்த லாம்.

1. முதலில் ஜீமெயில் settingsக்கு செல்லவும்.
2. அங்கே இந்த Check mail using POP3 வரிசையில் add பட்டனை சொடுக்கவும். (படம்-1)

3. பின்னர் உங்களுக்கு தனியாக வரும் பெட்டியில் எந்த மின்னஞ்சல் முகவரியை இதனுடன் இணைக்க வேண்டுமோ அதை இங்கே கொடுக்கவும்.
4. அடுத்ததாக உங்கள் கடவுச்சொல்லைத் தரவும் (இது இணைக்கப்படும் அஞ்சலுடையது)
5. அதன் கீழுள்ள விருப்பத் தேர்வுகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். லேபிளாக தேர்வு செய்தால் அந்த மின்னஞ்சல்கள் அனைத்தும் உங்கள் கணக்கில் ஒரு சீரான லேபிளின்கீழ் வரும். (படம் 2)



6. நீங்கள் இணைக்கப் போவது ஜீமெயில் தவிர மற்ற சேவை என்றால் உங்கள் கணக்கில் பொபப் வசதியை உண்டாக்கிக் கொள்ளுங்கள். உதாரணமாக இங்கு yahoo தரப்பட்டுள்ளது. (படம்-3)

7. இந்த பொபப் அல்லது கடவுச் சொல்லில் பிழையிருந்தால் உங்களால் இவ்வசதியை புகுத்தமுடியாது. (படம்-2) ஆகவே கவனமாகச் செய்யவும்.
8. இணைத்த பின் இப்படி உங்கள் settings இல் காட்டும். அருகிலேயே அதை edit செய்யவும். திரும்ப அழிக்கவும் சுட்டிகள் உள்ளன. (படம்-4)

9. எத்தனை அஞ்சல் கணக்காக இருந்தாலும் இதை ஒருமுறை இணைத்துவிட்டால் போதும். தொடர்ந்து உங்கள் புதிய மின்னஞ்சல்கள் உங்கள் பெட்டியைத் தேடிவரும். இதன் மூலம் அனைத்து மின்னஞ்சல்களையும் ஒரே மையப்படுத்தலாம்.
10. ஆரம்பத்தில் புதிய அஞ்சல்கள் தாமதமாகத்தான் உங்கள் பெட்டிக்கு வரும். அதுவும் கூடியவிரைவில் நீங்கள் பயன்படுத்தும் வேகத்திற்கேற்ப அதன் வேகமும் அதிகரிக்கும்.

இதன் மூலம் நீங்கள் ஜிமெயிலில் இருந்தே இணைக்கப்பட்ட மற்றைய முகவரியுடனும் மின்னஞ்சல்கள் அனுப்பலாம். படம் 1இல் உள்ள "send mail as" என்ற வசதி மூலம் உங்கள் அனுப்புநர் முகவரியையும் மாற்றிக் கொள்ளலாம் என்பதுதான் இதன் கூடுதல் சிறப்பு.

டேய் எங்கட கூட்டத்தில அமைச்சரிண்ட மகனை சேர்த்தது தப்பா போச்சுடா!
ஏன்டா? என்னடா செஞ்சான்?
ஒழுங்கா தலையை சீவிட்டு வாடா எண்டா, யார் தலையை எண்டு கேக்கிறான்.

வீடியோக்களை வேகமாக தரவிறக்க

இணையத்தில் பல எண்ணற்ற வீடியோக்களை பார்க்கின்றோம். இதற்கு பல தளங்கள் இருந்தாலும் You tube, Daily motion, Meta cafe போன்ற தளங்கள் பிரபலமானவை. ஒருசில வீடியோக்களை நாம் பார்க்கும்போது நாம் அவற்றை தரவிறக்கிக் கொள்ளலாம். ஆனால் இந்த தளங்களில் நாம் வீடியோவை பார்க்க மட்டுமே முடியும். தரவிறக்க முடியாது. இனி இதற்கு கவலைப்படத் தேவையில்லை.

முழுக்க முழுக்க இலவசமான, பயன்படுத்துவதற்கு மிகவும் சுலபமான ஒரு மென்பொருள் உள்ளது. நமக்குத் தேவையான வீடியோவின் url கொடுத்து START பட்டனை அழுத்தினால் போதும். அந்த வீடியோ நம் கணணியில் சேமிக்கப்பட்டுவிடும். அத்தோடு வீடியோ டவுன்லோட் திறன் மிகவும் வேகமானது. வீடியோவை தரவிறக்கும் போதே நமக்கு தேவையான போர்மட்டில் மாற்றும் வசதி (AVI,MP4,WMV) உள்ளதுடன் வீடியோவில் உள்ள பாடலை மட்டும் தனியே பிரித்தெடுக்கும் வசதியும் உண்டு. இப்படி ஏராளமான வசதிகளைக் கொண்ட இந்த மென்பொருளின் அளவு 7.19 MB மட்டும்தான்.

பயன்படுத்தும் முறை:

★இந்த மென்பொருளை தரவிறக்கியவுடன் உங்களுக்கு வரும் EXE பைலை இரண்டு முறை கிளிக் செய்து உங்கள் கணணியில் நிறுவிக் கொள்ளுங்கள்.

★இப்பொழுது டெஸ்க்டொப்பில் உள்ள சோர்ட் கட் பைலை ஓப்பின் செய்து கொள்ளுங்கள்.

★உங்களுக்கு கீழே இருப்பதை போல விண்டோ வரும்.

★இங்கு நீங்கள் தரவிறக்க வேண்டிய வீடியோவின் URL கொப்பி செய்து அங்கு கொடுக்க பட்டிருக்கும் URL என்ற இடத்தில் பேஸ்ட் செய்யவும்.

★அடுத்த கட்டத்தில் SAVE TO என்ற இடத்தில் உங்கள் வீடியோ சேமிக்க வேண்டிய இடத்தை தேர்வு செய்யவும்.

★அடுத்து OUT PUT என்ற இடத்தில் நீங்கள் இந்த வீடியோவின் வகையை (FORMAT) தேர்வு செய்து கொள்ளவும். மாற்றவேண்டாம் என்றால் WITHOUT CONVERSION) என் பதைத் தேர்வு செய்து கொள்ளவும்.

★அடுத்து கீழே உள்ள START என்ற பட்டனை அழுத்தியவுடன் உங்கள் வீடியோ நீங்கள் தேர்வு செய்த இடத்தில் வந்திருக்கும். உங்களுக்கு கீழே இருப்பதை போல செய்தி வரும். அவ்வளவு தான் இந்த முறையைப் பயன்படுத்தி இணையத்தில் உள்ள வீடியோக்களை எளிதாக தரவிறக்கிக் கொண்டு நினைத்த நேரத்தில் பார்த்து ரசித்துக் கொள்ளலாம்.



"பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக நிகழ்ச்சி செய்யக் காத்திருக்கிறேன்"

–'ஒத்தக்கல்லு மூக்குத்தி...' புகழ் M.C. லோகா

"என்னோட அப்பா சின்ன வயசிலயே இறந்திட்டாரு. ஒரு பேண்ட் குரூப்ல சாமான் தூக்கி இறக்குற வேலய செஞ்சிக்கிட்டு இருந்தன். மியூசிக்ல எனக்கு ரொம்ப ஆர்வம். நான் சிறு பிள்ளை. அப்போ மைக் என்னவிட உயரமா இருந்தது. எனக்காக அத இறக்கி கொடுக்க யாரும் இல்ல" இப்படி வருத்தப் பட்டு சொன்னவர் வேறு யாருமல்லர், லோகாதான்.

யார் இந்த லோகா என்று நீங்கள் புருவங்களை உயர்த்து வது புரிகிறது. இன்று ஹிப்பொப் எனும் பிரபலமான இசையில் கொடிகட்டி பறக்கும் லோகநாதன்தான் இவர். அண்மையில் வெளிவந்த 'அம்பா சமுத்திரம் அம்பானி' திரைப்படத்தில் 'ஒத்தக்கல்லு...' பாடலுக்கு சொந்தக்காரரும் இவரே. இலங் கையை பூர்வீகமாக கொண்டாலும் மலேசியாவில் பிறந்து வளர்ந்த இவரது இயற்பெயர் லோகநாதன். இசையில் இவருக்கு கிடைத்த பட்டம் MC. (The Master of Ceremony). இதனா லேயே தனது பெயரை MC லோகா என்று சுருக்கமாக வைத்துக்கொண்டதாக குறிப்பிடுகின்றார்.

அண்மையில் தன் பூர்வீக உறவுகளை பார்ப்பதற்காக இலங்கை வந்திருந்தபொழுது எமது அலுவலகம் வந்திருந்தார். இன்று உலகில் அதிகளவில் வளர்ந்துவரும் இசை வடிவங்கள் பற்றியும் அவருடைய முயற்சிகள் பற்றியும் பல மணிநேரம் உரையாடினோம். பல ஆக்கபூர்வமான கருத்துக்களை எங்களு டன் பகிர்ந்து கொண்டார்.

ஹிப்பொப் என்ற இசை இன்று உலகளவில் பிரபல்ய மடைந்து வருகின்றது. பலராலும் பேசப்பட்டு வருகின்ற இசை என்று கூடச் சொல்லலாம். 'ஹிப்பொப்' என்ற சொல்லுக்கு அர்த் தம் என்ன என்று கேட்டோம்.

"ஹிப்பொப்னு சொல்றது ஒரு மியூசிக். ரெப் ஒரு பகுதி. கிராபிடி எண்டது ஸ்பிரேயிலேயே படம் வரையிறது. பீபோய் என்றது ஸ்டேஜ்ல டான்ஸ் பன்றது. பீட்பொக்ஸ் என்றது வாயிலேயே மியூசிக் பன்றது. இது எல்லாமே சேர்ந்ததுதான் ஹிப்பொப். ஒருகாலத்தில தென்னாபிரிக்காவில ஒரு இனத்தைச் சேர்ந்தவங்க கஷ்டமான அடிமை வாழ்வை வாழ்ந்துகிட்டு இருந்திருக்காங்க. தங்கள் எஜமானர்களால் அவர்கள் துன்பப் படும் விதத்தை ஒரு குரூப்பா உட்கார்ந்துகிட்டு ஒரு flow up ஆ சொன்னாங்க. அது இப்போ ரப். சிலர் தாங்கள் பட்ட கஸ்டத்த படமா வரைந்தாங்க. அது இன்னக்கி கிராபிடி. சிலர் அதுக்கு தகுந்த மியூசிக்க வாயால பண்ணுனாங்க. இன்னக்கி அது பீட் பொக்ஸ். முகத்துல எல்லாம் அடி வாங்க கூடாதுனு அவங்களுக் குள் ஒரு பைட் பழகுனாங்க. அது இன்னக்கி பீபோய். இப்படி எல்லா இனத்தவர்களும் கஷ்டப்பட்டாங்க. ஆனால் ஆபிரிக்கா வில இத ஹிப்பொப்பா கொண்டுவந்துட்டாங்க. தமிழர்கள் மத்தியில இத பிரபலப்படுத்தணும்னுதான் நான் கஷ்டப்பட்டுக் கிட்டு இருக்கன்" என்று ஹிப்பொப்பின் பூர்வீகம் பற்றி ஒரு நீண்ட விளக்கத்தினைத் தந்தார்.

ஹிப்பொப் இசை மூலம் தமிழை வளர்ப்பதுதான் தனது குறிக்கோள் என்று கூறும் லோகா, தமிழ் மொழியிலே ஹிப் பொப் இசையைக் கொண்டுவர நீறையவே கஷ்டப்பட்டிருப்பது அவரது பேச்சிலிருந்து புரிந்தது.

"ஹிப்பொப்ல நான் தமிழை வளர்த்துக்கிட்டு இருக்கன். எத்தனையோ பேர் தடுத்தாங்க. இது நம்ம கலாச்சாரம் இல்ல எண்டு சொன்னாங்க. கலாச்சாரத்தைக் கெடுக்குறீங்க எண்டு சொன்னாங்க. சரி, நம்ம கலாச்சாரம் எண்டு சொல்ற மக்கள் அவங்களோட பிள்ளைகள தமிழ் ஸ்கூலுல போடுறாங்களா? தமிழ்ப் படிக்க சொல்றாங்களா? இல்ல. ஆனால் என்னோட ஹிப்பொப்ல 100 வீதம் இலக்கியம்னா என்ன? இலக்கணம்னா என்ன? மரபு மொழினா என்ன? என்றத சொல்லிக்கிட்டே இருக்கிறேன்" சற்றே உணர்ச்சிவசப்பட்ட லோகாவை இயல்பு நிலைக்கு கொண்டுவர தான் பாடிய ரப் பாடலின் சில வரிகளை பாடச்சொல்லிக் கேட்டோம்.

"சொல்லிசை உலகம்! செந்தமிழ் திலகம்! இன்னிசை உணரும்! எட்டுத்திசை ஒலிக்கும்! மலைநாட்டு தலைநகரம் மந்திர மொழியாய் சொல்லிசை பொழியட்டும்..." என்று ரப்பில் தமிழ் மழை பொழிந்த அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டு இருக்க அவரே தொடர்ந்தார். "ரப்ல ராகா எண்டு ஒன்னு இருக்கு. தமிழ் வார்த்தைகள அதுல அழகு படுத்தணும். இன்னக்கி நிறயபேர் அதபற்றி தெரியாம பண்றதால ரப் எண்டா அர்த்தமில்லாதது எண்டு மக்கள் தப்பா புரிஞ்சிக்கிட்டு இருக்காங்க. நாங்க சொல்ற விடயங்கள தெளிவா, ஆழமா சொல்லணும். சரியா சொல்லணும். அப்படி இருந்தால் இன்னும் 10 வருடம் போனாலும் அது சாகாது" என்றார்.

கவிதை எழுதுவதில் ஆர்வம் காட்டிய லோகா இன்று ரப் இசைப்பாடகராக வலம் வருவதற்கு அவரின் மொழிப்பற்று முக்கிய காரணமாக அமைந்துள்ளது. மலேசியாவில் வாழ்ந்து வரும் இவர் மேலைநாட்டுக் கலாச்சாரத்தில் மோகம் கொள் ளாது மொழியையும் கலாச்சாரத்தையும் தன் பாடல்கள் மூலம் வளர்க்கிறார் என்பதைப் பார்க்கும்போது மிகவும் பெருமையாக இருக்கின்றது. அத்தோடு நம்நாட்டில் ரப் இசை செய்ய யாராவது ஆர்வமாக இருந்தால் அவர் களுக்கு பக்கபலமாக தான் இருப்பதாகவும் பெருமை யோடு கூறினார்.

தென்னிந்திய சினிமா துறையில் எப்படி சந்தர்ப்பம் கிடைத்தது என்று ஆவலுடன் கேட்டோம்.

"என்னோட ப்ரண்டோட அல்பம் ஒண்ணுல பேட் போய் (Bad Boy) எண்டு ஒரு song பண்ணி இருந்தன். அதுக்கு எல்லா மீடியாவிலயும் நல்ல வரவேற்பு கிடைத்தது. பிறகு நிறைய shows வர ஆரம்பிச்சி டுச்சி. சென்னைக்கு அடிக்கடி போய் வந்தேன். அப்போ அது மூலமா நடிகர் கருணாஸ் எனக்கு நல்ல ப்ரண்ட் ஆகிட்டார். அவர் மூலமாத்தான் எனக்கு இந்த வாய்ப்பு வந்துச்சி. அவரோட 'அம்பா சமுத்திரப் அம்பானில' 'ஒத்தக்கல்லு ஒத்தக்கல்லு' என்ற பாடல எனக்கு கொடுக்கும்போது நான் six eight பீட்ல மிக்ஸ் பண்ணி அவருக்கு காட்டினன். வழமையா four four லதான் மிக்ஸ் பண்ணுவாங்க. இப்படி பண்றது குறைவு. அவருக்கு அது ரொம்ப பிடிச்சி இருந்தது. இப்ப நான் இருக்கிற 'நோ என்ட்ரி' குரூப்போட சேர்ந்துதான் இந்த பாடல பண்ணினேன். நம்மட

இசைய வச்சி இன்னக்கி வெளிநாட்டுல மல்டி லெவல்ல மியூசிக் பண்ணிக்கிட்டு இருக்காங்க. நம்மட இசையில அவ்வளவு விசயம் இருக்கு. அத வச்சி நல்லா பண்ணலாம். அதுக்கான எல்லா வேலைகளையும் பண்ணிக் கிட்டுதான் இருக்கன்'' என் இசைமீது தான் கொண்டுள்ள அளவற்ற பற்றை விளக்கப்படுத்தினார்.

நம் நாட்டுக்காக என்ன பண்ண போறீங்க என்று கேட்டோம். பிறகுதான் புரிந்தது நாங்கள் கேட்டது ரொம்ப லேட் எண்டு. காரணம் அவர் இலங்கைக்கு வந்த மறுநாளே தன் இசை நண்பர்களை சந்தித்து இங்கு என்னமாதிரியான மியூசிக் செய்யலாம் என்று கலந்துரையாடியிருக்கிறார். இலங்கைக்கு என்று ஒரு பாடல் செய்ய இருக்கும் லோகா அது வெற்றியளிக்கு மிடத்து அடிக்கடி இலங்கைக்கு வந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இசையால் தன்னால் முடிந்த ஆறுதலை வழங்கு வதாக உறுதியளித்தார். ஓர் கலைஞனின் திறமையை அவரின் நம்பிக்கையும் மக்களின் ஆதரவும்தான் வளர்க்கும் என்பதுடன் மக்கள் மீது வைத்துள்ள பற்றும்தான் வளர்க்கின்றது என்பதற்கு இவர் நல்ல உதாரணம்.

இவரது 'ஹைபர்கெனாடிக்ஸ்' என்ற ஒரு அல்பத்தை இணையத்தில் பார்த்த டென்மார்க் அன்பர் ஒருவர் அங்கு நடந்த ஒரு விழாவுக்கு அழைத்து இருக்கின்றார். ''எங்க ளுக்கு அவங்க பாஸை ஒண்ணுமே புரியல. But நாங்க stage இல ஏறி ஹிப்பொப் பண்ணுனம். சந்தோஷத்துல அப்படியே வந்து எங்கள தூக்கிட்டு போய்ட்டாங்க'' என்ற லோகாவின் கண்களில் சந்தோஷத்தின் ஒளிச்சிதறல்கள் தெரித்தன. இவரது இரண்டாவது அல்பம் 'போர் வெல்லும் வார்த்தைகள்'. இதில் நல்ல பிரபலம் அடைந்த லோகாவுக்கு காத்திருந்தது அதிர்ச்சி. ஆனால் இது வழமையாக நடக்கும் ஒன்றுதான். இவரது குழுவினர் தனித்தனியாக செயற்படணும் என்று பிரிந்து சென்று விட்டார்கள். அவர்களை விட்டு பிரிந்து வந்த பிறகு தன் சுய முயற்சியால் 'நானா நீயா' என்று ஒரு அல்பம் தயாரித்திருக்கிறார். எதிர்பாராத விதமாக அது செம ஹிட்டாயிருக்கிறது.

''ஹைபர்கெனாடிக்ஸ் அல்பத்தில எம்.சி லோகானா யார் எண்டு தெரியாது. ஆனால் 'நானா நீயா' அல்பத்துல எம்.சி லோகாணு இண்டஸ்ட்ரீல நல்ல பிரபலம் கீடைத்தது. காதல்னா என்ன? தமிழன் என்டா யார்? தமிழ் கலாசாரம் எப்படி இருக்கணும் எண்டு எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆராய்ச்சி செய்து ஒவ்வொரு பாட்டையும் பண்ணினன். நல்லா பிரபல் யம் ஆனது. நிறைய கலைஞர்கள் என்ன வந்து கூப்பிட்டு இந்தமாதிரி பண்ண சொன்னாங்க. அப்போ நிறைய வேலைகள நான் செய்துட்டு இருந்தப்போ என்னோட குரூப் என்னவிட்டு போனது எனக்கு மிகப்பெரிய இழப்பா இருந்துச்சி. அப்பதான் 'நோ என்றி' குரூப்ல எனக்கு அழைப்பு வந்துச்சி. என்னோட கொள்கைதான் அவங்களுக்கும் இருந்துச்சி. அதுக்கப் புறம் அவங்க ளோட சேர்ந்து வேலை செய்ய ஆரம்பிச்சன். இப்போ மியூசிக் இண்டஸ்ட்ரீக்கு நான் வர காரணமா இருந்த எனக்கு நிறய உதவி செய்த அண்ணன் மிஸ்தாஜியோட king makes the king என்ற பாடல பண்ணிக்கிட்டு இருக்கன்'' என்ற லோகாவுக்கு நன்றாக பாடல் மற்றும் கவிதை வரிகள் எழுதவும் வருமாம்.

ஒவ்வொரு கலைஞனும் கடந்து வந்த பாதையைப் பார்த்தோமானால் அது மிகவும் கரடு முரடாக இருக்கும். அதற்கு லோகா ஒன்றும் விதிவிலக்கல்ல. அதிலும் தான் பட்ட கஷ்டங்களை வெளிக்கொணர ஹிப்பொப் ஒரு சிறந்த தேர்வு என்றுகூட சொல்லலாம். இன்று யுத்த வடுக்களை சுமந்து வாழும் வன்னி மக்களுக்காக, தான் மேடை நிகழ்ச்சிகளை செய்யக்கூட காத்திருக்கின்றார். ஆனால் இவ்வாறான கலைஞர் களுக்கு களம் அமைத்து கொடுப்பதற்கு யாரும் முன்வருவ தில்லை. இசைக்கு வசமாகாத உயிரினங்களே இல்லை. இன்று எம் மக்களின் துன்பம் நீக்கி அவர்களை பழையபடி நிம்மதியாக வாழவைப்பது காலத்தின் தேவை. வெறுமனே பாடல் என்பதைத் தவிர்த்து ரப் உடன் கூடிய ஹிப் பொப் என்ற வித்தியாசமான பரிணாமம் மனமகிழ்ச்சிக்கு ஒரு சிறந்த மருந்து. ஆகவே இவ்வாறான திறமையான கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து அவர்களைக் கொண்டு எம்மக்கள் இழந்த மகிழ்ச்சியை மீளப் பெற வழி சமைக்கலாம் என்பது கண்கூடு. அதைவிட மக்களு டைய பிரச்சினைகள், அவலங் களை வெளியுலகுக்கு தெரியப்ப டுத்தும் ஒரு ஊடகமாக ஹிப் பொப் இசையை பயன் படுத்தலாமல்லவா?

■ நேர்கண்டவர்: சாகித்யா

சதா

குழந்தைகளுக்கு உணவூட்டும்போது...

மொட்டை மாடியில் மாலை வேளையில் வெறுமனே காற்று வாங்கச் செல்லும்போது நகரத்து மொட்டை மாடிகள் ஒவ்வொன்றிலும், சாப்பாடு உண்ணச் சொல்லி, குழந்தைகளைக் கெஞ்சிக் கொண்டிருக்கும் தாய்மார்களை பார்க்க முடியும்..

குழந்தைகளுக்கு உணவூட்டும் சிரமம் பெரும்பாலும் தந்தையர் அறியாததே! 'மூன்று கண்ணன் வாறான். சாப்பிடு' என பயமுறுத்தியோ 'சொக்லேட் வாங்கித் தாறன் சாப்பிடு' எனச் சொல்லி ஆசைக் காட்டியோ எப்படியேனும் நாலுவாய்ச் சாப்பிட்டால் போதும் என அல்லாடும் மனது அன்னையர்க்கே உரியது. குழந்தைகளுக்கு உணவூட்டும் தாய்மார்கள் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என மருத்துவத்துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

1. குழந்தைகள் உணவைச் சிந்திவிட்டால் திட்டுவதோ, அடிப்பதோ, மிரட்டுவதோ கூடாது. கூடவே குழந்தைகளுக்கு எவ்வளவு உணவு தேவையோ அந்த அளவு மட்டுமே உண்ணப் பழக்குங்கள். போதும் எனுமளவுக்கு உண்டபின் அதிகமாய் உண்ணச் சொல்லிக் கட்டாயப்படுத்த வேண்டாம்.

2. சோறு சாப்பிடு, கீரை சாப்பிடு. அப்படி சாப்பிட்டால் சொக்லேட் வாங்கித் தாரன், ஐஸ்கிரீம் வாங்கித் தாரன் என்று சொல்வது தவறு. அப்படிச் சொல்வதனால் சோறு என்பது மோசமான பொருள் என்றும் சொக்லேட் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவை நல்ல பரிசுப் பொருட்கள் போன்ற ஒரு தோற்றம் குழந்தைகளின் மனதில் பதிந்துவிடும். நாட்கள் செல்லச் செல்ல குழந்தைகளுக்கு உணவின் மீதான நாட்டம் குறையவும் இனிப்புகளின் மீதான விருப்பம் மிகைப்படவும் இது ஒரு காரணமாகிவிடுகிறது.

3. இனிப்புகளை முழுமையாய் தவிர்க்காதீர்கள். அப்படி மறுக்க மறுக்க குழந்தைகளுக்கு இனிப்புகளின் மீதான ஆர்வம் அதிகரித்துக் கொண்டே வரும். பின்பு வாய்ப்புக் கிடைக்கும் போது வட்டியும் முதலுமாய் சேர்த்து இனிப்பை உண்டு உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளும். எனவே ஒரு குறிப்பிட்ட அளவு இனிப்பு வகைகளை கொடுத்து வருவதே சிறப்பானது.

4. குறிப்பாக அதாவது 90 வீதம் ஆரோக்கியமான உணவும் மீதி பத்து வீதம் இனிப்பு, பொரியல் போன்றவற்றையும் உண்பதும் நல்லது. அந்த இனிப்பு வகைகளிலும் அதிக கொழுப்பான செயற்கைப் பொருட்கள் அதிகம் அடங்கியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

5. அதிக கொறித்தல் பொருட்களை குழந்தைகளுக்கு வழங்காமல் இருப்பதே நல்லது. குறிப்பாக குழந்தைகளுக்கு சரியான நேரத்தில் உணவு ஊட்டுவதும், சரியான நேரத்தில் தின்பண்டங்கள் கொடுப்பதும் நல்லது. எப்போதும் ஏதேனும் கொறித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் ஆரோக்கியமான மதிய உணவையோ இரவு உணவையோ தேவையான அளவு சாப்பிட மறுக்கும். வீடுகளில் தேவையற்ற உணவுப் பொருட்களை வாங்கி நிறைக்காதீர்கள். உங்களுக்குப் பிடிக்கும் என்பதற்காக நீங்கள் வாங்கி வைக்கும் குளிர்பானமோ, சிப்ஸோ குழந்தை சாப்பிடக் கூடாது என நீங்கள் எண்ணுவதில் அர்த்தமில்லை. குறைந்தபட்சம் குழந்தைகளிடமிருந்து அவற்றை முழுமையாய் மறையுங்கள்.

6. இன்றைக்கு எங்கும் பரவியிருக்கும் குளிர்பானங்கள், பதப்படுத்தப்பட்ட பழச்சாறுகள், எனர்ஜி பானங்கள் போன்றவை குழந்தைகளுக்கு எந்த நன்மையும் தருவதில்லை என்கிறது ஜோன்ஸ் பீடியாட்ரிக்ஸ் ஆய்வு முடிவு ஒன்று. மாறாக இவை உடல் நலத்தைக் கெடுத்து விடுகிறதாம். எனவே 100 வீதம் பழச்சாறு என்றெல்லாம் கவர்ச்சிகரமாய் வரும் விளம்பரங்களை நம்பி ஏமாந்துவிடாதீர்கள்.

7. பழச்சாறு போன்றவற்றுக்குப் பதிலாக தண்ணீர் அதிகமாய் அருந்துவதற்குக் குழந்தைகளை உற்சாகப்படுத்துங்கள். எல்லோரும் எல்லாவற்றையும் விரும்பமாட்டார்கள் என்பதும், நமக்கு மிகவும் பிடித்தது இன்னொருவருக்கு சுத்தமாகப் பிடிக்காமல் போகும் என்பதையும் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். பிடிக்கவில்லை என்று சொல்வதனால் உங்கள் குழந்தையை திட்டாதீர்கள்.

8. குழந்தைகளுக்கு ஒரே மாதிரியான உணவை கொடுத்து போரடிக்காதீர்கள். ஒரே மாதிரியான உணவைக் கொடுக்க வேண்டி வந்தால் அதன் வடிவத்தையோ சுவையையோ எதையேனும் வித்தியாசமாய் காண்பியுங்கள். வித்தியாசமானவை குழந்தைகளுக்குப் பிடிக்கும் என்பதையும் பிடித்தமான பாத்திரத்துக்காகவே குழந்தைகள் உணவை உண்பார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

9. ஒரு கடி, ஒரு வாய் என குழந்தைகளை உற்சாகப்படுத்துங்கள். காய்கறி போன்றவற்றை தினமும் கொஞ்சம் கொஞ்சம் உண்ணப் பழக்கினாலே அவை நீண்டகால உணவுப் பழக்கமாய் மாறிவிடும். எனினும் எதையும் அளவுக்கு மீறி வற்புறுத்தாதீர்கள்.

10. குழந்தைகளுக்கு பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை பறவை, படகு என வித்தியாசமான வடிவங்களில் வெட்டிப் பரிமாறிப் பாருங்கள். குழந்தைகள் வெகுவாக விரும்பி உண்பார்கள்.

சிறு சிறு சமையல் வேலைகளில் உங்கள் குழந்தைகளை ஈடுபடுத்துங்கள். அவர்களுக்கு உணவின் மீதான நாட்டம் அதிகரிக்கும். 'நான் கழுவிய கரட் இது' என்பது போன்ற மனரீதியான தொடர்பு ஏற்படும்.

இவற்றில் உங்களுக்கு வசதியான, பிடித்தமான சில வழிகளை முயன்று பாருங்கள். உங்கள் உணவூட்டும் வேலை எளிதாகிவிடும்.

கோப்பை வென்றது தென் ஆபிரிக்கா; வீழ்ந்தது பாகிஸ்தான்.

கடந்த வாரம் துபாயில் பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதையடுத்து 3-2 என ஒருநாள் தொடரை கைப்பற்றிய தென்னாபிரிக்க அணி கோப்பை வென்றது. துபாயில் பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் மோதிய ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் துபாயில் நடந்தது. முதல் நான்கு போட்டிகளின் முடிவில் 2-2 என இரு அணிகளும் சமநிலையில் இருந்தன. ஐந்தாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி துபாயில் நடந்தது. "டொஸ்" வென்ற தென்னாபிரிக்கா கப்டன் ஸ்மித் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

தென்னாபிரிக்க அணிக்கு ஸ்மித் (14) சுமாரான தொடக்கத்தை தந்தார். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆம்லா (62), டிவிலியர்ஸ் (61) மற்றும் டுமினி (59) ஆகிய முன்னணி வீரர்கள் அரைச் சதம் அடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். சகலதுறை ஆட்ட வீரர் காலிஸ், 83 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். தென்னாபிரிக்க அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 317 ஓட்டங்களைக் குவித்தது.

கடின இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு ஹசன் (39), ஹபீஸ் (59) ஆகியோர் சிறந்த தொடக்கத்தை தந்தனர். ஆனால் மத்திய தர வரிசை சீனியர் வீரர்கள் யூனிஸ் கான் (3), முகமது யூசுப் (3) ஆகியோர் சொதப்பினர். கப்டன் அப்ரிதி (24), ரசாக் (39) ஓட்டங்கள் மட்டுமே எடுத்தனர். உமர் அக்மல் மட்டும் அதிகபட்சமாக 60 ஓட்டங்கள் எடுத்து ஆறுதல் தந்தார். மற்ற வீரர்கள் ஏமாற்ற, பாகிஸ்தான் அணி 44.5 ஓவரில் 260 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. ஆட்ட நாயகனாக காலிஸ் தெரிவு செய்யப்பட்டார். இதையடுத்து 3-2 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை வென்ற தென்னாபிரிக்க அணி கோப்பையைக் கைப்பற்றி அசத்தியது. தொடர் நாயகன் விருதை ஆம்லா தட்டிச் சென்றார்.

ஐ.சி.சி. தரப்படுத்தல் : இந்தியாவுக்கு மூன்றாமிடம்

ஒருநாள் அணிகளுக்கான தரவரிசை பட்டியலில் தென்னாபிரிக்க வீரர் ஹஷிம் ஆம்லா 854 புள்ளிகளுடன் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார். இந்திய வீரர் விராட் கோஹ்லி 7 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில், ஒருநாள் அணிகளுக்கான புதிய தரவரிசை பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. இதில் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை இழந்த அவுஸ்திரேலியா அணி 128 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. அவுஸ்திரேலிய மண்ணில் முதன் முறையாக கோப்பை வென்ற இலங்கை அணி 3 புள்ளிகள் அதிகம் பெற்று(118), இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. இந்திய அணி(117 புள்ளி) மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. மீண்டும் இரண்டாவது இடத்தை பிடிக்க இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை 5-0 என வெல்ல வேண்டும். அப்போது தான் 121 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பிடிக்கலாம். மாறாக 4-1 என வென்றால் தசம புள்ளி வித்தியாசத்தில் தொடர்ந்து மூன்றாவது (118) இடம் தான் கிடைக்கும். தென்னாபிரிக்க அணி (115) நான்கு மற்றும் பாகிஸ்தான் (100) ஆறாவது இடத்தில் உள்ளன. ஐந்தாவது இடத்தில் இங்கிலாந்து (112) உள்ளது.

ஒருநாள் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசை பட்டியலில் தென்னாபிரிக்க வீரர் ஹஷிம் ஆம்லா(854 புள்ளி) முதலிடத்தில் உள்ளார். இந்திய வீரர் செவாக்(713 புள்ளி) ஒரு இடம் முன்னேறி 7 ஆவது இடத்தை பெற்றுள்ளார். சச்சின்(711 புள்ளி) 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். கப்டன் தோனி(786 புள்ளி) நான்காவது இடத்தில் நீடிக்கிறார். பந்துவீச்சாளர்கள் பட்டியலில் நியூசிலாந்து கப்டன் வெட்டோரி முதலிடத்தில் இருக்கிறார். இதன் "டொப்-10" பட்டியலில் இந்திய பந்துவீச்சாளர்கள் யாரும் இடம்பெறவில்லை. பிரவீண் குமார் 11 மற்றும் ஹர்பஜன் 15 ஆவது இடத்தில் உள்ளனர்.

சச்சின் ரகசியம்: தீபிகா ஆர்வம்

கடந்த 21 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடி வருகிறார் சச்சின். இதன் ரகசியம் பற்றி அறிய ஆர்வமாக இருக்கிறேன் என வில்வித்தை வீராங்கனை தீபிகா குமாரி தெரிவித்துள்ளார். இந்தியாவின் சிறந்த வில்வித்தை நட்சத்திரம் தீபிகா குமாரி. சமீபத்திய கொமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்று அசத்தினார். அடுத்து சீனாவின் குவாங்சு நகரில் நடக்க உள்ள ஆசிய விளையாட்டிலும்(நவ. 12-27) தங்கப்பதக்கம் வெல்ல காத்திருக்கிறார். இதற்காக தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ள இவர் இந்திய அணியின் சாதனை நாயகன் சச்சின் குறித்து வியப்பு தெரிவிக்கிறார்.

இது குறித்து தீபிகா "நான் சிறுவயதில் இருந்தே சச்சினின் ரசிகை. எனது "ரோல் மொடலாக" அவரை தான் கருதுகிறேன். கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக கிரிக்கெட் விளையாடி வருகிறார். இவ்வளவு நீண்ட காலம் விளையாடுவதன் ரகசியம் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளேன். கிரிக்கெட்டைப் போல வில்வித்தையில் சாதிக்கவும் அதிக கவனம் தேவை. மிகுந்த ஒழுக்கமாகவும் இருக்க வேண்டும். இது தொடர்பாக சச்சின் எனக்கு வழிகாட்ட வேண்டும். அவரிடம் இருந்து நிறைய ஆலோசனைகள் பெற விரும்புகிறேன். அவரை சந்தித்து மிக நீண்ட நேரம் பேச ஆசைப்படுகிறேன்" என கூறியுள்ளார்.

செய்னாவுக்கு கேல் ரத்னா விருது

இந்திய பெட்மின்டன் நட்சத்திரம் செய்னா நேவலுக்கு மத்திய விளையாட்டு அமைச்சர் எம்.எஸ்.கில் ராஜிவ் கேல் ரத்னா விருது வழங்கினார். இந்திய விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உயர்ந்தபட்ச விருது ராஜிவ் கேல் ரத்னா. இது பதக்கம் மற்றும் 7.5 இலட்ச ரூபாய் மதிப்பு கொண்டது. இந்த விருது இந்த ஆண்டு பெட்மின்டன் நட்சத்திரம் செய்னா நேவலுக்கு வழங்கப்பட்டது. கடந்த ஒகஸ்ட் 29 இல் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீல் விருதுகளை வழங்கினார். அப்போது செய்னா நேவல் பாரிசில் நடந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க சென்றிருந்ததால் விழாவில் கலந்து கொள்ளவில்லை. இதையடுத்து அண்மையில் டில்லியில் நடந்த சிறிய விழாவில் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

ஊடக மயக்கம்.

சக்திக்கு வாழ்த்துக்கள்

12 வருடங்களாக வானொலி சேவையில் தடம் பதித்து வரும் சக்தி எப்.எம் இவ்வருடம் "இசை விருது" எனும் வைபவத்தினை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது இசையாளர் களைக் கௌரவிக்கும் முகமாக அந்நிகழ்சி அமையவுள்ளது. அவ் வைபவத்தினை எதிர்பார்த்த வண்ணம் சக்தி எப்.எம். இன் ரசிகனான நான் காத்திருக்கிறேன். அந் நிகழ்வில் இசையாளர்கள் எவ்வாறான வகையில் கௌரவிக்கப்படவுள்ளனர் என்பதை அறியவும் ஆர்வமாகவுள்ளேன்.

ம. மேகவர்ணன்
தாழங்குடா, மட்டக்களப்பு

தவறான பாதைக்கு வழிகாட்டாதீர்கள்!

நம் நாட்டு தொலைக்காட்சிகள் இன்று எமது இளைய சமுதாயத்தினரை எத்தனையோ வழிகளில் தவறான பாதைக்கு அழைத்துச் செல்கின்றது. உதாரணமாக சக்தி டி.வி. யில் ஒளிபரப்பாகும் திரைப்படங்களில் இடம்பெறும் புகைத்தல் மற்றும் மதுபானக் காட்சிகளை மறைக்கும்போது இளையவர்களுக்கு அதனை அடிக்கடி ஞாபகப்படுத்துவதாகவே உள்ளது. இது தவிர நாடகங்களில் வக்கிர குணமுடையவர்களே அதிகமாக காட்டப் படுகின்றனர். இதுவும் தவறான வழிகாட்டலாகவே அமைகின் றது. இவற்றைத் தவிர்த்து 'விந்தை உலகம்', 'சங்கே முழங்கு' போன்ற நிகழ்சிகள் வரவேற்கத்தக்கவையாகவே உள்ளன. இவ்வாறான அறிவுபூர்வமான நிகழ்ச்சிகளை அதிக மாக ஒளிபரப்பாக்குவது சிறந்ததாக அமையும்.

க.வேலாயுதம்,
தலவாக்கலை

நெஞ்சம் கவர்ந்த 'நெஞ்சம் மறப்பதில்லை'

சக்தியில் திங்கள் முதல் வெள்ளி வரை 10.30 மணியளவில் ஒளிபரப்பாகும் 'நெஞ்சம் மறப்பதில்லை' எனும் நிகழ்ச்சி அனைவரதும் பாராட்டைப் பெற்றுவருவது குறுப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சியில் என் உள்ளம் கவர்ந்த இனிமையான பழைய பாடல்கள் ஒளிபரப்பாகின்றன. இதன் ஒளிபரப்பாளரது குரலும், ஒவ்வொரு பாடல் பற்றி அவர் தரும் தகவல்களும் வரவேற்கத் தக்கன.

பா.செந்தமிழ் செல்வன்
நெல்லியடி, யாழ்ப்பாணம்

இதமாக வீசும் நேற்றைய காற்று'

வானலை முதல்வன் சூரியனின் 'நேற்றைய காற்று' அன்று தொட்டு இன்று வரை தனக்கென ஒரு தனியிடம் பிடித்துள்ளது என்றால் அது மிகையாகாது. இனிமையான இரவு வேளையை இசையோடு கலந்து சிறப்பிக்கின்றது. பாடல்களோடும் அதற்கேற்ற சந்தர்ப்பத்தோடும் குறிப்பிட்ட அறிவிப்பாளர் ஒன்றித்துப் போவது அவருக்கே உரிய சிறப்பு. அத்தோடு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தொனிப்பொருளில் நிகழ்ச்சி அமைவது வரவேற்கத்தக்கது. வாழ்த்துக்கள்.

இ. பிரமிளா, பதுளை

நேயர்களை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்

அண்மையில் அன்னை வானொலி தென்றலில் ஒரு பெண் அறிவிப்பாளர் நிகழ்ச்சி செய்துகொண்டிருந்தார். நேயர்கள் விருப்பப் பாடல்களை கேட்கும் நிகழ்ச்சி அது. ஒரு அன்பர் தொலைபேசியில் உரையாடினார். இறுதியில் "அக்கா ஒரு புதிய பாடலை தருவீர்களா?" என்றார். உடனே அம்மணி பதில் கூறா மல் "நன்றி தொடர்பினை ஏற்படுத்தியதற்கு" என்றார். எனக்கோ அவர் மீது கடும் எரிச்சல்தான் வந்தது. தர முயற்சிக்கிறோம் அல்லது தொடர்ந்து கேட்டுக் கொண்டு இருங்கள் என்று ஏதாவது ஒன்றை சொல்லி இருக்கலாமே. எல்லா வானொலிகளுக்கும் வழி காட்டியாக இருக்கும் ஒரு மூத்த வானொலியில் இப்படி நடைபெறுவது நல்லதல்ல. தொடர்பினை ஏற்படுத்தும் நேயர்கள் ஒன்றும் தரக்குறைவானவர்கள் அல்லர்.

ஏ.எம்.எம். ஜமீல், ஓட்டமாவடி

மகிழ்ச்சி தரும் 'போட்டுத்தாக்கு'

இன்று எல்லா வானொலிகளையும் முந்திக்கொண்டு நிகழ்ச்சிகள் படைக்கின்றதில் வசந்தம் எப்.எம் முன் நிற்கின்றது. குறிப்பாக மாலை 7 மணி முதல் 9 மணிவரை ஒலிபரப்பாகும் 'போட்டுத்தாக்கு' பற்றி சொல்லத் தேவையே இல்லை. வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும் என்பார்கள். அந்தவகையில் எந்த கஷ்டத்தில் இருப்பவரும் இந்த இரண்டு மணித்தியாலங்கள் தங்கள் கஷ்டங்களை மறந்து சிரிக்கலாம். நான்கு அறிவிப்பாளர் களும் தங்கள் வித்தியாசமான குரல்களில் இரண்டு மணித்தி யாலங்களை அட்டகாசப்படுத்துகிறார்கள்.

இப்படி வார நாட்களில் தொடர்ந்து இரண்டு மணித்தியாலங்கள் நேரடியாக ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியை நான்கு குரல்கள் சேர்ந்து படைப்பது வானொலி வரலாற்றில் இதுவே முதல் தடவை.

கா. நவதீபன்
வாசல வீதி, கொட்டாஞ்சேனை

'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இத்தீவினையில், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

'ஊடக மயக்கம்'
'இருக்கிறம்'
3, டொரிங்டன் அவனியு,
கொழும்பு – 07,
மின்னஞ்சல் – irukiram@gmail.com

இலங்கையிலிருந்து மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் ஜனரஞ்சக பொழுதுபோக்கு சஞ்சிகையான 'இருக்கிறம்' தற்பொழுது நாடுமுழுவதும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளை உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து 'இருக்கிறம்' சஞ்சிகைக்கான விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்ய முடியும். விநியோகஸ்தர்கள் தங்களது சுயவிபரங்களை கீழுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மின்னஞ்சல் மூலமாகவும் உங்களது சுயவிபரங்களை அனுப்பி வைக்கலாம்●

விநியோகஸ்தர்கள் தேவை

முகாமையாளர்,
விளம்பர சந்தைப்படுத்தல் பிரிவு, இருக்கிறம்,
03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07
தொலைபேசி - 011 - 3150836, 011 - 2555529மின்னஞ்சல் - irukiram@gmail.com

Jeya Offset Printers, No. 29 St`Sebastian

திரைத்துறையினரும் ஒன்றுகூடி நடத்தும் ஒரு போராட்டம்!

தமிழர்களின் வாழ்வாதாரத்திற்காக ஒருங்கிணைந்த போராட்டம்!